www.padippakam.com

Jude

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 11-17,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 317

## தேர்தலுக்கு முன் தொடுப்பு நகர்வு!

## சர்வதேச அரங்கில் அன்ரன் பாலசிங்கம்





## நோயும் பயிற்சியும்!

## டயானா கொலை?

## கடத்தப்பட்ட நடிகை!



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மீண்டு வருக

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

ஒடுக்குமுறைக்கெதிரானவர்களுக்கும்
விடுதலைப் போராளிகளுக்கும்
ஒடுக்கும் அரசுகள்
வழங்கும் முத்திரை
"பயங்கரவாதிகள்!"

ஒடுக்குமுறை அரசுகள்
வழங்கும் பரிசு
மரண தண்டனை!

குர்திஷ் போராளிகள்
இயக்கத் தலைவருக்கும்
துருக்கி அரசு
கொடுத்துள்ள பரிசு
மரண தண்டனை!

பிரிவினைக்காக போராடியது
குற்றம் என்றும்,
30 ஆயிரம் பேர் பலியாக
காரணமாக இருந்ததாகவும்,
அநியாயத் தீர்ப்புக்கு
துருக்கி நியாயம் கற்பித்துள்ளது!

துருக்கிப் படைகளால்
பலியான குர்திஷ் மக்களின்
எண்ணிக்கையையும்
போராளிகளின் தலைவருக்கு
காணிக்கையாக்கிவிட்டது!

மரண தண்டனை என்று
முன்கூட்டியே தீர்மானித்துவிட்டே
போராளிகளின் தலைவர்மீது
போலி விசாரணை நடந்தது!

அடக்குமுறை அரசுகள்
நினைத்தால்
நீதியைத் தமக்குச் சார்பாக
வளைக்க முடியும்!

நீதிபதிகளும்
அடக்கும் அரசுகளுக்கு
கருவிகளாக மாறுவது
புதிதுமல்ல: புதிருமல்ல!

குர்திஷ் தலைவர்
அப்துல்லா ஒகலானுக்கு
விதிக்கப்பட்ட மரண தண்டனை,
குர்திஷ் மக்களது
போராட்டத்துக்கு விடுக்கப்பட்ட
பகிரங்க எச்சரிக்கை!

தண்டனைகள் மூலமும்
கொடூரங்கள் ஊடாகவும்
போராடும் மக்களை
அச்சுறுத்தி அடக்குவதற்கு
ஒடுக்குமுறையாளர்கள்
பின்நின்றது கிடையாது!

இந்த விடயத்திலும்
உலக அபிப்பிராயம்
உரிய நேரத்தில்
ஓங்கி ஒலிக்கவில்லை!

குர்திஷ் தலைவர்
கைதான உடனேயே
துருக்கியை உலகம்
நெருக்கியிருக்க வேண்டும்!

ஈராக்கை ஒடுக்க
குர்திஷ் பிரச்சனையை
துருப்புச் சீட்டாக
பயன்படுத்துகிறது அமெரிக்கா!

குர்திஷ் மக்களை
சதாம் ஒடுக்குவதாக
நீலிக் கண்ணீர் வடித்ததும்
அமெரிக்காதான்!

ஈராக் மீதான
நாசகாரத் தாக்குதல்களுக்கு
குர்திஷ்மீதான காதலாக
வேடமிட்டதும் அமெரிக்காதான்!

அதே அமெரிக்கா,
அதே குர்திஷ் மக்களது
அன்புக்குரிய தலைவரை
துருக்கி கைது செய்தபோது
மௌனம் சாதித்தது!

அமெரிக்கா நினைத்திருந்தால்
கைதான தலைவரை
விடுவிக்க வைத்திருக்கலாம்!
மரண தண்டனை
என்று தீர்ப்பெழுதாமல்
தடுத்தும் இருக்கலாம்!

குர்திஷ் மக்களுக்காக
ஈராக்மீது தாக்குதலுக்கு
தயங்காத அமெரிக்கா,
குறைந்த பட்சம்
துருக்கியை மிரட்டியிருக்கலாமே!

தீர்ப்பு எழுதப்படும்வரை
வேடிக்கை பார்த்து
கைகட்டி நின்றதேன்?

உலக அபிப்பிராயம்
என்பது இதுதான்!

ஒவ்வொரு நாடும்
தத்தம் நலனில் இருந்தே
கண்ணோட்டங்களை
வெளியிட்டு வருகின்றன!

அழுதும் பிள்ளையை
அவள்தான் பெற வேண்டும்!

துயர்களைத் தாங்கி
மனம் தளராது போராடி
எழுந்து நிற்கும் போதுதான்
உலகம் திரும்பிப் பார்க்கும்!
தானாக முன்வந்து
தர்ம நியாயம் பேசாது!

குர்திஷ் தலைவர் மீதான
மரண தண்டனையையும்
உடன் கண்டிக்க உலகம்
முன்வரவில்லை!

உலகெங்கும் உள்ள
குர்திஷ் மக்கள்
ஆங்காங்கே
போராட்டங்களை
ஆரம்பித்து
கிளர்ந்தெழுந்தனர்!

அதன் பின்னரே
உலகம் சற்றுப் பேசுவதற்கு
ஆரம்பித்தது!
மரண தண்டனையை
மறுபரீசீலனை செய்யுமாறு
கேட்கத் தொடங்கியது!

குர்திஷ் போராளிகள்
தலைவர்
அப்துல்லா ஒக்லானுக்கு
ஆதரவாக
வாசக நெஞ்சங்கள் சார்பாக
முரசின் கரமும் உயருகிறது!

ஒடுக்குமுறையின்
இரும்புக் கரத்திலிருந்து
ஒக்லானே! மீண்டு வருக!!
அடக்குமுறை மாண்டு அழிக!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்



அபதுல்லா ஒக்லான்

# ஆன்மீகம்

## வழிபாடு



ஒருவன் பிறர் சமயத்தை மதிப்பவனாயின் தம் சமயத்தை மதிப்பவனாவான். ஒவ்வொருவருக்கும் மன நம்பிக்கையை வளர்ப்பதுவே சமயமாகும். ஒவ்வொரு சமயங்களும் போதிப்பவையும் நம்பிக்கையின் வளர்ச்சியையே.

இந்த நம்பிக்கையின் வளர்ச்சியே சமயவழிபாடு எனப்படுகிறது. ஒவ்வொருவரும் மனத்தை தூய்மையாக வைத்திருப்பதையே எல்லா சமயங்களும் அறிவுறுத்துகின்றன.

இம்மனத் தூய்மையொன்றே பக்தி நிலை எனக் கூறப்படுகிறது. இப்பக்தியின் மூலம்தான் சமயநெறிகள் மேன்மை பெற முடிகிறது.

இவ்வாறு மனத் தூய்மை மூலம் உண்டாகும் நம்பிக்கையே சிறந்த-மிகுந்த பக்தியின் பெருமையை அடைகிறது.

இந்த பக்தியினால்தான் சகல உயிர்களிடத்திலும் அன்பு-கருணை கொள்ள முடிகிறது. இப்படியான பக்தியின் சிறப்புத் தன்மைதான் வழிபாடாகும்.

ஆறுமுகம் தங்கரத்தினம், காரைநகர்.

## ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) வழங்கிய எச்சரிக்கை

ஒரு சமயம், ஹஜ்ரத் அபூ ஸுப்பியான் (ரலி) அவர்களின் மனைவி, ஹஜ்ரத் ஸைது இப்னு அர்கம் (ரலி) அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தவணையில், ஒரு பெண் அடிமையை 800 திர்ஹமுக்கு கொடுத்திருந்தார்கள். மற்றொரு சந்தர்ப்பத்தில், அதே அடிமைப் பெண்ணை 600 திர்ஹமுக்கு விலைக்கொடுத்து வாங்கிக்கொண்டார்கள்.

இதனைக் குறித்து அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் விசாரித்தார்கள். பிறகு அபூஸுப்பியான் (ரலி) அவர்களுடைய மனைவியிடம் "நீங்கள் செய்தது மிகவும் பாவச் செயலாகும். அதிகமாகப் பெறப்போகும் 200 திர்ஹமும் உங்களுக்கு வட்டியாகிவிடுகின்றது. இதனால் நீங்கள் செய்த நன்மைகள் எல்லாம் பாழாகிவிடுமே!" என்று எச்சரித்தார்கள்.

பிறகு அவர்கள் அல்லாஹுவுக்கு பயந்து அந்த 200 திர்ஹமை விட்டுக்கொடுத்துவிட்டார்கள். "அல்லாஹ்வுடைய எச்சரிக்கை வந்த பிறகு எவரொருவர் தன்னுடைய பாவங்களை விட்டுத் திருந்தி விடுகிறார்களோ, அவர்களது முந்திய பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிடுகிறான்" என்று ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

காத்தான்குடி மொஹமத் எஸ். பாரூக்.

# கவிதைப் போட்டி இல. 314

## பரிசுக்குரிய கவிதை

### நகரட்டும்

"அகதியின் குஞ்சுகள் தாம்,
ஆடுதுகள் இப்போது!
நகரட்டும், ஒரு காலம்
நாடாண்டும் காட்டுங்கள்!"

செல்வி இ. தமிழரசி,
ஈச்சந்தீவு- கிண்ணியா.

### யார் அறிவார்?

செம்மணியில் சிதைவுற்ற
மனிதக் கூடு
சிறகு கட்டிப் பறந்ததையோ
சிறுவர்களே!
யார் அறிவார்? இரகசியத்தை
தேடிப்பாரும்!

செழியன். ஜெ. பேரின்பநாயகம்- மட்டக்களப்பு.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### அகதி முகாம்

தீர்ந்துவிட்ட
முகாம் உணவு!
தீரப் பார்க்கும்
அருவிக் குளம்
தீரும் முன்னே
தீவிரக் குளிப்பு!

எம்.எச்.எம். மூபீஸ்-
மருதமுனை-03.

### பாருங்கள்

தெற்கின் கடல்களே!
தெற்கின் கடல்களே!!
வெறிச்சோடிப்போன
வடக்கின் கடல்களை
வந்து பாருங்கள்!

கவிஞர் 'திக்கவயல்'-
அம்பாறை.



### அபகரிப்பு

பலப் பிரயோகிப்பால்
பிறிக்கு வந்தோம்!
நில அபகரிப்பால்
படலுக்குள் நிற்கிறோம்!!

அ. சுதர்சன்- மட்டக்களப்பு.

### (நீ) (போ) ராடு

நீராடு நீராடு.
நீதி வரவேண்டுமென்று,
நீதி கிடையாவிட்டால்,
நீ போராடு. போராடு.

சுமண் வினோத்- மட்டக்களப்பு.

### கனவும் நனவும்...!

அமைதிக் கடலில்-சிறார்
ஆனந்தக் குளிப்பு.
தென்மேற்கிலிது நனவு
வடகிழக்கிலோ- வெறுங்கனவு!

அ. சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

### எமது சுற்றுலா

சுற்றுலா செல்ல
எங்களுக்கும் ஆசை:
உள்நாட்டை
சுற்றிவர அச்சம்!
உள்ளூர் கடற்கரைதான்
மிச்சம்!

ரவிந்திரநாத் அரவிந்தன்-
அக்கரைப்பற்று-08.

### இங்கும் அங்கும்

இங்கே-குழந்தைகள்
கண்ணீரில் குளிக்கிறார்கள்!
அங்கே- குழந்தைகள்
கடல் நீரில் குளிக்கிறார்கள்!

சுஜோ- மல்லாவி.

### மீதி?

"செம்மணியில் 'அங்கம்' பாதி
தேடுகிறோம்- 'இங்கும்' மீ(ந்)தி!"

கோ. மனோகரன்- தெமோதரை.

### சுதந்திரம்

கடலில் மீன்கள் துள்ளலாம்-வட
கரையில் (இம்) மீன்கள்
துள்ளலாமோ?

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
வவுனியா.

# கவிதைப் போட்டி இல.317



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 17.07.1999

**முகவரி:** கவிதைப் போட்டி இல.317
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

ஜெயகாந்தனின் திகட்டாத 'கோகிலா என்ன செய்துவிட்டாள்' தொடர் நீண்ட நாட்களுக்குப் பிறகு; என் போன்ற இரசிகைகளுக்கு அது ஓர் அரிய இலக்கிய விருந்தேயாகும். வாழிய தினமுரசு வாழிய!

செல்வி
மு.ஹ.சனூபா,
கதுறுவெல.



அன்பின் முரசிற்கு;

உனது சேவை இன்றைய காலத்தின் தேவை! மக்களிற்கு சொல்ல வேண்டியதைச் சொல்ல வேண்டிய விதத்தில் சொல்லும் உனது சிறப்பு யாவரையும் வியக்க வைக்கின்றது. என்னையும் வியக்க வைக்கின்றது.

வீரவிதானவின் எழுச்சிக்கான காரணத்தை, கடந்த வார முரசின் ஆசிரிய தலையங்கத்தில் தெளிவு படுத்தப்பட்டிருந்ததைப் படித்தேன். அரசு புதையல் தோண்டப் போய் பூதம் வெளிப்பட்ட கதையாக போய்விட்டது.

உன் சேவை சிறக்க வாழ்த்துகின்றேன்.

க.கரிமுகன், கொழும்பு-13.

## கணிப்பு

அரச படையினர் ஒவ்வொரு தாக்குதலின் பின் கூறி வருகிறார்கள்- பல நூற்றுக் கணக்கான புலிகள் கொல்லப்பட்டார்கள் என்று! அரசாங்கத்தின் கணிப்பின் படி இப்போது பார்த்தால் வடக்கு கிழக்கில் ஒரு தமிழர் கூட இருந்திருக்கமுடியாது.

முல்லை எஸ்.சுதாகர்,
மட்டக்களப்பு.

முரசில் இடம் பிடித்த நடிகை ஸ்ரீவித்தியாவின் சுயசரிதை முழுவதும் தவறாது வாசித்தேன். வெளியே வர்ண மயமாக தெரியும் நடிகைகளின் வாழ்வில் தான் எத்தனை சோகங்கள்? என்று கலங்கி விட்டேன்.

செல்வி இ.தாரிணி, கல்லடி.

## நகர முன்னரே

அன்பு முரசுக்கு,

படையினரின் 'ரணகோஷ' பற்றிய எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர் கணிப்புக்கள் அப்படியே பலித்துள்ளன. மடுவை பிடித்து நகர முன்பே, மன்னார்-பூநகரி பாதையை பிடிப்பதே இதன் நோக்கம் என்று முன்னறிந்து கூறியிருந்தாரே நம் நாரதர். பழைய எக்ஸ்ரே ரிப்போர்ட்டுக்களை புரட்டிப் பார்த்தேன். ஆச்சரியம் தாளவில்லை. சபாஷ் நாரதரே!

கே.சுந்தரலிங்கம், வவுனியா.

முரசுக்கு;

செம்மணி மர்மம் விழிப்பாக நோக்கப் பட வேண்டியதே. பெரும் பகுதியை அழித்துவிட்டு, ஒரு பகுதியை கண் துடைப்புக்காக விட்டு வைத்திருக்கலாம் என்று நாரதரின் சந்தேகம் எமக்கும் உண்டு. அரியாலையிலும், கொட்டடியிலும் இருக்கும் புதைகுழிகளை தோண்டுமாறு வலியுறுத்துவது ஒருபுறமிருக்க, அவை எங்குள்ளன என்று அறிந்து பாதுகாப்பு செய்யுமாறுகூட தமிழ்க் கட்சிகள் கோரவில்லையே. ஏன்?

சோ.நந்தகுமார், திருமலை.

அன்பு முரசே!

'கோகிலா என்ன செய்து விட்டாள்', 'கண்ணீரில் கரைந்த இரவுகள்' இரண்டும் அருமை! டயானாவின் இறுதிக் கட்டத்தை புவனா கண்முன்னே கொண்டுவந்து நிறுத்திக் கொண்டிருக்கிறார்.

எம்.பசீர், மன்னார்.

ஸ்ரீ வித்யாவின் சுயசரிதை நெகிழ வைத்தது. விரைவில் முடிந்து விட்டதே என்று கவலையாக இருக்கிறது. ஒரு நடிகையின் துயர்களை வெகு இயல்பாக வெளிப்படுத்தியிருந்தார்.

எஸ்.சந்திரமதி, நுவரெலியா.

## மறக்க முடியுமா?

அன்பு முரசே?

செம்மணி புதைகுழி ஆய்வு பற்றி நாரதர் வெளியிட்ட தகவல்கள் யாவுமே, உரிய காலத்தில் தரப்பட்ட தகவல்கள். தோண்டி எடுத்து மறைக்கப்பட்டவை எத்தனை? மீதம் இருப்பவை எத்தனை? என்றுகூட ஆழ்ந்து கவனிக்க ஆளில்லாத மக்களாகிவிட்டனரே- நம் மக்கள். மண் கிளறப்பட்டுள்ளது என்பது மண் ஆய்வு அறிக்கை மூலம் தெரிந்த பின்னரும் தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதித்ததை மறக்கத்தான் முடியுமா?

என்.கஜன், மானிப்பாய்.

## மன்னார்-பூநகரி

முரசே!

ரணகோஷ நடவடிக்கை ஆரம்பித்தபோதே, அது மன்னார்-பூநகரி பாதைத் திறப்புக்கான அடிவைப்பு என்று முதன் முதலில் கூறியிருந்தாய். நாரதரின் துல்லியமான கணிப்பு தவறவில்லை. எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் நாரதர் கையாளும் வார்த்தைப் பிரயோகங்கள் இப்போது சாதாரணமாக கதைக்கும்போதும் நம்மையறியாமல் வந்துவிடுகின்றன. விமர்சகர்களும் அதனை பின்பற்றுவதைக் காண முடிகிறது.

வேந்தன்விசாலி, மட்டக்களப்பு.

## எங்கும் எலும்புகள் நிறையினும்...

முரசாரே!

அரியாலை கிணற்றுக்குள் மட்டுமல்ல. யாழ்ப்பாணமே எலும்புக்கூடுகளால் நிரம்பிக் கிடந்தால்கூட தமிழ்க் கட்சிகள் வாய்திறக்கப் போவதில்லை. வரத்தானே போகிறார்கள் வாக்குகள் பெறுவதற்கு? அப்போது கொடுக்கத்தான் போகிறோம். தமிழ்க் கட்சிகளுக்கு வாக்குப் போடுவதைவிட, ராஜபக்ஷவுக்கு போடலாம். பழி செய்தாலும், இப்போதாவது உலகுக்கு இங்குள்ள அநியாயங்களை காட்டித்தர உதவி விட்டார்.

பி.சந்திரசேகர், யாழ்ப்பாணம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.



படிப்பகம்

www.padippakam.com

# மாணவர்கள் மத்தியில் புலிகள் பிரசாரம்

## இரகசியமாக செயற்படுமாறு பணிப்பு

வடக்கு-கிழக்கில் மாணவர்கள் மத்தியில் புலிகள் தமது பிரசாரங்களை தீவிரப்படுத்தியுள்ளனர். முல்லைத்தீவில் மாணவர்கள் தாமாக முன்வந்து போர்முனைகளுக்கு சென்று பார்வையிட புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

29.06.99 முல்லைத்தீவு செம்மலை அலம்பில் பாடசாலை மாணவர்கள் பிரபாகரனின் படத்தோடு பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். அதன்பின்னர் முள்ளியவளையில் குண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டனர்.

இம் மாணவர்கள் கிளிநொச்சி போர்முனைக்குச் சென்று அங்குள்ள புலிகளுடன் உரையாடினார்கள்.

இவ்வாறு பல்வேறு பாடசாலை மாணவர்களும் களமுனைக்குச் சென்று வரும் ஏற்பாடுகள் நடந்துள்ளன.

நாம் எவரையும் கட்டாயமாக இயக்கத்தில் இணைத்துக் கொள்வதில்லை. மாணவர்கள் விரும்பினால் இணைந்து போராடலாம் என்று புலிகள் கூறிவருகின்றனர்.

இதற்கிடையே யாழ்ப்பாணத்திலும் பாடசாலை மாணவர்களுக்கு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளது மாணவர் அமைப்பு யாழ் குடாநாட்டில் இரகசியமாக செயற்பட ஆரம்பித்துள்ளது. இம்மாணவர் அமைப்பு உறுப்பினர்களே பிரசுரங்களை இரகசியமாக விநியோகித்துள்ளனர்.

'ஆண்ட பரம்பரை அனுமதி கேட்பதா?' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"எதிரிகள் சூழ்ந்த எங்கள் நிலத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன? என்று நீங்கள் முடிவெடுக்க வேண்டிய நேரம் இது! மாணவ உலகம்தான் புலிப்படையாய் விரிந்து வியாபித்து வளர்ந்தது.

சூழ உள்ள எதிரிகளுடன் நாங்கள் சமாளித்து வாழப் பழகிக்கொண்டால் சரியா? சமாளித்து காலம் கடத்தும் எங்கள் தீர்மானம் எங்கள் சந்ததிக்கு உதவுமா? இவர்களின் மேற்பார்வையில்தான் நாங்கள் வாழவேண்டுமா? எங்கள் நிலத்தில் இவர்களது விட்டுக்கொடுப்பில்தான் எங்கள் வாழ்வின் நடைமுறைகள் அமைய வேண்டுமா?

இன்றே இந்த நிலை! நாளை போரில் தமிழர் சேனையின் கைவீழ்ந்து, இவர்கள் கை ஓங்கி விட்டால் எங்களை என்ன செய்வார்கள்?

தட்டிக் கேட்க ஆளில்லாத இவர்கள் வெற்றி பெற்றுவிட்டால் எவரை விட்டு வைக்கப்போகிறார்கள்? தன் மார்பில் தட்டி வீறாப்புப் பேசும் சிறீலங்கா அப்போது எமக்கு எதைத் தரப்போகிறது?

எங்கள் சமாளிப்பு வாழ்வின் தீர்மானம் எம் உயிரைத்தான் விட்டு வைக்குமா? திருமலையிலும் அம்பாறையிலும் இன்று அரைவாசிப்பேர்கூட தமிழர்கள் இல்லாமல் போனது எப்படி? யாழின் எதிர்காலம் என்ன?

மாணவர்களே! சமாளிப்பு வாழ்வு வேண்டாம். எவரின் மேய்ப்பின் வாழப் பழகிக்கொள்ள நாம் ஒன்றும் மந்தைக் கூட்டமல்ல. ஒன்று பத்தாகி, பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி, ஆயிரம் பல்லாயிரமாகி விரியும் விடுதலைப் போரில் உங்கள் கையும் ஒன்றாகட்டும்.

இது போராட, பிறந்த கை. பிச்சைக்கு கை நீட்டி, கிடைத்த எச்சிலுக்கு கும்பிடு போடப் பிறந்த கையல்ல!" என்று அப்பிரசுரத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

படையினரின் கண்காணிப்பையும்மீறி இப்பிரசுரங்கள் குடாநாட்டில் பெருமளவில் பல பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

புலிகளது மாணவர் அமைப்பில் இணைந்துள்ள மாணவர்கள் மிக இரகசியமாக, தம்மை இனம் காட்டிக்கொள்ளாது செயற்படுமாறு பணிக்கப்பட்டுள்ளனராம்.

# விழாக்களுக்கு அழைக்க வேண்டாம்!

## பொது நிறுவனங்களுக்கு புலிகள் அறிவித்தல்

### எம்.பி.கள் மீது அதிருப்தி! தாக்குதலுக்கு ஆயத்தம்!

"பொது வைபவங்கள், மற்றும் நிகழ்ச்சிகளுக்கு தமிழ்க் கட்சி பிரமுகர்களையோ, பாராளுமன்ற உறுப்பினர்களையோ போன்றோரையோ அழைக்க வேண்டாம்!" என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள் உட்பட எங்கும் பொது நிகழ்வுகளில் அவர்களை அழைக்கக்கூடாது என்றும், மீறி அழைப்பு விடுத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு அழைத்தோரே பொறுப்பாவர் என்றும் புலிகள் கூறியுள்ளனர்.

"தமிழ்க் கட்சிகள் அரசின் சகல ஏமாற்றுக்களுக்கும் துணைபோவதால் இனிமேலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை. கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். எனவே தமிழ்க் கட்சிகள் மற்றும் பா.உறுப்பினர்கள் மீதான தாக்குதல்களின்போது பொதுமக்களது இழப்பைத் தவிர்க்கவே முன்னறிவித்தல் விடுத்துள்ளோம்!" என்று மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல் துறை கூறியுள்ளது.

கிழக்கில் புலிகளது புதிய அணிகள் பொறுப்பேற்ற பின்னர் முதலில் வெளியான அறிவித்தல் இதுவேயாகும்.

இந்த அறிவித்தல் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எட்டியிருப்பதால், பொது வைபவங்களில் கலந்து கொள்வதை இரத்துச் செய்துள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் பா.உக்களும் தமது பொது நிகழ்ச்சிளை நிறுத்தி வைத்துள்ளனர்.

மட்டக்களப்பு வந்தாறுமுலை மகா வித்தியாலய விழாவில் கலந்து கொள்வதாக இருந்த துரைராஜசிங்கம் எம்.பியும், அலிசாகிர் மௌலானா எம்பியும் புலிகளது அறிவித்தலை அடுத்து மேற்படி வைபவங்களுக்குச் செல்லவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம்பிகள் தொடர்பாக புலிகள் விட்டுப் பிடிக்கும் போக்கையே கடைப்பிடித்தனர். அதேவேளை இரா.சம்பந்தன், நீலன் திருச்செல்வம் போன்றோரை அரசின் பங்காளிகளாகவே கருதி வருகின்றனர்.

இரா.சம்பந்தன் போன்றோரின் அரசசார்பு நிலைப்பாட்டை எதிர்த்து உறுதியான போக்கை கைக்கொள்ளாதது காரணமாகவே மட்டக்களப்பு கூட்டணி எம்பிகளும் புலிகளது கோபத்துக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிகிறது.

இரா.சம்பந்தன் அரசின் தொல்லை தவிர்ப்புக்குழு போன்றவற்றில் அங்கம் வகிப்பதோடு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு எதிராகவும் கருத்து வெளியிட்டு வருகிறார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிக் கூறிய பின்பும் அதற்கு மாறாக சம்பந்தன் கருத்து வெளியிட்டமையும் புலிகளிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

#### தேர்தல்கள்

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருமலை மாவட்டங்களில் சுயேட்சைக் குழுக்கள் சில புலிகளின் அனுமதி பெறுவதற்கு முயற்சித்து வருகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் இரண்டில் எது முதலில் வந்தாலும் அதில் சுயேட்சைக் குழுவாக போட்டியிட இவர்கள் அனுமதி கோரியுள்ளனர்.

தற்போது பரபரப்பாகப் பேசப்படும் அரசியல் பிரமுகர் ஒருவரது தலைமையில் யாழ் குடாநாட்டில் சுயேச்சைக் குழுவை நிறுத்தவும் சில வட்டாரங்கள் முயற்சித்து வருகின்றனவாம்.

ஆனாலும் புலிகள் இதுபற்றிய தமது இறுதி முடிவைக் கூறவில்லை. "தமிழ்க் கட்சிகளில் இருந்து விலகி இருங்கள். அவர்களோடு உறவுகளை நிறுத்திவிடுங்கள். ஏனையவற்றை பின்னர் பார்க்கலாம்!" என்று கிழக்கு மாகாண புலிகளது முக்கியஸ்தர் ஒருவரால் கூறப்பட்டுள்ளதாம்.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு சுயேட்சைக் குழுவாக'} போட்டியிடவும் சிலர் ஏற்பாடுகளில் இறங்கியிருந்தனர். புலிகளது மேற்படி அறிவித்தலின் பின்னர் அவர்கள் அமைதியாகி விட்டனர்.

#### நடக்குமா?

ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முஸ்தீவுகளில் அரசாங்கம் தீவிரமாக உள்ளதால், கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முன்வருமா? என்பது கேள்விக்குறிதான்.

வடக்கு-கிழக்கில் அரசு தேர்தல்கள் நடத்துவது வெளியுலகுக்குக் காண்பிக்க மட்டுமே. தற்போது கிழக்கில் தேர்தல் நடத்தி அவ்வாறு காண்பிக்கும் தேவையும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே உள்ளூராட்சித் தேர்தல் தற்போதைக்கு இல்லை என்றே பரவலாக நம்பப்படுகிறது.

முதற்கட்டமாக முன்னறிவித்தல் விடுத்துள்ள புலிகள், கிழக்கில் தமிழ்க் கட்சிகள்மீது தாக்குதல்களை ஆரம்பிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. கிழக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளது உள்ளூர் பிரமுகர்கள் பலர் தலைமறைவாகியுள்ளனர் என்று நம்பப்படுகிறது.

# புலிகள் தொடர் தாக்குதல்

## மன்னிப்பும் மறுபடி தாக்குதலும்

யாழ் குடாநாட்டில் படையினர்மீது புலிகளது தாக்குதல்கள் அதிகமாகியுள்ளன. பெருமளவு புலிகள் குடாநாட்டின் பல பாகங்களிலும் ஊடுருவியுள்ளனர்.

யாழ்ப்பாணம் நுணாவில் பகுதியில் படையினர்மீது 01.07.99 அன்று புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினார்கள். நான்கு படையினர் பலியானார்கள். இதனையடுத்து அங்கு விரைந்த படையினர் பொதுமக்களைத் தாக்கினார்கள்.

இதன் பின்பு அப்பகுதிக்கு விஜயம் செய்த படை அதிகாரி நடைபெற்ற சம்பவத்திற்கு மன்னிப்பு கோருவதாக தெரிவித்தார்.

04.07.99 அன்று யாழ்ப்பாணம் தாவடிப் பகுதியில் பஸ் வண்டி ஒன்று தீமிட்டு எரிக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு சென்ற படையினர் பொதுமக்களைத் தாக்கியுள்ளனர். தடிகளாலும், மரச்சட்டங்களாலும் மக்களைத் தாக்கியதுடன், எரிந்த பஸ் வண்டிக்குள் ஏறி இறங்குமாறு கூறியும் தாக்கினார்கள்.

குடாநாட்டில் மக்கள் மீதான இத்தகைய தாக்குதல்கள் தொடர்வது குறித்து தமிழ்க் கட்சிகளும் கட்டாய மௌனம் சாதித்து வருகின்றன.

# பவனி நடத்தியோர்மீது விசாரணை

## அவர்களுக்கு ஒரு நீதி! நமக்கொரு நீதியா?

மட்டக்களப்பில் அரங்க செயற்பாட்டுக் குழுவினர் நடத்திய பண்பாட்டுப் பவனி பற்றி தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் தற்போதைய கெடுபிடியான சூழலில் தம் மனதில் பல உணர்வுகளைச் சுமந்து புழுங்குகின்றனர். அம் மக்கள் வீதிகளில் திரண்டு தம் உணர்வை வெளிப்படுத்தும் விதமாகவே பண்பாட்டுப் பவனிகள் நடத்தப்படுகின்றன.

ஏற்கனவே கொழும்பு, திருமலை போன்ற பகுதிகளில் பண்பாட்டுப் பவனிகளை அரங்க செயற்பாட்டுக் குழுவினர் நடத்தியுள்ளனர்.

ஆண்களும், பெண்களும் சிவப்பு ஆடைகளுடன் வீதிகளில் கொந்தளித்து கோஷமிட்டுச் சென்றனர்.

இதேபோன்றதொரு பவனியே ஜூன் 26 இல் மட்டக்களப்பிலும் நடைபெற்றது. இதற்கு அனுமதி கொடுக்க முதலில் தயங்கிய பொலிசார் 25ம் திகதி மாலைதான் அனுமதி வழங்கினர்.

200ற்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட ஊர்வலமாயினும் காவலரண்கள் முன்பாகவும் ஆவேசமாக முழக்கங்கள் எழுந்தன. அடக்குமுறையை சித்தரிக்கும் கறுப்பு உருவம் ஒன்றை பிய்த்தெறிந்து ஆவேசம் பொங்கிய காட்சி பொலிசாரை அச்சுறுத்திவிட்டது.

இதனையடுத்து ஊர்வலத்தினர் துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர். ஒருவர் கைது செய்யப்பட்டு விடுதலையானார். பவனிக்கு ஒழுங்கு செய்தவர்கள் புலனாய்வுத் துறையால் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

"அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் எம்மீது இத்தனை விழிப்பாக விசாரணை நடத்துகிறார்கள். கொழும்பில் பேரினவாதக் கூச்சலோடு இ.தொ.கா. அலுவலகத்துக்குள் புகுந்து கொடி எரித்த வீரவிதானமீது இதுவரை ஒரு நடவடிக்கைகூட எடுக்கவில்லையே.

நேரில் பார்த்து நின்ற அதிகாரிகள் கூட நீதி விசாரணை நடத்தவில்லையே. இதுதான் இங்குள்ள நீதியா?" என்று அரங்க செயற்பாட்டுக் குழுவினர் குமுறுகின்றனர்.

# தெருவெங்கும் துப்பாக்கி ரவைகள்

## கனடா வீதியில் தமிழர்கள் மோதல்

(நமது நிருபர்)

ஜூன் 25ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு கனடா ஸ்காபுறோ நகரில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த நிஷாந்தன் சுந்தரலிங்கம் (24) என்பவரே கொல்லப்பட்டவராவர். இச்சம்பவம் தொடர்பாக அறியப்படுவதாவது:

"மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அதிகாலை வேளை காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது வேறொரு காரில் வந்த இலங்கைத் தமிழ் இளைஞர் கோஷ்டி அந்தக் காரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இதனால் காருக்குள் இருந்த மூவருக்கு காயம் ஏற்பட்டது. காரை ஓட்டிச் சென்ற நிஷாந்தன் சுந்தரலிங்கத்துக்கு பாரதூரமான காயம் ஏற்பட்டது.

சூட்டுக் காயத்துடன் காரை ஓட்டிச் சென்று மருத்துவமனை அருகே நிறுத்தினார். அச் சமயம் அங்கு விரைந்து வந்த பொலிசார் அவர்களை மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவமனையில் நிஷாந்தன் சுந்தரலிங்கம் காலமானார்.

பொலிஸ் அறிக்கைப்படி பல துப்பாக்கி சன்னங்கள் காரைச் சல்லடை போட்டுள்ளன. சுமார் ஒரு கிலோமீட்டர்வரை துப்பாக்கி வெற்று ரவைக்கூடுகள் கிடந்துள்ளன. உடனடியாக அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடியபோது அருகில் உள்ள பற்றைக் காட்டுக்குள் மறைந்திருந்த ராஜ்மோகன் செல்வராஜா என்னும் இலங்கை வாலிபர் கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் நடப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் இலங்கை வாலிபர் ஒருவரை 'பேஸ் போல்' மட்டையால் அடித்துப் படுகாயப்படுத்தி தெருவில் போட்டுவிட்டுப் போனார்களாம். அந்த இளைஞரின் கோஷ்டிதான் அதற்கு காரணமான ஐந்து பேரைத் தேடித் திரிந்தது.

அவர்களில் சிலர் காரில் செல்வதைக் கண்டதும் துப்பாக்கிச் சூடு நடத்திமிருக்கிறது. ஆனால் பலியான நிஷாந்தனுக்கும் முன்னர் நடந்த தாக்குதலுக்கும் சம்பந்தமில்லை என்று தெரிகிறது.

# சுட்டும் வெட்டியும் கொலை

## சாரதியுடன் வாகனம் எரிப்பு

பிபிலையிலிருந்து அம்பாறை நோக்கி சென்ற வாகனங்கள் இரண்டு தீக்கிரையாக்கப்பட்டதோடு, நான்கு பேர் வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டுள்ளனர்.

ரக்மல் ஹக் எல்ல என்ற இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதுபற்றி அறியப்படுவதாவது:

'ரக்மல் ஹக் எல்ல' பகுதியில் உள்ள கடை ஒன்றை 15 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று கொள்ளைமிட்டுக் கொண்டிருந்தது.

அப்போது அக் கடையருகே டபிள் ஹைப் வாகனம் ஒன்று வந்து நின்றது. அதனை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட் டது. வாகனத்தில் இருந்தவர்கள் உயிர்தப்ப ஓட்டம் பிடித்தனர்.

அதன்பின்னர் வந்த வேன் ஒன்று வழி மறிக்கப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. சாரதி பலியானார். வாகனத்தில் சென்ற ஏனைய மூன்றுபேரையும் கீழே இறக்கி வெட்டிச் சாய்த்தனர். வாகனத்தை சாரதியுடன் தீயிட்டு எரித்தனர்.

இச் சம்பவம் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. கல்லோயா வன விலங்கு சரணாலயத்தை தமது நடமாட்டத்துக்கு புலிகள் பயன்படுத்தி வருகின்றனர். இது பற்றி படையினருக்கு, தகவல் கொடுத்தோரை அச்சுறுத்தவே மேற்படி கொலைகளும், கொள்ளையும் நடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

இதனையடுத்து இப்பகுதி சிங்கள மக்கள் பதட்டம் அடைந்தனர். அப்பகுதியால் சென்று வரும் தமிழர்களும் அச்சமடைந்தனர். சம்பவம் நடைபெற்ற பகுதி சன நடமாட்டமில்லாத பகுதியாகும்.

# மோட்டார் தாக்குதல்

## பதிலடி பொதுமக்களுக்கு

மட்டக்களப்பு-கிரானில் உள்ள படையினர்மீது வாவியின் மறுமுனையில் இருந்து குறிவைத்துப் புலிகள் மோட்டார் ஷெல்களை ஏவினர். இதில் ஒரு படைவீரர் பாரதூரமான காயங்களுக்குள்ளானார். இவர் பின்னர் மருத்துவமனையில் காலமானார்.

அதனைத் தொடர்ந்து நடந்த பதிலடித் தாக்குதலின்போது க.சண்முகலிங்கம் (26) என்ற விவசாயி கொல்லப்பட்டார். இன்னும் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர். கரும்புலிகள் தினத்திற்கு முந்திய நாளான 04.07.99 அன்று காலை 8.30 க்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

இதேவேளை கிரான் பகுதியிலுள்ள வீடொன்றின் வளவிற்குள் படையினர் கூடி நிற்பதைக் குறிவைத்து புலிகள் நேரக் குண்டொன்றைப் புதைத்துள்ளனர். படையினர் எவரும் அவ்விடத்தில் கூடி நிற்காத வேளையில் நேரக்குண்டு முன் கூட்டியே வெடித்ததால் சீருடையினருக்கு ஆபத்து எதுவும் நிகழவில்லை.

எனினும் அவ்வீட்டுக்கார இளம் பெண் பலமாகத் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளானார். தகவலை வெளியே சொன்னால் பழி வாங்கப்படக்கூடும் என அச்சம் நிலவுகிறது.

அப்பகுதியில் நடந்த மேலும் ஒரு சம்பவத்தில், கடையொன்றுக்குச் சென்று சிகரெட் கேட்டபோது அது இல்லை யென்று கூறி பிறிஸ்டல் கொடுத்ததால் கடைக்காரர் தாக்கப்பட்டுள்ளார்.

என்ன விசயம் நடந்தாலும் தமக்குப் பாதகமானவை வெளியே வரக்கூடாது என்பதிலும் அப்பகுதியிலுள்ள சீருடையினர் அக்கறை காட்டுகின்றனராம்.

இதேவேளை அட்டூழியங்களுக்குப் பெயர்போன பேர்வழி சபாநாயகம் தற்சமயம் கிரான் கிரிமுட்டிப் பண்ணை சீருடையினரின் முகாமிலிருந்து வெளியேறியுள்ளார். இதனால் அப்பிரதேச மக்கள் ஆயுள் நீடித்ததென்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். அவர் திருக்கோணமலைக்குச் சீருடையினருடன் 'சேவையாற்றச்' சென்றிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

# எச்சரிக்கைக்கு பின்னர் தாக்குதல்

## வவுனியாவில் புலிகளது பிஸ்டல் குழு

"தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் தமது கட்சிகளில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும்!" என்று புலிகள் பகிரங்க அறிவித்தல் விடுத்திருந்தது தெரிந்ததே.

01.07.99 அன்று இரவு 8 மணிக்கு வவுனியா வேப்பங்குளத்தில் புளொட் உறுப்பினரான மூக்கன் உதயகுமார் என்பவர் புலிகளது பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். சைக்கிளில் வந்த புலிகளே இவரைச் சுட்டுக்கொன்றனர்.

இதற்கு முதல்நாள் வவுனியா பா.உ பால்ச்சந்திரனின் வீடு தாக்குதலுக்கு உள்ளானது. பெலிசார் ஒருவரும், ஊர்க்காவல் படையினர் ஒருவரும் பலியானார்கள். அவர்களது ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டு சைக்கிளில் சென்றுவிட்டனர் புலிகள்.

இந்த இரு சம்பவங்களுக்கும் புலிகள் காரணமில்லை என்றே படைத்தரப்பும் நினைத்ததாகத் தெரிகிறது. ஆனால் 02.07.99 நடைபெற்ற சம்பவம் புலிகளே காரணம் என்பதை மெய்ப்பித்துவிட்டது.

02.07.99 அன்று வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் புலிகள் மூன்று பேர் சைக்கிள்களில் சென்று கொண்டிருந்தனர்.

புளொட் அலுவலகத்தை அவர்கள் தாண்டும்போது சந்தேகப்பட்ட புளொட் உறுப்பினர்கள் மறித்துள்ளனர். அவர்கள் நிறுத்தாது சென்றனர். அருகிலுள்ள காவலரணில் இருந்த பொலிசார் ஒருவரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு புளொட் உறுப்பினர் ஒருவர் அவர்களைத் துரத்திச் சென்றார்.

வைரவபுளியங்குளம் குளக்கட்டு பகுதியில் சைக்கிள்களை போட்டுவிட்டு புலிகள் மூவரும் தப்பிச் சென்றனர். அப்போது பொலிசார் சுட்டபோது, புலிகளும் திருப்பிச் சுட்டபடியே தப்பிச் சென்றனர். பொலிசுக்கும் காயம் ஏற்பட்டது.

அச் சமயம் அந்த மூவரில் அங்கவீனமான புலி உறுப்பினரால் தப்பி ஓட முடியவில்லை. துப்பாக்கிச் சூட்டில் பலியானார். ஏனைய இரு புலிகளும் தோணிக்கல் பக்கமாகத் தப்பி சென்றுவிட்டனர்.



படிப்பகம்

# பால்மா விலையேற்றம்

## அடிக்கடி போக்குவரத்து தடை

வன்னி மக்களுக்கு பேராதனியா பல்கலைக்கழக தமிழ் பேசும் மாணவர்களால் பால்மா பக்கெற்றுக்கள் அனுப்பப்பட்டன. ஒரு இலட்சத்து 14 ஆயிரத்தி 300 ரூபா பெறுமதியான பால்மா வகைகள் வவுனியா அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் தாமாக முன்வந்து நிதியளித்தனர். "எம்மால் இயன்றதைச் செய்துள்ளோம்" என்று மாணவர் பிரதிநிதி கூறினார்.

இராணுவ நடவடிக்கைகளை காரணம் காட்டி அடிக்கடி வன்னிக்கான போக்குவரத்தை படையினர் தடுத்து வருகின்றனர். இதனால் வன்னிக்கு அரசால் அனுப்பப்பட வேண்டிய உணவுப் பொருட்களில் பாதிகூட போய்ச் சேரவில்லை.

மல்லாவியில் பால்மா, சீனி போன்றவை தட்டுப்பாடு காரணமாக விலையேறியுள்ளன.

# வடக்கு கிழக்கில் மின்மாற்றி தகர்ப்பு!

சென்ற ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து மின்மாற்றிகளைத் தகர்ப்பதிலும், மின் கம்பங்களையும் கோபுரங்களையும் சாய்ப்பதிலும் ஈடுபட்டு வந்த புலிகள் இயக்கத்தினர் பின்னர் தாமாக முன்வந்து சேதமாக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் மின்சாரம் வழங்க அனுமதி வழங்கினர்.

புலிகளின் உத்தியோக பூர்வ அனுமதியைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பாரிய திருத்த வேலைகள் ஆரம்பமாகி கடந்த சில நாட்களுக்கு முன்னர்தான் மட்டக்களப்பின் சகல பகுதிகளுக்கும் தடையின்றி மின்சாரம் கிடைக்க வழியேற்பட்டிருந்தது.

எனினும் கல்முனை-நிந்தவூர் அரசடித் தோட்டப் பகுதியிலிருந்த மின்மாற்றி கடந்த 28.06.99 அன்று அதிகாலை 3.30 மணிக்கு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் அப்பிரதேசம் மின்சாரமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு ஜனவரியில் புலிகள் மின்சாரம் வழங்க அனுமதித்ததைத் தொடர்ந்து, பின்னர் தகர்க்கப்பட்ட முதலாவது மின்மாற்றி இதுவாகும்.

வட பகுதியிலும் சமீப சில நாட்களாக மின் மாற்றிகளைச் சேதப்படுத்துவதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

# ஊர் மனைக்குள் மதுச்சாலை

(காரைதீவு நிருபர்)

கல்முனையையடுத்துள்ள பாண்டிருப்பு கிராமத்தில் மதுச்சாலையொன்றை நிறுவ முயற்சிகள் இடம்பெற்றுவருவதையறிந்த பொதுமக்கள் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர். ஆலயம், பாடசாலைகளை சுமார் 100 மீட்டர் இடைவெளியிலும், அடர்ந்த குடி மனைகள் உள்ளதுமான பிரதான வீதியில் இம் மதுச்சாலை அமையவிருப்பதாக சொல்லப்படுகிறது.

அருகிலே நீலாவணை சாராயத் தவறணை எனும் மதுச்சாலை இருந்த போதிலும் பாண்டிருப்பில் இன்னுமொரு சாலை நிறுவ காரணம் என்ன? என மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். மக்களது ஆட்சேபனைக்கூட்டமொன்றும் நடைபெற்றுள்ளது. ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# குடும்பஸ்தர் மரணம்

கனடா ஸ்காபுறோவில் வசித்து வந்த 38 வயதுடைய குடும்பஸ்தரான பிளன்டன் பசில் செல்வநாயகம் 22.06.99 அன்று வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் அகப்பட்டு கருகி மரணமானார்.

ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகக் கொண்டவரான பசில் இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையாவார். தீ விபத்து நடந்த நேரம் இவரது மனைவி பிள்ளைகள் இலண்டன் சென்றிருநததாகவும் செய்தி அறிந்து அவர்கள் கனடா திரும்பியுள்ளதாகவும் அறியப்படுகிறது. பொலிஸாரும் தீயணைப்பு படையினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வன்னி விழா 99

வன்னி இராச்சியத்தின் மன்னன் மாவீரன் பண்டார வன்னியன் நினைவாக வருடந்தோறும் நடைபெறும் இவ்விழாவில் வெளியாகும் கொம்பறை மலரில் பிரசுரிப்பதற்காக ஆக்கங்கள் படைப்பாளிகளிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களுக்குரிய தலைப்புக்களை படைப்பாளிகளே தெரிவுசெய்து ஆவணி மாதம் (15-August-1999) பதினைந்தாம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் யாவும் படைப்பாளிகளே தம்மெண்ணத்தில் வன்னிமண்ணின் கலை கலாசார பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் தெளிவான கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது தட்டெழுத்துப் பிரதியாகவோ இருக்கலாம்.

சிறுகதையானால் நான்கு பக்கங்கட்கு மேற்படாமலும், கட்டுரையானால் ஆறு பக்கங்கட்கு மேற்படாமலும், மரபுக் கவிதையானால் முப்பது வரிகளுக்கு மேற்படாமலும், புதுக்கவிதையானால் ஐம்பது வரிகளுக்கு மேற்படாமலும்இருத்தல் வேண்டும். "வன்னியின் கீதம்" கவிஞர்களின் படைப்புக்களில் இருந்து தகுதி கண்டு ஏற்றுக் கொள்ளப்படும்.

ஒருவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம். ஆசிரியர் குழுவினால் தரமானவை எனக்கருதப்படும் ஆக்கங்கள் கொம்பறை மலரில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி
COMPARAI MALAR
#18 PEEL TON-HTS RD
BRAMBTON, ONTARIO
L6Y 2J2
CANADA.


## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாத செயல்படுவதாலேயும்இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ;.பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.



## கடிகாரம் திருத்துபவர் தேவை

கடிகாரம் திருத்துபவர் தேவை.
சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு கொள்ளவும்:-
MOHAN RECORD BAR
19, BRIDWELL BAZAAR,
BOGAWANTALAWA.
PHONE 052-67616



## அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

பல வருடங்கள் ஆராய்ச்சியின்பின் மண்ணுக்கடியில் மறைந்து நிற்கும் மகத்தான இரத்தினங்களை உங்கள் கைபிடிக்குள் கொண்டு வந்துள்ளோம். வாழ்வில் வியாபாரம், தொழில், திருமணம், கல்வி, வெளிநாட்டு பயணம் மற்றும் பல வகைகளில் அதிஷ்டத்தை அள்ளித்தரும் முழு சரீரத்திற்கும் பொருந்தும். ரத்தினங்களை நியுமராலஜி முறையில் இலவசமாகக் கணித்துக் கூற அதை அணிந்து நீங்களும் அதிஷ்டசாலியாக மாறலாம்

Accrediated by National Gem & Jewellery Authority
**ARUL JEWELLERS**
3, Sea Street, colombo-11.
Sri Lanka. T.P.436331
Branch :105, Galle road, wellawatte, Colombo.06.



வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏராளமாகப் பெறுவதற்கு...

## கணனிப்பொறியியல் நுட்பம்

**(Diploma in Computer Hardware Engineering)**

இப்பொழுது புதியமாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர் ... முதல் ஆரம்பத்திலிருந்து முறைப்படி கற்பிக்கப்படுகின்றன ...

பாடத்திட்டம் கணனியைப் பொருத்துதல்(Assembling), கோளாறுகளைக்கண்டுபிடித்தல்(Troubleshooting) தரமுயர்த்தலும்பேணுதலும்(Upgrading PCs,Maintenance & Servicing), பழுதுபார்த்தல்(Repairing),செயல்முறைப்படுத்தல்(Software Instalation) செயற்பாட்டு முறை(Operating System).

விசேடஅம்சங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ்,பழுதுபார்த்தல் சம்பந்தமான நிபுணத்துவத்திற்கானசான்று,அமெரிக்க சர்வகலாசாலை விரிவுரையாளர்களின் விரிவுரையடங்கிய Recorded CD யுடனான போதனை என்பன வழங்கப்படும்

மேலதிக விபரங்களையும் விண்ணப்பத்தையும் 10 நாட்களுக்குள் அதிர்ஷ்டம் பெறுக்க ரூபா 25/= காசுக் கட்டளையை அனுப்பி அல்லது நேரில் பெற்றுக் கொள்ளலாம்.



The Principal (TM)
**Higher Tech (Lanka)**
85/2,St.Anthony's Mawatha,
Colombo - 3



## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
**கொழும்பில் ஜூலை 20 முதல் 28 வரை சந்திக்கலாம்**
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388
**கல்முனையில் ஆகஸ்ட் 1,2ம் திகதிகளில் சந்திக்கலாம்**
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
**வவுனியாவில் ஜூலை 10,11ம் திகதிகளில் சந்திக்கலாம்**
(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn), 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை. வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074
கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



## தெய்வீக மருத்துவம்

INTERNATIONAL THEIVEEGAM SERVICES SOCIAL AND SPIRITUAL

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல்,கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன் - மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதிக்கருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ;.பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்விகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"


# திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம், மட்டக்களப்பு, இலங்கை.

பதிவு இல: NEP/BCC/CE/30



அன்பான எம் இனிய தமிழ் உறவுகளே!

**வன் செயலால் பாதிக்கப்பட்டு தாய் தந்தையை இழந்த குழந்தைகளின் வளர்ச்சிக்காக நிதி உதவி கோரல்**

மேற்படி மகளிர் இல்லம் விவேகானந்த நலன்புரிச் சங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்டு, தாய் தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகளின் உயர்வுக்காக பணியாற்றி வருகின்றது.

கடந்த காலங்களில் இவ்வமைப்பிற்கு எம் உறவுகள் மனமுவந்து வழங்கிய உதவிகளால் கிழக்கு மாகாணத்தில் எமது பணி சிறப்பாக நடைபெற்றுவருகின்றது.

நாளுக்கு நாள் எமது பாதுகாப்பிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. தற்போது இவ்வில்லத்தில் 42 தாய் தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகள் தங்கியுள்ளனர். இவர்களுக்கான கல்வி, உணவு, உடை, தங்குமிடம், சுகாதாரம் போன்ற அனைத்து வசதிகளும் எம்மால் பல கஷ்டங்களிற்கு மத்தியில் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

எமது இல்லம் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய பகுதியில் அமைந்துள்ளதால், பொது மக்களினதும், நிறுவனங்களினதும் உதவிகள் மிகவும் அரிதாகவே உள்ளது.

எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கின்ற அன்பர்கள் இக் குழந்தைகளை தங்களது குழந்தைகளாக நேசித்து அவர்களின் வளமான வாழ்விற்கு தங்களால் இயன்ற நிதி உதவியினை கீழ் உள்ள எமது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி மிகுந்த புண்ணியம் தரவல்ல புனித பணிக்கு உதவுமாறு தங்களை மிக்க தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இறந்த ஆத்மாக்களின் நினைவாக அல்லது தங்கள் பிள்ளைகளின் பிறந்த தின நினைவாக அல்லது வேறு ஏதும் நினைவாகவும் எமது பாதுகாப்பில் உள்ள குழந்தைகளுக்கு பணம் அனுப்பி ஒரு நாள் உணவு வழங்கலாம்.

1. மாதாந்தம் ஒரு பிள்ளையை பராமரிக்க ரூபா: 1500 தேவைப்படுகின்றது.
2. குழந்தைகளுக்கு ஒரு நாள் உணவு வழங்க ரூபா: 3000 தேவைப்படுகின்றது.

நன்றி.

Thilakavadiyar Girls Home,
A/C No: 20135,
People's Bank, Kaluwanchikudy (E.P)

இவ்வண்ணம்
இல்லச் சேவையில்
க.சற்குணேஸ்வரன்
தலைவர்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



சிவராம் அபிஷேகா 10.07.99

கனடாவில் வசிக்கும் நாரந்தனையைச் சேர்ந்த திரு. திருமதி.சிவராம்-மணிமாலா தம்பதியினரின் செல்வப் புதல்வி அபிஷேகா தனது முதலாவது பிறந்த நாளை 10.07.99 அன்று ரொறின்டோவில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அபிக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, வறக்காபொல பூட்டியம்மா, அப்பப்பா, அப்பம்மா, கனடா தாத்தா, அம்மம்மா, ஜெர்மன் பெரியப்பா, பெரியம்மா, கனடா பெரியப்பா, பெரியம்மா, ஜெய சித்தப்பா, சித்தி, கனடா ஆசையப்பா, அத்தை, மாமாமார், சித்திமார், வறக்காப்பொல ரகு சித்தப்பா, குகன் சித்தப்பா, கனடா பாட்டா, பாட்டிமார், மச்சான், மச்சாள்மார், அக்கா, அண்ணன் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் சிற்பனை முருகன் அருளால் பல்லாண்டு காலம் பல்கலையும் கற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: ப.குகராம் (வறக்காபொலை)

# சிகிச்சைக்கு உதவி கோருகிறார்



கொழும்பு முகத்துவாரம் மாதம்பிட்டி வீதி 31ம் இலக்கத்தில் வசிக்கும் ஜே.பி.அருளானந்தம் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு உதவிகோருகிறார். 41 வயதான-திருமணமாகி 3 குழந்தைகளின் தந்தையான இவருக்கு இந்தியா சென்று சிறுநீரகம் மாற்றுவதற்கான சத்திர சிகிச்சைக்கு மட்டும் 6 இலட்ச ரூபாய் தேவைப்படும். தவிர சத்திரசிகிச்சையின் பின்னரும்-பல்லாயிரக்கணக்கான ரூபாய் தேவைப்படும்.

இவருடைய சிகிச்சை நலமாக முடிவடைய கருணையுள்ள கனவான்களின் பொருளுதவியை திரு.அருளானந்தம் நாடி நிற்கிறார்.

பண உதவி செய்யவிரும்புவோர் கொட்டாஞ்சேனை இலங்கை வங்கிக் கிளை 1-012517-3 என்ற இலக்கத்துக்கு பணத்தை அனுப்பி வைக்கலாம்.


## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்.மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு.N.THANGA, T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD
T.P.2974924. HP97546610. HP97651074



## விஞ்ஞானம்

விஞ்ஞானம் ஆண்டு-11-75/=
(குறிப்புகள் வினாவிடை)
விஞ்ஞானம் ஆண்டு-11-77/=
(குறிப்புகள் வினாவிடை)
விஞ்ஞானம் ஆண்டு-11-70/=
(குறிப்புகள் வினாவிடை)
விஞ்ஞானம் ஆண்டு-11-43/=
(250 வினா விளக்கம்)
துரித மீட்டல் விஞ்ஞானம் O/L
துரித மீட்டல் கணிதம் O/L
விஞ்ஞான சுருக்கம் - 23/=
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

ஆசிரியர்: ஆ.யோகராஜா

தொடர்பு: A.JOGARAJAH.
90/1.CHRISTU RAJA MW.
NAYAKAKANDA. HENDALA.

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜனாதிபதித் தேர்தல் 'புல்டோசர் போர்த்திட்டம்'

நாரதர்

வன்னியில் படையினர் தற்போது மேற்கொள்ளும் போர்த் திட்டத்தை 'புல்டோசர் போர்முறை' என்று புலிகள் அழைக்கின்றனர்.

அவ்வாறு அழைப்பதற்கு என்ன காரணம் என்பதையும் புலிகளே விளக்குகின்றனர்.

கேந்திர முக்கியத்துவம் உள்ள பகுதிகளா? இல்லையா? என்று ஆராயாது, பிடிக்கக்கூடிய நிலப்பகுதிகளை எல்லாம் பிடிப்பதுதான் படையினரின் திட்டம்.

இதன் நோக்கம் என்ன? புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பிரதேசங்களது விஸ்தீரணத்தை குறைக்கும்போது, புலிகளது பலமும் சுருங்கும் என்று படைத்தரப்பு நினைக்கிறது.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை ஆரம்பித்தபோது, புலிகளது தளப்பிரதேசத்தை இரண்டாக பிளவுபடுத்தி, முல்லைத்தீவுக்குள் மட்டுமே புலிகளை முடக்கும் இராணுவ உத்தியே பிரதானமாக இருந்தது.

பெரும் சண்டைக்குள் புலிகளை இழுத்து புலிகளது ஆட்பலத்தையும் பெருமளவு அழித்து விடலாம் என்றும் நம்பப்பட்டது. அத்தோடு வவுனியா-யாழ் தரைப்பாதையும் திறந்துவிட்டால் இராணுவ விநியோகமும் இலகுவாகி விடும் என்று மிகச் சுலபமாக கணக்குகளை போட்டிருந்தார்கள்.

ஆனால் ஒரு வருட 'ஜயசிக்குறுய்' உட்பட இரண்டு வருடகால வன்னிச் சமரில் படையினரின் கணக்குகள் வவுனியா-யாழ் சாலையில் பொய்த்துப் போயின.

புலிகளது ஆட்பலத்தில் சரிவை ஏற்படுத்த புறப்பட்ட 'ஜயசிக்குறுய்' படையணிகள், தமது ஆட்பலத்திலும், ஆயுத வளத்திலும் பாரிய இழப்பை சந்தித்து, தமது ஆயுத வளம் கொடுத்து புலிகளது ஆயுத வளத்தை உயர்த்தியுமுள்ளன.

புலிகளுக்கும் கணிசமானளவு ஆட்பல இழப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் மிகப் பெரும் படை ஒன்றை இரண்டு வருடகால மரபுச் சமரில் எதிர்கொண்டுள்ளதுடன் ஒப்பிடும் போது, புலிகள் தரப்பு இழப்பு பாரியதல்ல.

தமது தளத்தை தக்கவைத்தல், இராணுவ, அரசியல் பலத்தை இழக்காதிருத்தல் போன்ற குறிக்கோளுக்காக கொடுக்கக்கூடிய நியாயமான விலையாகத்தான் புலிகள் தரப்பு இழப்பை கணிக்க முடிகிறது.

'ஜயசிக்குறுய்' சமர் ஆரம்பித்தபோது புலிகளிடம் இருந்த போரிடும் பலத்தைவிட, இரண்டு வருடத்தின் பின்னர் தற்போதுள்ள போரிடும் பலம் பல மடங்கு அதிகம்.

இரண்டுவிதமாக இந்த பலம் புலிகளிடம் அதிகரித்துள்ளது.

1) படையினரிடம் கைப்பற்றிய கனரக ஆயுதங்கள் மூலம் மரபுப்படைக்குரிய ஆயுத வளங்களை பெருக்கிக் கொண்டது.

2) நீண்டகால சமர் அனுபவம் மூலம் மரபுப் போரிலும், கெரில்லா உத்திகளிலும் தேர்ச்சி பெற்றிருப்பது.

ஏறக்குறைய 72 கிலோமீட்டர் வவுனியா-யாழ் சாலையை ஒன்றரை வருடமாக சமரிட்டும் படையினரால் கைப்பற்ற முடியாமல் போனமை மிகப் பெரும் இராணுவப் பின்னடைவே.

இந்தப் பின்னடைவை நிலம்பிடிக்கும் சண்டைச் செய்திகள் மூலம் படைத்தரப்பு பூசி மெழுகிவிட்டது.

வவுனியா-யாழ் சாலையை கைப்பற்ற முடியாத பின்னடைவுதான், மன்னார்-பூநகரி சாலையை கைப்பற்றும் உத்தி மாற்றத்துக்கு இட்டுச் சென்றுள்ளது.

வவுனியா-யாழ் சாலையைக் கைப்பற்றும் சமரில் படையினரை கேந்திர முக்கியத்துவமற்ற பகுதிகளில் பரவி நிலை கொள்ள புலிகள் அனுமதித்தனர். ஆனால் அந்தச் சாலையின் கேந்திர முக்கியத்துவமிக்க கிளிநொச்சியை படையினரிடம் இருந்து மீட்டுக் கொண்டனர்.

'ஜயசிக்குறுய்' தொடங்க முன்பாக புலிகளது பலம் அதிகமா? தொடங்கிய பின்னர் அதிகமா? என்ற கேள்விக்கு கிளிநொச்சி சமர் பதில் கூறியது.

ஆனையிறவுத் தளத்தில் இருந்து ஒரே முனையால் நகர்ந்த படையினருடன் சமரிட்டுத்தான் கிளிநொச்சியை முன்னர் புலிகள் இழந்திருந்தனர். ஆனால் மறுபடி கிளிநொச்சியை பிடித்தபோது ஆனையிறவு, பரந்தன் படைகளை மட்டுமன்றி, மாங்குளம் முனையில் இருந்தும் அம்பாகமம் பகுதியில் இருந்தும் கிளிநொச்சிக்கு செல்ல முற்படும் மும்முனை படைகளையும் எதிர்கொண்டே கிளிநொச்சியை தக்கவைத்துள்ளனர்.

இழந்த நிலப்பகுதியை கைப்பற்றி அதனை சமரிட்டு தக்கவைத்துக் கொள்ளும் போரியல் வளர்ச்சியும் 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு பின்னரே புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, இவையெல்லாம் புலிகளது பலத்தை அழிக்க புறப்பட்டு, புலிகளின் பலத்துக்கு கொம்பு சீவிவிட்டதாகவே 'ஜயசிக்குறுய்' சமர் தோல்வியில் முடிந்தது என்பதற்கு தெளிவான சாட்சிகள்.

புலிகளின் போரிடும் பலத்தை உளரீதியாகவோ, உடல் ரீதியாகவோ கணிசமானளவு அழிக்கும் திட்டம் பயனளிக்கவில்லை. அதன் பின்னர்தான் நிலத்தை பிடித்து புலிகளது பலத்தைக் குறைக்கும் திட்டத்தை படைத்தரப்பு கையில் எடுத்தது.

எங்கெங்கு பிடிக்கக்கூடிய நிலப்பகுதி இருந்தாலும் அதனை பிடித்துக் கொள்வது என்பது போல படை நகர்வுகள் குடிமனைகள் ஊடாகவெல்லாம் மேற்கொள்ளப்பட்டன.

இதனைத்தான் 'புல்டோசர் போர்த்திட்டம்' என்று புலிகளும் கூறுகின்றனர். எதிர்ப்படும் வீடுகளையெல்லாம் இடித்து தரை மட்டமாக்கியபடி புல்டோசர் செல்வதுபோல, புல்டோசர் போர்த் திட்டமும் குடிமனைகளையெல்லாம் பெரும் சேதத்துக்கு உள்ளாக்கியபடி நிலப்பிடிப்பில் இறங்கியுள்ளது.

எனவே புலிகள் இட்டுள்ள பெயர் பொருத்தமாகவே இருக்கிறது.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கையின் இலக்கு புலிகளது தளத்தை இருகூறாகப் பிளந்து, இராணுவ விநியோக தரைப்பாதையை திறப்பது.

தற்போதைய ரணகோஷவின் இலக்கு புலிகள் வசமுள்ள நிலங்களை பிடிப்பதுடன், புலிகளை குறுகிய நிலப்பகுதிக்குள் அடைப்பதும், இராணுவ விநியோகப் பாதையைத் திறப்பதும்.

எனவே தற்போதைய ரணகோஷவின் இலக்கு மன்னார்-பூநகரி பாதைத் திறப்பு மட்டுமல்ல, வன்னிக்குள் குறுக்காக ஒரு தரைத் தொடுப்பு முயற்சியும் பிரதான நோக்கமாக இருக்கலாம்.

மன்னார்-பூநகரி பாதைத் திறப்புப் பற்றியே பேசப்படுவதால், தரைத் தொடுப்பு உத்தி பற்றியும், அதற்காக நடைபெறும் முனைப்புக்கள் பற்றியும் வெளியே அதிகம் தெரியவில்லை.

இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால் தமக்கு பாதகம் அதிகம் என்று புலிகள் நினைக்கிறார்கள். அதனால் மாற்றுத் திட்டங்கள் தீட்டி வருகிறார்கள்.

மன்னார் பள்ளமடுவில் இருந்து நாயாற்று ஓரமாக குறுக்காக நீண்டு பெரியமடுவுடன் ஒரு தொடுப்பை ஏற்படுத்துவது படைத்தரப்பின் முதற் கட்டமாக இருக்கலாம்.

இந்த தொடுப்பு ஏற்பட்டால் நாயாறு இயற்கை அரணாக பாதுகாப்பளிக்கும். அங்கு காவலரண்களை அமைத்து கண்காணிப்பது சுலபம். புலிகள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் உள்நுழையும் பல வழிகள் தடைப்பட்டுவிடும்.

இதற்கான நகர்வுகள்தான் ரணகோஷ 03, 04 மற்றும் 04 கட்டம் இரண்டு ஆகியவற்றில் பெரியமடுவில் இருந்து மேற்கொள்ளப்பட்டன.

இத் திட்டத்தை முறியடிக்க புலிகளும் கடுமையாக சண்டையில் குதித்தனர். பாப்பா மோட்டை வரை முன்னேறிய படைகளை தடுத்து நிறுத்துவதைவிட, தரைத் தொடுப்புக்காக நகர்ந்த படைகளையே உக்கிரமாக எதிர்த்தனர்.

தற்போதுவரை இந்த தரைத் தொடுப்பு முயற்சியை புலிகள் அனுமதிக்கவில்லை. பள்ளமடுவிற்கு சில கிலோ மீட்டர்கள் முன்பாக உள்ள படையினர் பள்ளமடு சந்தியை கைப்பற்றவும், பெரியமடுவில் உள்ள படையினர் பள்ளமடு நோக்கிச் செல்லவும் பெரும் தயாரிப்புக்களில் இறங்கியுள்ளனர்.

பள்ளமடு பெரிய மடு தரைத்தொடுப்பு பூர்த்தியானால், மன்னார் பூநகரிசாலையில் பள்ள மடு முதல் மாங்குளம் வரை குறுக்காக நீண்ட இராணுவ வேலி அமைந்துவிடும்.

அதனையடுத்து மாங்குளம் முதல் ஒட்டிசுட்டான் வரை தற்போது குறுக்காக நீண்டு படையினர் நிலைகொண்டுள்ளனர். எனவே ஒட்டிசுட்டானில் இருந்து குறுக்காக நீண்டு மணலாறு வரை ஒரு தரைத் தொடுப்பு ஏற்படுத்தப்படும்.

இத் தரைத்தொடுப்பு செய்யப்பட்டால் மணலாறு ஊடாக திருமலை மற்றும் கிழக்குக்கு புலிகள் தரைப்பாதை வழியாக சென்று வருவதை தடுக்கலாம் என்று படையினர் நினைக்கலாம்.

இந்த தரைத் தொடுப்புக்கான நகர்வும் ஆரவாரமின்றி முயற்சிக்கப்பட்டுவிட்டது.

பாப்பா மோட்டையில் இருந்து ரணகோஷ நான்காம் கட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக, 22.06.99 அன்று மணலாற்றில் உள்ள படைத் தளத்தில் இருந்து இரு முனைகளால் படைகள் முன்னேற ஆரம்பித்தன.

அங்குள்ள புலிகளின் காவலரண்களை தாக்கியழித்துவிட்டு முன்செல்லவே படையினர் நகர்ந்தனர். ஆனால் அங்கு இரு முனைகளிலும் புலிகளிடம் இருந்து எதிர்ப்பு காத்திருந்தது.

கடும் சண்டையின் பின்னர் படையினர் தமது முன்னைய நிலைகளுக்கு திரும்பினார்கள். படையினரின் சடலம் ஒன்றும், ஆயுதங்கள் சிலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதன் பின்னர் மணலாற்றுப் பகுதியில் உள்ள முன்னரங்க காவலரண்கள் சிலவற்றை புலிகள் தாக்கியுள்ளனர்.

மணலாற்று படைத்தளத்தில் இருந்து நகரும் படையணிகளை எதிர்கொள்ள புலியணிகள் அப்பகுதியிலும் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களாக மணலாற்றுப் பகுதியில் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

மன்னார்-பூநகரி சாலையில் உள்ள பள்ளமடுவில் இருந்து கிழக்குத் திசையில் சுமாராக 95 கிலோமீட்டர் தூரத்தில் மணலாறு இருக்கிறது. தற்போதைய பெயர் வெலிஓயா.

இந்த 95 கிலோ மீட்டர் நீளமான தரைத் தொடுப்புக்கே படைத்தரப்பு திட்டமிடுவதாக தெரிகிறது.

இந்த 95 கிலோ மீட்டரில் ஏற்கனவே சுமார் 65 கிலோ மீட்டர் படையினர் வசம்தான் உள்ளன.

பள்ளமடுவில் இருந்து 12.05 கிலோ மீட்டர் தூரத்தில் பெரியமடு இருக்கிறது. இதனைத் தொடுக்கவே தற்போது முயற்சி நடந்து வருகிறது.

மறுபுறத்தில் ஒட்டிசுட்டானில் படையினர் நிலை கொண்டுள்ளதால், அங்கிருந்து கிழக்காக 20 கிலோ மீட்டர் தூரத்தில் மணலாறு உள்ளது. அதனை இணைக்கும் நகர்வுகளில் மணலாற்று படையினர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இந்த இரு தொடுப்பு முயற்சிகள் பூர்த்தியானால், மேற்கே நாயாறும், கிழக்கே மணலாறும் இயற்கை அரண்களாக இருக்கும். இவற்றை ஒட்டி காவலரண்களை நிறுவி புலிகளது நடமாட்டங்களை கட்டுப்படுத்துவது சுலபம் என்பது படையினரின் திட்டம்.

இந்தத் தரைத் தொடுப்பு மூலம் புலிகளை முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குள் முடக்கிவிடலாம்.

அவ்வாறு முடக்கிவிட்டால் புலிகள் முற்று முழுதான தற்காப்பு நிலைக்குள் தள்ளப்படுவார்கள். தளத்தை பாதுகாக்கும் முயற்சியில் கவனத்தை ஒன்று குவிப்பார்கள்.

அதேசமயம் மன்னார்-பூநகரி பாதையையும் பிடித்துவிட்டால், மன்னார் பெரு நிலப்பரப்புடனான முல்லைத்தள தொடர்பும் துண்டிக்கப்படும்.

பூநகரி கடற்பகுதியை புலிகள் பாவிக்கமுடியாத நிலையும் ஏற்படும். எனவே தமிழகத்துடனான விநியோகப் பாதையும், கடல் போக்குவரத்தும் பாதிக்கப்படும்.

மொத்தத்தில் புலிகளை குறுகிய நிலப் பகுதிக்குள், விநியோக தொடர்புகளும் இல்லாதளவுக்கு முடக்குவது என்பதுதான் திட்டம்.

புலிகளின் கழுத்தைச் சுற்றி இராணுவ முட்கம்பிகளை வீசுவது போன்றதே இத் திட்டம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக இதனைச் செய்து முடிப்பதே அரசின் விருப்பம்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ஆட்சியாளர்கள் இருமுனைகளில் காய்களை நகர்த்தியுள்ளனர்.

1. <u>அரசியற்களம்:</u>

திடீரென்று பிரதியமைச்சர்கள் எண்ணிக்கை வானளவு உயர்ந்துள்ளது. 43 பிரதியமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரேமதாசா அரசில் அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகம். அதனால் பண விரயம். நாம் பதவிக்கு வந்தால் இதற்கு முடிவு கட்டுவோம். 20 அமைச்சர்கள் மட்டுமே இருப்பர் என்றுகூறியவர் ஜனாதிபதி சந்திரிக்கா. தற்போது அவரது அமைச்சரவை 75 பேரைக் கொண்டதாக உள்ளது.

தேர்தல் பணியில் அதிகாரத்தோடு செயற்பட வசதியாகவே இந்த பிரதியமைச்சர் நியமனங்கள் அவசரமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு வருடமே ஆட்சிக்காலம் உள்ளபோது நடைபெற்ற இத்திடீர் நியமனங்கள் அதிகாரத்தை தேர்தல் வெற்றிக்கு பயன்படுத்தும் தந்திரமே என்பது இரகசியமல்ல.

எனவே எப்பாடுபட்டாயினும் தேர்தல் வெற்றியே அம்மையாரின் நோக்கம் என்பதும், அதற்காக சிங்கள மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளைக்கூட காற்றில் பறக்கவிட தயங்கமாட்டார் என்பதும் துல்லியமாக தெரிந்துவிட்டது.

02. <u>போர்க்களம்:</u>

புதிய ஆயுத தளபாடங்கள் அவசரமாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மன்னார்-பூநகரி பாதைத் திறப்பு ஆரவாரத்தோடு ஜனாதிபதி தேர்தலை சந்திக்கவே அம்மையார் விரும்புவதாக தெரிகிறது. அதற்காக என்ன விலை கொடுக்கவும், எந்த பேரழிவை ஏற்படுத்தவும் ஆட்சியாளர்கள் தயாராதான்.




ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் புலிகள் வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதல்களை நடத்தாது இருப்பதற்கு படைத் தரப்பு அம்மையாருக்கு உத்தரவாதம் கொடுத்தாக வேண்டும். ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து சூட்டோடு சூடாக பாராளுமன்ற தேர்தலையும் நடத்தியாக வேண்டும்.

எனவே, தேர்தல் காலத்தில் புலிகள் பாய்ச்சல்கள் நடத்தாது இருக்க வேண்டுமானால், அவர்களை விரைவாக முடக்கி குறுகிய நிலப் பரப்புக்குள் முற்றுகை நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதே படைத்தரப்பின் அவசரம்.

களமுனையில் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தினால்கூட தேர்தலில் அம்மையாரின் வெற்றிப் பிரசாரத்திற்கு சேதம் ஏற்பட்டுவிடும்.

ஆகவே, பாதைத் திறப்பும் முக்கியம். தரைத் தொடுப்பு மூலம் புலிகளை முடக்கி வைத்திருப்பதும் அவசியம் என்ற நிலையில்தான் அரசும், படையினரும் தமது 'புல்டோசர் போர்த் திட்டத்தை' வரைந்துள்ளனர்.

ஆனால் இத்திட்டம் வெகு நேர்த்தியாக இருந்தாலும்கூட, களமுனையில் எதிர்பார்த்த பலன்களை அளிக்கப் போவதில்லை.

பள்ளமடு பெரியமடு இணைப்பை ஏற்படுத்தவும், பள்ளமடுவை கைப்பற்றவும் படைத்தரப்பு பேரிழப்பை சந்தித்துள்ளது.

புலிகள் தரப்பில் 84 புலிகள் பலியாகியுள்ளனர். பெரும்பாலானோர் பெண் புலிகள். மகளிர் படையணியே முக்கிய பங்கு வகித்து படை நகர்வை தடுத்து நிறுத்தியது.

புலிகளது ஆட்டிலறி தாக்கியழிக்கப்பட்டதாக படைத்தரப்பு கூறியதை புலிகள் மறுத்துள்ளனர்.

களமுனைக்கு ஆட்டிலெறியை கொண்டு வரும் தேவை புலிகளுக்கு இல்லை. பாப்பா மோட்டையில் இருந்து நகர்ந்த படையினர்மீது பள்ளமடு சந்தியில் இருந்து எறிகணை வீச்சு நடத்த ஆட்டிலெறி அவசியமில்லை. நீண்டதூர மோட்டார்களே போதும்.

அதேபோல படைகள் நகரும்போது தன்னாடி முகாம்மீது புலிகள் எறிகணைத் தாக்குதல் நடத்திமிருந்தனர். இதற்கும் ஆட்டிலெறி தேவையில்லை. விடத்தல்தீவில் இருந்து நீண்டதூர மோட்டார் மூலம் தன்னாடி முகாமுக்கு எறிகணை ஏவலாம்.

விமானங்கள் பறப்பில் ஈடுபடும்போது ஆட்டிலெறிகளை புலிகள் நகர்த்த மாட்டார்கள். ஏவு தளத்தில் ஆட்டிலெறிகள் உருமறைப்பு செய்யப்பட்டே வைக்கப்பட்டிருக்கும். எனவே இனம் கண்டு தாக்கமுடியாது. நிதானமாக தாழப் பறந்து இலக்கறியக் கூடிய சூழல் இல்லை. புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளன.

ரணகோஷ 04 கட்டம் இரண்டு போட்ட திட்டப்படி பூர்த்தியாகமல் போய்விட்டது என்றே செய்திகள்மூலம் தெரிகிறது.

எனவே, சகல முனைகளிலும் புலிகள் பாரிய சண்டைகளுக்கு தயார் நிலையிலேயே உள்ளனர். நிலங்களை பிடிப்பதால் புலிகளது பலத்தை குறைக்கலாம் என்பது நூற்றுக்கு இருபது வீதம் மட்டுமே பலிக்கும். மிகுதி எண்பது வீதம் பலிக்காது.

ஏனெனில் புலிகளது பலம் நிலம் மட்டும் சார்ந்தது அல்ல. அவர்களது உளவியல் மற்றும் தாம் ஏன் போரிடுகிறோம் என்பதற்கான காரணங்களிலேயே புலிகளது பலம் தங்கியுள்ளது.

தரைத் தொடுப்பு முயற்சியை முறியடிக்க பாரிய உடைப்பொன்றை மேற்கொள்ளக்கூடிய பலம் புலிகளிடம் இருக்கிறது. மணலாற்றில் இருந்து நகரும் படையணிகளையும், அங்கு தரைத்தொடுப்புக்கு நிலைகொள்ளும் படையினரையும் எறிகணைகள் மூலம் புலிகள் பலத்த சேதத்துக்கு உள்ளாக்குவர்.

மணலாற்றில் சிங்கள மக்களது குடியிருப்புக்களும் இருப்பதால் புலிகளது எறிகணை வீச்சுக்கள் பலத்த நெருக்கடியை ஏற்படுத்தி விடும். எனவே மணலாறு ஒட்டிசுட்டான் தரைத் தொடுப்பு நகர்வுகள் மணலாற்று படையினருக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்துவதில் முடியலாம்.

அதேநேரம் மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றி, பூநகரியில் கடற்படைத் தளம் அமைத்தால் புலிகளது கடற் போக்குவரத்து தடைப்படும் என்ற கணிப்பும் ஓரளவுதான் பலிக்கும்.

புலிகளுக்கு முல்லைத்தீவு கடற்பகுதி ஊடாகவும் தமிழகத்துக்கு செல்ல முடியும். சர்வதேச கடல் எல்லைக்கும் போக முடியும். கிழக்குக்கும் செல்ல இயலும். ஆனால் மன்னார் கடலை பயன்படுத்துவதும், பூநகரி ஊடாக குடாநாட்டுக்கு செல்லுவதும் தற்போதுள்ளதைவிட சற்று சிரமமாகும். அவ்வளவுதான்.

முன்னரும் பூநகரியில் கடற்படைத் தளம் இருந்தது. அத் தளம் இருந்தபோதுதான் யாழ் குடாநாட்டில் இருந்து கடல் மார்க்கமாக வன்னிக்கு தளத்தை மாற்றினார்கள் புலிகள்.

கடற்படையினர் கடலில் நீண்ட வரிசையாக நின்று புலிகளை தடுக்க முடியாது. எப்போதாவது ரோந்தின்போது எதிர்பாராத மோதல்கள் ஏற்படும். அதேவேளை கடற் புலிகளும் தாக்குதல் நடத்த இலக்குகள் கிட்டும்.

எனவே, படைத்தரப்பு ஒரு திட்டம் வரைந்தால், அதற்கு மாற்றான திட்டத்தை வரைந்து கொள்ள வசதியான போரிடும் வளமும், திறனும் புலிகளிடம் இருக்கிறது.

அதனால் தரைத் தொடுப்பு, மன்னார் பூநகரி பாதைத் திறப்பு நகர்வுகளால் புலிகளை முடமாக்கும் 'புல்டோசர் போர்த்திட்டம்' எதிர்பார்க்கும் வெற்றிகளை பெறப்போவதில்லை.

இதற்கிடையே 84 புலிகள் ரணகோஷ 04 கட்டம் இரண்டில் பலியானதால், படைகளுக்கு மேலும் ஒரு பலத்த இழப்பை கொடுக்கும் திட்டத்தோடு புலிகள் தாக்குதல் ஒன்றுக்கு காத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

அம்மையாரும் காத்திருக்கிறார். அவர் காத்திருப்பது ஜனாதிபதித் தேர்தலில் தன் கரங்களை உற்சாகமாக அசைத்து வெற்றிப் புன்னகை சிந்த வசதியான களச் செய்திக்காக! 'புல்டோசர் போர்த் திட்டம் புன்னகையை பெற்றுத் தருமா? என்பதை களநிலவரங்கள்தான் உணர்த்தப் போகின்றன.

## அதிரடி அய்யாத்துரை



**வடமராட்சியில்** கரும்புலித் தாக்குதலில் பலியானவர் லரி விஜயரத்னா. அவரது துணைவியாருக்கு பிரிகேடியர் பதவி கிடைத்திருக்கிறது. இராணுவ சட்டத் துறையில் பணியாற்றுகிறாராம். இலங்கை அரச படையில் பெண் ஒருவர் பிரிகேடியராவது இதுதான் முதல் தடவை! ரெண்டு எழுத்தாருக்குள் பல பெண்கள் உயர் பதவிகளில் உள்ளனர்.

**கொழும்பில் தமிழ்** மக்களிடம் நடன அரங்கேற்றக் காய்ச்சல் தொற்றி வருவது பற்றி முன்னரும் கூறியிருந்தேன். பிள்ளைகளுக்கு அரங்கேற்றம் செய்வது பெற்றோர் விருப்பம். உரிமை. நல்லாச் செய்யட்டும். அதுக்காக அளவுக்குமீறி செலவழிக்க வேணுமோ? சமீபத்தில் தலைநகருக்கு நடிகை பத்மினியை அழைத்து தனவந்தர் ஒருவர் தன் மகளுக்கு அரங்கேற்றம் நடத்தினாராம். செலவு பத்து இலகரமாம். நினைவுப் பரிசாக யாவருக்கும் தட்டுக்களும் தரப்பட்டதாம். அரங்கேற்றத்தை எளிமையாக நடத்திவிட்டு, முடிவில் அகதிகளுக்காக ஒரு தொகையை அறிவித்திருந்தால் மாமனிதர் என்று புகழ்ந்திருக்கலாம். தட்டுக்கள் கொடுப்பதற்குப் பதிலாக வெறுமையாகக் கிடக்கும் உணவுத் தட்டுக்களை நிரப்ப மனது வைத்திருக்கலாம்! இனிமேல் ஏனையோராயினும் செய்வார்களாக!

**அதிகாரமுள்ளோரின் எண்ணிக்கையை** அதிகரித்தது காரணத்தோடுதானாம். தேர்தல் வேலைகளுக்கு சீருடைத்தரப்பார் உட்பட பலரையும் கட்டிப் போட்டுவிட்டு வித்தை காட்ட 'பவர்' உள்ளவை அதிகம் இருப்பது நல்லதுதானே? அதிகாரத்தரப்பு வெகுஜனப் பிரதிநிதிகள் கேட்ட அதிகாரம் இதுதான். தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கொடுப்பதற்கு மனமிருக்காதே தவிர. இந்த மாதிரியான அதிகாரங்களைப் பகிர்வதில் இன்றைய அதிகாரத்தரப்பாரும் சளைத்தவர்கள் அல்ல, அல்ல.

**வைத்தியர்களது** வேலை நிறுத்தத்தைக் கண்டித்து தமிழ்க் கட்சிகள் அறிக்கை விட்டிருந்தவை. அதுவும் கூட்டறிக்கை! வேலை நிறுத்தம் ஆரம்பித்து பலவாரங்கள் சென்ற பின்னர்தான் பத்திரிகைகள் கருத்துக் கேட்டு உசுப்பிய பிறகு அறிக்கைகள் விட்டவை! அடடே இந்த விஷயத்தில் அறிக்கை விட்டால் அதிகாரத்தரப்பாருக்கும் ருசியாக இருக்குமே என்று விளங்கிக் கொண்டுதான் கூட்டறிக்கையோ? செம்மணி புதைகுழி சந்தேகங்கள், அரியாலை புதைகுழி என்று எத்தனையோ விஷயங்களில் கூட்டறிக்கைவிடத் தோன்றவில்லையாக்கும்!

**ரெண்டு எழுத்தாரின்** 'கரும்நாளில்' அதிகார சக்தியானவர் தலைநகரில் இருப்பதில்லை. அந்த வழக்கம் இம்முறையும் தொடர்ந்திருக்கிறது. பிற நாட்டுக்குப் பறந்து சென்றுவிட்டார். சர்வ அதிகாரமுள்ளவருக்கே சர்வ நிச்சயமான பாதுகாப்பில்லைப் பார்த்தியளோ?! போன இடத்தில் கூட சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

**சர்வ அதிகாரமுள்ளவர்** சென்ற நாட்டில் இலங்கைத் தமிழர்கள் சிலர் கைதாகினர். அதனை திரும்பத் திரும்ப செய்தி ஊடகங்கள் சொன்னதும் தெரியுமல்லோ? அத்தனைபேரும் வெளிநாடு செல்லப் போன ஆட்களாம். ஒரே விடுதியில் இருந்தால் தங்கள் சுழியோட்ட வேலைகள் மாட்டுப்படும் என்று விடுதிகள் மாறிமாறி இருந்தவையாம். அவை எதுக்கோ மிரள, அவையைக் கண்டு அந்தநாட்டுக் காவல்துறை மிரள, விளைவு: கம்பி எண்ணுகினம். பாவம் அந்த 'எலிகள்'.

**வவுனியாவில் கழகத்தினர்** மட்டும் ஆயுதங்களோடு பகிரங்கமாக நடமாடுவதில்லையாம். போட்டி இயக்கத்தினர் மட்டும் ஆயுதங்களோடு நடமாடுகிறார்களாம். கழகத்தினர் மறைவாக வைத்திருக்கிறார்கள்.

**செம்மணியைத் தோண்டியிருக்காது** விட்டால் தாம் பெரும் போராட்டம் நடத்தத் திட்டம் வைத்திருந்ததாக தமிழ்க் கட்சி தலைவர் ஒருவர் வெளிநாட்டு வானொலி ஒன்றுக்கு செப்பியுள்ளாராம். "இப்போதுகூட ஒழுங்காகத் தோண்டியாச்சு என்றோ சொல்ல வருகிறீர்கள்? மண் ஆய்வு அறிக்கையில் சந்தேகங்கள் கூறப்பட்டுள்ளதே? வேறு புதைகுழிகளும் இருக்கிறதாமே! அவற்றுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று அடுக்கடுக்காக கேள்விகள் கேட்டாராம். செய்தியாளர். தலைவர் திணறிப்போனாராம்!

**'செம்மணியில் எலும்புகள்** பற்றி விசாரணை. வேறு புதைகுழிகள் உள்ளனவா என்றும் யாழில் விசாரிக்கப்படும்' இப்படி ஒரு செய்தியைப் பார்த்தேன். அழுவதா? சிரிப்பதா? "எங்கே குழிகள் உண்டு என்று காட்டுகிறோம்" என்று ஒற்றைக்காலில் நிற்கிறார் ராஜபக்ஷ. "நாங்களும் காட்டுகிறோம். அழைத்துப்போங்கோ" என்கிறார்கள் ஏனைய இரண்டுபேர்! பின்னர் யாரிடம் விசாரணை? 'கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?' 'இருக்கும் இடம் விட்டு இல்லாத இடம் தேடி அலைவாரடி ஞானத்தங்கமே!' இதனைக் கேட்க யாருமில்லையடி ஞானத்தங்கமே!

**தலைநகரில் வெள்ளவத்தை** போன்ற பகுதிகளில் தமிழர்கள் தங்கள் வீடுகளை தாங்களே இடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வீட்டுக்குப் பதிலாக, இடித்து தொடர்மாடி கட்டினால் வருமான இடர் தீரும்! வளம் சேரும்! வீட்டு விலை, வாடகை ஏற்றம்! தொடர்மாடி திட்டம் தக்க பயன் தருகிறதாம்! வடக்கு-கிழக்கு மக்கள் தலைநகருக்கு இடம் பெயர்வதால்தான் இந்த மாற்றங்களாம்.

இந்த வாரப் பொன்மொழி;

"ஓநாய்களிடம்
அன்பு செலுத்துவது
ஆடுகளுக்கு
கொடுமை செய்வதாகும்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

# தள முற்றுகையும் தரையிறக்கமும்

ஆனையிறவு முற்றுகை சமர் தொடங்கிய நான்காம் நாள். 13ம் திகதி. மூன்றாவது தாக்குதலுக்கு புலியணிகள் தயாராகின.

தளபதி பால்ராஜ் தலைமையில் தாக்குதலணிக்கு சூசை பொறுப்பேற்க, அவருக்கு உதவியாக மகளிர் அணித் தளபதிகளில் ஒருவரான ஜனாவும் தலைமை தாங்கினார்.

உப்பள அலுவலக முகாமை கைப்பற்றுவதுதான் மூன்றாவது தாக்குதலின் இலக்காகக் குறிக்கப்பட்டிருந்தது.

உல்லாச விடுதி முகாம் புலிகளால் ஏற்கனவே கைப்பற்றப்பட்டிருந்ததால், அங்கிருந்துதான் உப்பள முகாமை நோக்கி புலியணிகள் செல்ல வேண்டும்.

புல்டோசரை முன்னால் நகர விட்டுத்தான் இங்கும் முன்னேறத் திட்டமிட்டனர். புல்டோசரின் பின்புறமும், புகையிரதப் பாதை வழியாகவும் அணிகள் செல்வது என்று முடிவானது.

உல்லாச முகாமை கைப்பற்றும் நடவடிக்கையில் புல்டோசர் தாக்குதலே பெரும் பங்கு வகித்தது.

அப்போது புல்டோசரை ஓட்டிச் சென்று கச்சிதமாக காரியத்தை முடித்தவர் கேசரி.

எனவே, உப்பள முகாம் மீதான தாக்குதலுக்கும் புல்டோசரை கேசரியே ஓட்டிச் சென்றார்.

உல்லாச விடுதியில் இருந்து உப்பள முகாமுக்கு அகலம் குறைந்த நிலப்பகுதி ஊடாகவே செல்லவேண்டும். தார்ப் பாதையையும், புகையிரதப் பாதையையும் உள்ளடக்கியதாகவே அச்சிறிய நிலப்பகுதி இருந்தது.

எனவே, அந்த நிலப்பகுதியை புலிகள் கடக்க முடியாதபடி வரிசையாக பொறி வெடிகளை படையினர் விதைத்து வைத்திருந்தனர்.

அதனைக் கடப்பதற்கு புலிகள் ஒரு உத்தியைக் கையாண்டனர்.

உரல் வடிவிலான மரக்குற்றிகள் பலவற்றை செய்து வைத்திருந்தனர். அவற்றை உருட்டிக்கொண்டு நகர்ந்தனர். அவற்றின்மேல் பொறி வெடிகள் இருந்தால் மரக்குற்றிகள் உருண்டதும் வெடித்துவிடும்.

## புல்டோசர்

பிரதான பாதையூடாக சென்ற புல்டோசர் உப்பள முகாமுக்குள் புகுந்துவிட்டது.

முகாமுக்குள் புகுந்து விட்டதால், அடுத்ததாக காவலரண்களை இடித்த தகர்க்க வேண்டும்.

அந்த வேலையை ஆரம்பிக்கும்போது படையினர் கடும் தாக்குதலை தொடுத்தனர்.

ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சரால் புல்டோசரை நோக்கி தாக்கியதுடன், புல்டோசரை செலுத்திய கேசரியை நோக்கியும் தாக்குதல் நடந்தது.

துல்லியமான தாக்குதல் என்றே கூற வேண்டும். புல்டோசர் தடுத்து நிறுத்தப் பட்டதுடன், அதனைச் செலுத்திய கேசரியும் பலியானார்.

உப்பள முகாம் மீதான தாக்குதல் திட்டத்தில் இது முதலாவது பின்னடைவாகியது. புல்டோசரை செலுத்துவதில் வல்லவரான கேசரியின் இழப்பும் பெரும் இழப்பாகியது.

அவ்வாறு இருந்தும் புலிகளது இன்னொரு தாக்குதல் அணி மேஜர் ரெட்டி அல்லது ரட்ணராஜ் தலைமையில் உப்பள முகாமுக்குள் புகுந்தது.

அவர்கள் காவலரண்களை குறி வைத்து தாக்குதல் தொடுத்தனர். இத் தாக்குதலில் பல காவலரண்கள் புலிகளின் கையில் வீழ்ந்தன.

மேஜர் ரெட்டியின் தலைமையிலான அணி கைப்பற்ற வேண்டிய காவல் அரண்களில் ஒன்று மிகப் பலமானது.

இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப் பட்டு பலமாக அரண் செய்யப்பட்ட அந்த காவலரணை நோக்கி ரெட்டி தலைமையிலான அணி தாக்குதலை தொடங்கியது.

படையினரின் துப்பாக்கிகளும் தீப்பொறிகளை கக்க ஆரம்பித்தன. அவர்களும் உக்கிரமாக சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இச் சண்டை நடைபெறும்போது அதே காவலரணை வேறு முனையால் நெருங்குவதற்கு புலிகளது சிறு அணி ஒன்று தந்திர நகர்வு ஒன்றை மேற்கொண்டது.

அந்த சிறிய அணி நகர்ந்து காவலரணை எட்ட முன்பாகவே, ரெட்டி தலைமையிலான அணி அக் காவலரணை பக்கவாட்டில் தாக்கி கைப்பற்றிவிட்டது. எனவே பலமான காவல் அரணும் புலிகளின் கைகளில் வந்துவிட்டது.

அக் காவலரண் கைப்பற்றப்பட்டுவிட்டது என்ற தகவல் மறுமுனையால் சென்ற சிறிய அணிக்கு தெரியவில்லை.

ரெட்டி தலைமையிலான அணி காவலரணை கைப்பற்றிய பின்னரும், சிறிய அணி அக் காவலரணை நோக்கி தாக்கிக் கொண்டிருந்தது.

இப்போது காவலரணில் நிற்பதும் புலிகள். அவர்களை தாக்குவதும் புலிகள்.

இத்தகைய தருணங்களில் 'வோக்கி டோக்கி' மூலம் அணித் தலைவர்கள் தமக்கிடையே தொடர்பு கொள்வர். சந்தேகங்களை தீர்த்துக் கொள்வர்.

ஆனால் அப்போது என்று பார்த்து சிறிய அணியின் பொறுப்பாளருடன் ரெட்டிக்கு தொடர்பு கிடைக்கவில்லை.

## தொடர்பில்லை

அதனால் தாக்குதலணி தளபதியான சூசையுடன் வோக்கி டோக்கியில் தொடர்பு கொண்டு தகவலைக் கூறினார் ரெட்டி.

"குறித்த அரணை நாம் கைப்பற்றி விட்டோம். அதனால் தாக்குதலை நிறுத்தச் சொல்லுங்கள்." என்று சூசைக்கு அறிவித்தார் ரெட்டி.

தளபதி சூசையும், தளபதி பால்ராஜும் அந்த சிறிய அணியை வோக்கி டோக்கியில் தொடர்புகொள்ள முயன்றனர் முடியவில்லை.

படையினரின் தாக்குதலால் அந்த சிறிய அணியின் பொறுப்பாளரது 'வோக்கி' சேதமடைந்திருக்கலாம் என்று உணர்ந்து கொண்டனர்.

எனவே, இந்த சிக்கல் 30 நிமிடம் வரை நீடித்தது. சிறிய அணி சளையாது தாக்கிக் கொண்டிருந்தது.

பின்னர் மேஜர் ரெட்டியின் அணியில் இருந்து ஒரு உறுப்பினரை நேரடியாக அனுப்பி செய்தியை அறிவிக்குமாறு தளபதி சூசை உத்தரவிட்டார்.

அதன்படியே சொல்லியனுப்பி தாக்குதல் நிறுத்தப்பட்டது. அதன் பின்னரே மேஜர் ரெட்டியின் தலைமையிலான அணியினர் முன்னேறிச் சென்று தாக்குதலை தொடுத்தனர்.

இந்த அனுபவம் மூலம் சண்டையில் தகவல் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவத்தையும் உணர்ந்துகொள்ளலாம்.

பரந்த அளவில், குறிப்பாக இரவு நேரத்தில் சண்டைகள் நடைபெறும்போது தகவல் தொடர்பு மிக முக்கியமானது.

ஒரு அணியின் தலைவருக்கு வோக்கி டோக்கி பழுதடைந்தால் பெரும் சிக்கல்கள் உருவாகும்.


அதனால் தற்போதெல்லாம் ஒரு அணிக்கு மேலதிக வோக்கி டோக்கிகளும் தரப்படுகின்றன. ஒன்று பழுதடைந்தாலோ, சேதமடைந்தாலோ இன்னொன்றைப் பயன்படுத்தலாம்.

ஆரம்ப காலம் முதற்கொண்டே பிரபாகரன் தகவல் தொடர்பு சாதனங்கள் விடயத்தில் மிக அக்கறை எடுத்துக் கொண்டார். ஏனைய இயக்கங்கள் இந்தியா கொடுத்த தரம் குறைந்த மிகச் சில 'வோக்கி டோக்கி'களையே பயன்படுதிக் கொண்டிருந்தன.

ஆனால் புலிகள் அப்போதே வெளிநாட்டில் பணம் கொடுத்து நவீன வோக்கி டோக்கிகளை வாங்கி தாராளமாக பயன்படுத்தினார்கள். தகவல் தொடர்பு விடயத்தில் அன்றுமுதல் இன்றுவரை புலிகள் தமது வளங்களை பெருக்கியே வந்துள்ளனர்.

இந்த அக்கறை இருக்கவில்லையானால் இன்று வன்னிக்கும் வெளியுலகுக்குமான தொடர்புகளே அறுந்து போயிருக்கும். அரசின் தடைகள், தணிக்கைகளைமீறி உலகெங்கும் புலிகளது தகவல்கள் இன்று எட்டிக் கொண்டிருக்கின்றன.






1. உப்பளப் பகுதி முகாம்
2. ஆனையிறவுத் தடைமுகாம்
3. பழைய சந்தைப் பாதை
4. நித்தியவெட்டை
5. சங்கத்தான் வயல்
6. வாடியடிச் சந்தி
7. புல்லாவெளி
8. கட்டைக் காடு
9. இயக்கச்சி
10. முள்ளியான்
11. வெற்றிலைக்கேணி
12. முகாவில்



மேஜர் கேசரி

## சண்டை தீவிரம்

காவலரண்கள் பலவற்றை கைப்பற்றிய போதும் உப்பள முகாமை கைப்பற்றும் சண்டை புலிகள் எதிர்பார்த்தது போல சாதகமாக முடியவில்லை.

புல்டோசரும் செயல் இழந்ததால் முகாமுக்குள் உள்நுழைந்து தாக்குவது சிரமமாக இருந்தது.

படையினரின் இயந்திரத் துப்பாக்கிகள் ரவைகளால் தடுப்புவேலி அமைத்துக் கொண்டிருந்தன.

மிக அருகில் நின்று படையினரும், புலிகளும் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

முகாமுக்குள் உள்நுழைய முற்பட்ட புலிகளை படையினரின் துப்பாக்கிகள் வீழ்த்திக் கொண்டிருந்தன.

அகலம் குறைந்த பாதை என்பதால் படையினரின் துப்பாக்கிகளுக்கு சாதகம் கூடுதலாக இருந்தது. குறிவைத்து சுட்டு நிறுத்துவதும் இலகுவாக இருந்தது.

முன்னேறித் தாக்கும் அளவுக்கு படையினரின் கைகள் உயர்ந்து கொண்டிருந்தன.

புலிகள் தொடர்ந்து தாக்கிக்கொண்டே இருந்தனர். இழப்புக்கள் அதிகமாகிக் கொண்டிருப்பதை அறிந்த தளபதி பால்ராஜ் சண்டையை நிறுத்திவிட்டு உல்லாச முகாமுக்கு திரும்புமாறு உத்தரவிட்டார்.

இறுதியில் காவலரண்களில் கைப்பற்றிய ஆயுதங்களுடன், அங்கிருந்து உல்லாச முகாமை நோக்கி புலிகளது அணிகள் பின் வாங்கின.

இச் சண்டையில் 52 புலிகள் பலியாகினர். இச் சண்டையை முன்னின்று நடத்தியவர் மேஜர் ரெட்டி அல்லது ரட்ணராஜ் (தம்பிப் பிள்ளை அந்தோனிதாசன்- மன்னார்). இவர் பின்னர் 12.09.91 அன்று வேறொரு மோதலில் பலியாகிவிட்டார்.

## தரையிறக்கம்

ஆனையிறவு முகாம் முற்றுகைபற்றி கொழும்பில் பல்வேறு தகவல்கள் பரவிய வண்ணம் இருந்தன.

முகாமுக்குள் உள்ள படையினர் சரணடையப் போவதாகவும் தகவல்கள் உலாவின. எதிர்க்கட்சிகளும் கதைகள் பலவற்றை கட்டி விட்டனர்.

முகாம் முற்றுகையை முறியடிப்பதற்கு தரையிறக்கம் ஒன்றுக்கு படையினர் திட்டமிட்டனர்.

ஆனையிறவு தள முற்றுகையை புலிகள் ஆரம்பித்த ஐந்தாவது நாளான 14ம் திகதி படையினர் புதிய போர்முனை ஒன்றை திறந்தனர்.

ஆனையிறவை சூழ்ந்துள்ள புலிகளை வேறு முனைக்கு சண்டைக்கு இழுப்பதும், புலிகளை பலவீனப்படுத்திக் கொண்டு ஆனையிறவு தளத்தை சென்றடைவதுமே புதிய போர்முனைத் திறப்பின் நோக்கமாக இருந்தது.

முப்படைகளும் இணைந்த ஒரு நடவடிக்கையாக இது அமைந்தது. எனினும் இந்த நடவடிக்கைக்கு தளபதி டென்சில் கொப்பேகடுவதான் முக்கிய நாயகன்.

வான்படை மேலே கண்காணித்து பறக்க, கடற்படை பீரங்கிப் படகுகள் கரையை நோக்கி குண்டுகளை வீசிக்கொண்டிருக்க, கடற்கலங்கள் மூலம் ஆயிரக்கணக்கான படையினரை வெற்றிலைக் கேணியில் இறக்க திட்டமிடப்பட்டது.

ஆனையிறவு தளம்மீதான தாக்குதல் தொடங்கப்பட்ட மறுநாளில் இருந்தே வெற்றிலைக் கேணி கடற்பரப்பில் கடற்படைக் கப்பல்கள் நங்கூரமிடத் தொடங்கிவிட்டன.

14ம் திகதி மாலை ஐந்து மணியளவில் வெற்றிலைக்கேணி கடலில் பத்துக்கு மேற்பட்ட விசைப்படகுகள் தோன்றின.

அவற்றில் இராணுவத்தினர் இருந்தனர். கரையை நோக்கிப் படகுகள் விரைந்தன.

தரையிறக்கத்தை எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புலிகள் படகுகளை நோக்கித் தாக்கத் தொடங்கினார்கள்.

கரையை அண்மிக்க முன்பாகவே புலிகள் தாக்குதலை ஆரம்பித்தமையால், இரண்டு படகுகள் கடலுக்குள்ளேயே சேதமடைந்தன.

அதனால் சேதமடைந்த படகுகளை மீட்க ஏனைய படகுகள் போராடின. மீட்டுக் கொண்டு மறுபடி கப்பலுக்கு திரும்பினார்கள்.

## மறுபடியும்

தாக்குதலுக்கு பயந்து பின்வாங்கியது போல பாவனை காட்டி பதுங்கிக்கொண்ட படகுகள், சிறிது நேரத்தின பின்னர் மறுபடி படையினரை சுமந்துகொண்டு கரையை நோக்கி சீறிச் சென்றன.

இம்முறை கட்டைக்காடு பக்கம் நோக்கி பதினைந்து படகுகளில் இராணுவத்தினர் விரைந்தனர்.

தரையிறக்கத்தை எதிர்பார்த்து புலிகள் நின்றபோதும், கரைப் பகுதி முழுவதும் நீளமாக நிலைகொள்ளும் அளவுக்கு புலிகளது ஆட்பலம் இருக்கவில்லை.

அப்போது எறிகணைப் பலமும் தற்போதுள்ளதுபோல புலிகளிடம் இருக்கவில்லை. தவிர விமானப் படையினரின் தாக்குதலும் கரையில் புலிகள் நீண்டு நிலைகொள்வதை இயலாததாக்கியது.

விசைப்படகில் விரைந்த படையினர் கட்டைக்காடு பகுதியில் தரையிறங்கினார்கள்.

தரையிறங்கிய இராணுவத்தினரை நோக்கி புலிகள் விரைந்தனர். இரு தரப்பினரும் மிக அருகில் நின்றபடி தங்கள் துப்பாக்கிகளால் பேசிக்கொண்டனர்.

இந்த சண்டையில் வெற்றிலைக்கேணி கட்டைக்காடு சண்டைக்கு பொறுப்பான புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் குட்டி பலியானார்.

தரையிறக்கத்தை தடுக்கும் முதல்நாள் சமரில் புலிகளுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு இது.

சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கப்பல்களில் இருந்த படையினர் படகுகளில் வந்து அணி அணியாக தரையிறங்கிக் கொண்டிருந்தனர்.

தரையிறங்கிய படையினரைவிட எண்ணிக்கையில் மிகக் குறைவான புலிகளே கரையில் நின்று சண்டையிட்டனர்.

## இருமுனைகள்

14ம் திகதிக்கு பின்னர் சண்டை இரு முனைகளை கொண்டதாக மாறியது. ஆனையிறவு ஒருமுனை. வெற்றிலைக் கேணி மறுமுனை.

இதில் ஆனையிறவு முகாம்மீது தாக்குதல் போர்முறையையும், வெற்றிலைக் கேணியில் தரையிறங்கிய படைமீது தற்காப்புப் போர் முறையையும் புலிகள் கையாண்டனர்.

தரையிறக்கப்பட்ட படைகளை அடுத்து கவச வாகனங்களும் தரையிறக்கப்பட்டன. முதலில் தரையிறங்கிய படையினர் குறிப்பிட்ட பகுதியை தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த பின்னரே கவச வாகனங்கள் கரைக்கு வந்து சேர்ந்தன.

தரையிறக்கப்பட்ட படைகளை இரு மருங்கிலும் நெருங்கிச் சென்று புலிகள் தாக்கினார்கள்.

படையினர் தமது பலத்தை ஒன்று குவித்து தாக்கியதுடன், முழு சுடுபலத்தையும் பிரயோகித்தனர்.

இதனால் பலியான தமது உறுப்பினர்களது உடல்களை புலிகளால் மீட்க முடியாமல் போய்விட்டது.

கவச வாகனங்கள் இறக்கப்பட்ட பின்னர் தமது நிலைகளை படையினர் இரவோடு இரவாக பலப்படுத்திக் கொண்டனர்.

## தாக்குதல்

எப்படியாவது அன்றிரவே ஒரு தாக்குதலை நடத்தியாக வேண்டும் என்று புலிகள் திட்டமிட்டனர்.

தரையிறங்கிய படைகள் மூச்சுவிட அவகாசம் கொடுக்காது தாக்குதல் நடத்த புலிகளின் அணியொன்று விரைந்து அனுப்பப்பட்டது.

தரையிறக்கப்பட்ட படைகளது தற்காலிக தலைமையகம்மீது திடீர் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

அத்தாக்குதல் புலிகளுக்கு வெற்றியாக அமைந்தது. தரையிறங்கிய அரச படையணிகளது தளபதி பலியானார். லெப்டினன்ட் கேணல் அஞ்சலோ பீரிஸ்தான் பலியான அதிகாரியாவார்.

இந்த அதிரடித் தாக்குதலை நடத்திய புலிகளது அணிக்கு மேஜர் யாசின் தலைமை தாங்கிச் சென்றார்.

இவர் பலாலியில் நடைபெற்ற சண்டை ஒன்றில் தனது கையொன்றை இழந்திருந்தார்.

ஒரு கை இல்லாதபோதும் சண்டை அணிக்கு தலைமை தாங்கிச் சென்று குறித்த இலக்கையும் தாக்கி முடித்திருந்தார்.



மேஜர் ரட்ணராஜ்

மறுநாள் நடந்த சண்டையில் மேஜர் யாசின் பலியாகிவிட்டார்.

தரையிறக்கப்பட்ட படைகள் 15ம் திகதி பி.பகல் 2.30 மணியளவில் ஆனையிறவு தளம் நோக்கிய தமது நகர்வை ஆரம்பித்தன.

புலிகள் எதிர்த்து தாக்குதல் தொடுத்தனர். இருள் சூழும்வரை சண்டை நடந்தது.

படையினர் 200 யார் தூரம் வரையே புலிகளது எதிர்ப்பை தாண்டி அச் சண்டையில் முன்னேற முடிந்தது.

பற்றைகளும் மரங்களும் கொண்ட பகுதியும், பரந்த வெளியுமாக இருந்த பிரதேசத்தில் தமது அரண்களை பற்றைப் பகுதிகளுக்குள் அமைத்து அடுத்த சண்டைக்கு தயாராகினர் புலிகள்.

அதேநேரம் ஆனையிறவு தள முற்றுகையும் தொடர்ந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது - இராஜதந்திரி

# குணத்தை வெளிப்படுத்தும் கெரில்லாத் தாக்குதல்கள்!

விடுதலைப் புலிகளது தாக்குதல்களுக்கு பதிலடியாக படையினர் தமிழ் மக்களைத் தாக்குவது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைபோல மாறிவருகிறது.

மன்னாரில் படையினர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் பஸ்களில் சென்ற தமிழ்ப் பயணிகள் படுமோசமாகத் தாக்கப்பட்டனர். பள்ளி வாசலுக்குள் புகுந்து முஸ்லிம்களும் தாக்கப்பட்டனர்.

01.07.99 வியாழக்கிழமையன்று யாழ் குடாநாட்டில் தென்மராட்சியில் நுணாவிலில் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதலில் பல படையினர் பலியாகினர். மூன்று பேரே பலியானதாகவும், ஏழுபேர் படுகாயமடைந்தனர் என்றும் படைத்தரப்பினர் உடனடியாக தெரிவித்திருந்தனர். படுகாயமடைந்ததாக கூறப்பட்டவர்கள் கதிபற்றி பின்னர் அறிவிக்கப்படவில்லை.

தென்மராட்சியில் விடுதலைப் புலிகளால் சமீபகாலத்தில் நடத்தப்பட்ட பெரும் தாக்குதலாக இது அமைந்திருந்தது. இனிவரப்போகும் காலத்தில் குடாநாட்டில் படையினரின் வாகன ரோந்துகள் முடக்கப்படுவதற்கான முன்னறிவிப்பாகவும் இத்தாக்குதல் விளங்கியுள்ளது.

இத்தாக்குதலின் பின்னர் அப்பகுதிக்குச் சென்ற படையினர் பொதுமக்கள்மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியுள்ளனர். அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர். அதில் ஏழு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு முன்பும் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன.

இனிமேல் அவ்வாறு நடைபெறமாட்டாது என்று படை அதிகாரிகள் பலமுறை உறுதியளித்துள்ளனர். தமிழ்க் கட்சிகளும் படை அதிகாரிகள் அவ்வாறு கூறியதற்கு தாமே காரணம் என்று பத்திரிகைகளுக்கு தம்பட்டம் அடித்துமிருந்தன.

எனினும் பொதுமக்கள்மீதான தாக்குதல்களில் ஈடுபட்ட படையினர்மீது உரிய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டதாகவோ, தண்டனை வழங்கப் பட்டதாகவோ இதுவரை அறியப்படவில்லை.

தற்போதைய தாக்குதல்கள் தொடர்பாக தமிழ்க் கட்சிகளும் அலட்டிக் கொள்ளவில்லை. அக் கட்சிகளும் இவை தவிர்க்கமுடியாத நிகழ்வுகள் என்றே நினைக்கத் தலைப்பட்டுள்ளன.

அதுதவிர படையினரைப் பகைத்துக் கொண்டோ, அவர்களது கசப்புணர்வுகளை சம்பாதித்துக் கொண்டோ யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகள் தற்போதுள்ளது போல செயற்பட இயலாது.

ஆயுதங்கள், சீருடைகள் சகிதம், வர்த்தகர்களிடம் நிதிகளும் வசூலித்துக்கொண்டே தமிழ்க் கட்சிகள் குடாநாட்டில் நிலை கொண்டுள்ளன.

படையினரை ஒரளவுக்கு மேல் கசப்புறச் செய்தால், தமிழ்க் கட்சிகளது சட்டபூர்வமற்ற நிதி சேகரிப்புக்கள் முதற்கொண்டு பல்வேறு சுதந்திரங்கள் கட்டுப்படுத்தப்படலாம்.

படையினரும் தமிழ்க் கட்சிகளது பலவீனங்களை நன்கு உணர்ந்தே தற்போது கையாண்டு வருகின்றனர். தமிழ்க் கட்சிகளை அழைத்து புலிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துமாறு கட்டளையிடும் அளவுக்கு படை அதிகாரிகள் இக் கட்சிகளது கடிவாளங்களை தம் கையில் வைத்திருக்கின்றனர்.

செம்மணிப் புதைகுழி இழுத்தடிப்பின்போதும் சரி, புதைகுழி தோண்டப்பட்டபோது மண் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சந்தேகங்களின்போதும் சரி, தமிழ்க் கட்சிகள் கட்டாய மௌனத்தையே அனுசரித்தன. அரியாலை, கொட்டடி புதைகுழிகள் தொடர்பாகக்கூட எந்தவொரு தமிழ்க் கட்சியும் வாய் திறவாதுள்ளன.

இவ் விவகாரங்கள் நேரடியாக படையினருடன் தொடர்புடையன என்பதாலேயே இத்தகைய மௌனத்தை அனைத்து தமிழ்க் கட்சிகளும்- சொல்லி வைத்தாற்போல அனுசரித்தன.

படையினரால் பொதுமக்கள் தாக்கப்படும்போது, சம்பிரதாயமான அறிக்கை ஒன்று வெளியிடப்படும். அதே சூட்டோடு படை அதிகாரி தக்க நடவடிக்கை எடுக்க தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் பத்திரிகைகளுக்குக் கூறப்படும்.

இத்தகைய அறிக்கையை அவதானிக்கும் படை அதிகாரிக்கு குறிப்பிட்ட கட்சிமீது கசப்பு ஏற்படமாட்டாது. அரசியல் தேவை கருதி கண்டனம் தெரிவித்தால்கூட, தனக்கு நற்பெயர் தேடித்தரவும் குறிப்பிட்ட கட்சி தவறவில்லை என்ற அபிப்பிராயமே ஏற்படும்.

இதுதவிர, மேற்கண்ட விதமாக தமிழ்க் கட்சி ஒன்று அறிக்கைவிடும்போது, அதனைக் காணும் அப்பாவி மக்களிடம், படையினர் சிலர்தான் அத்துமீறி நடந்து கொண்டனர்; படை அதிகாரிகள் அதனை விரும்பவில்லை என்ற எண்ணமும் தோன்றுகிறது.

இதனால் படையினரின் உண்மையான குணாம்சமும், அந்நிய மனப்போக்கும் மூடிமறைக்கப்பட தமிழ்க் கட்சிகளும் துணை போவதுடன், அத்துமீறல்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவது போன்ற மாயைகளை ஏற்படுத்தவும் இக் கட்சிகளே காரணமாகின்றன.

தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இக் கட்சிகளுக்கு அக்கறை இருக்குமானால், தவறிழைத்தவர்கள்மீது உண்மையாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? அது திருப்தியான நடவடிக்கைதானா? என்பதை கண்டறிவதிலேயே கவனம் செலுத்தியிருப்பர்.



துருப்புகள்

அவ்வாறு கவனம் செலுத்தியிருந்தால் வாய்மூல வாக்குறுதிகளை நம்பி, அதனை இவர்களே பத்திரிகைகளுக்குக் கொடுத்து மக்களை ஏமாற்ற துணைபோயிருக்கமாட்டார்கள்.

ஆனால் உண்மைகள் தெரிந்தாலும், மக்களை ஏமாற்றும் அரசியலில் சுவை காண்பவர்களாகவும், தாம் கூறும் பொய்கள் பத்திரிகைகளில் வெளியாகும்போது, அதனை தமது புத்திசாலித்தனமான அரசியல் நடவடிக்கையாக புளகாங்கிதம் அடைபவர்களாகவுமே தமிழ்க் கட்சிகள் தரத்தில் தாழ்வடைந்துள்ளன.

எனவே, இப்போக்கு படைத்தரப்பையும் தமது செயல்கள் குறித்து கேட்போர் கிடையாது என்ற மனத்துணிவுடன் செயற்பட தூண்டுகோலாகிறது.

படையினர் முதலில் மக்களை நையப்புடைப்பார்கள். பின்னர் அப் பகுதிக்கு படையதிகாரி விஜயம் செய்து ஆறுதல் கூறுவார். நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தரவாதம் தருவார். இச் செய்தியும் பத்திரிகைகளில் வெளியாகும்.

தாக்குதலும் நடத்திவிட்டு, பின்னர் அதனை ஒரு சிலரின் அடாவடித்தனமாக சித்தரித்து படைத்தரப்பிற்கு எதிரான உணர்வுகளைக் கட்டுப்படுத்தவே உத்தரவாதங்களும், ஆறுதல்களும் கூறப்படுகின்றன.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்திலும் படைத்தரப்பினரில் யாரோ ஒரு சிலர்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று சித்தரிக்கவே பலத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

செம்மணி தொடர்பாக யாழ் பலாலி படைத்தளத்தில் படைத்தரப்பு நடத்திய பத்திரிகையாளர் மாநாடும், அதன்பின்னர் இரகசியப் பொலிசாரின் விசாரணை பற்றிய செய்திகளும் ஏதோ சிலர்தான் கெட்டதனமாக நடந்து கொண்டனர்; அவர்கள்மீது விசாரணை நடத்தப்படுகிறது என்பது போன்ற தோற்றத்தைத் தருகின்றன.

எங்கோ ஒரு முகாமில், ஏதோ ஒருநாள் நடைபெற்ற கொடூரச் செயல் என்றால், அதனைக் குறிப்பிட்ட முகாமில் இருந்த சிலரது அத்துமீறல் என்று கருதலாம்.

ஆனால் யாழ் குடாநாடெங்கும் பரவலாக அறுநூற்றுக்கு மேற்பட்டோர் கைதாகினர். அத்தனைபேரும் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படுகின்றனர். குடாநாடெங்கும் இருந்த பல முகாம்களில் ஒரே காலகட்டத்தில் இக் கொலைகள் நடைபெற்றுள்ளன என்று சர்வதேச மன்னிப்புச்சபை கண்டறிந்துள்ளது.

ராஜபக்ஷவின் வாக்குமூலப்படி செம்மணியில் மட்டுமன்றி அரியாலை, கொட்டடி உட்பட பல பகுதிகளில் புதைகுழிகள் இருக்கின்றன. ராஜபக்ஷ அறிந்தது மட்டுமே இவ்வளவு எனில், மேலும் பல தகவல்கள் வெளிவராமல் உள்ளன என்பதே புலனாகிறது.

எனவே, குடாநாடெங்கும் திட்டமிட்ட முறையில், ஒரே நோக்கத்தின் அடிப்படையிலேயே களையெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. இதற்கு ஒரு சில அதிகாரிகள் மட்டுமே காரணம் என்பது சிறுபிள்ளைத்தனமானதே.

யாழ் குடாநாட்டில் புலிகள் மறுபடித் தலையெடுக்காது தடுப்பதற்கான திட்டங்களில் ஒன்றாக பரவலாக மேற்கொள்ளப்பட்ட களையெடுப்பே அறுநூறு போது பலியெடுப்பாகும்.

இத்தகைய நிலையில் செம்மணிப் புதைகுழி மற்றும் படுகொலைகள் தொடர்பாக ராஜபக்ஷவால் குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது சம்பிரதாயமான விசாரணைகள் நடைபெறலாமே தவிர, நடவடிக்கை எடுக்க முடியாது.

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமானால், மேலும் பல ராஜபக்ஷக்கள்தான் உருவாகுவார்கள்; உலகை உலுக்கும் உண்மைகளை வெளியிடுவார்கள். மேலும் பல அதிகாரிகளது பெயர்கள் வெளியாகும்.

எனவே, கிணறு வெட்டப் பூதம் புறப்படாத வகையிலேயே விசாரணைகள் நடைபெறும் என்றே கருதவேண்டியுள்ளது. சர்வதேச விசாரணையாளர்கள் முன்பாக அல்லாது இரகசியப் பொலிசார்தான் விசாரணைகளை மேற்கொள்ளுகின்றனர்.



புலிகள்

இலங்கை அரசையும், படையினரையும் மனித உரிமைகளுக்கு எதிரான சக்திகளாக இனம் காட்டுவதற்கு இங்குள்ள விசாரணையாளர்கள் முன்வருவர் என்று நினைப்பது சாத்தியம்தானா? என்ற கேள்வி அர்த்தமுள்ளதேயாகும்.

ஏற்கனவே இரகசியப் பொலிசார் செம்மணிப் பகுதியை அளக்கப் போகிறார்கள்; விசாரணைகள் நடத்துகிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வந்திருந்தன. ஆனால் செம்மணியை பின்னர் தோண்டும்போது இரகசியப் பொலிசாரின் அறிக்கைகள் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

எனவே, செம்மணியைத் தோண்டாது இழுத்தடிக்கும் நடவடிக்கைக்கு நியாயம் கற்பிப்பதாகவே அதற்கு முற்பட்ட காலத்தில் இரகசியப் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகளும், அதுபற்றிய செய்திகளும் அமைந்திருந்தன.

ராஜபக்ஷ உண்மைகளைக் கூறிய பின்னரும், ஏனைய புதைகுழிகள் பற்றி இரகசியப் பொலிசார் ஆராய்ந்து, பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முன்வந்திருக்க வேண்டும்.

ராஜபக்ஷவிடமும், கிருஷாந்தி கொலை வழக்கின் ஏனைய எதிரிகளிடமும் உடனடியாக விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறிவதும் இரகசியப் பொலிசாரின் வேலையாகும். அதனையும் செய்யவில்லை.

ஒட்டுமொத்தமாகவே எந்த விசாரணையும் மேற்கொள்ளாது தட்டிக்கழிக்க முடியாது. சர்வதேச கவனத்திற்கு செம்மணி விவகாரம் சென்றுள்ளதால் விசாரணையை அரசு ஆரம்பித்துள்ளதாக காண்பித்தேயாக வேண்டும்.

எனவே, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்ற செய்திகள் மட்டும் திருப்தியானவையாக கொள்ளப்பட முடியாதவையாகும்.

யாழில் காணாமல் போனோர் விவகாரம் பெரும் பிரச்சனையாக மாறியுள்ள பின்னரும், குடாநாட்டில் மக்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கு படையினர் கிஞ்சிற்றும் தயக்கம் காட்டவில்லை.

தம்மீது நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்ற நம்பிக்கையும், தமது செயல் நியாயமானது என்று நினைக்கும் தன்மையுமே படையினரிடம் காணப்பட்டிருக்கிறது.

இதனை நியாயப்படுத்த, 'அவர்களும் மனிதர்கள்தானே. உணர்ச்சிவசப்படுவது இயற்கை' என்று நியாயம் கூறவும் முனைவதுண்டு.

ஆனால், கொழும்பிலோ அல்லது சிங்கள எல்லைக் கிராமப் புறங்களிலோ தாக்கப்படும்போது அங்குள்ள மக்கள்மீது படையினர் தமது கோபத்தைக் காண்பித்தது கிடையாது.

பொலனறுவை போன்ற எல்லைக் கிராமங்களிலும், மணலாற்றில் சிங்களக் குடியேற்றப் பகுதிகளிலும் புலிகள் பதுங்கியிருந்து பல படையினர்மீது தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில், 'புலிகளைப் பற்றி தகவல் தரவில்லை' என்று கூறி அங்குள்ள சிங்கள மக்களை படையினர் தாக்கியதே கிடையாது.

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் புலிகள் தாக்குதல் நடத்தும்போது மட்டுமே அப்பகுதியில் உள்ள மக்கள்மீது பழிவாங்கல் படலம் வழக்கமாக இருந்து வருகிறது.

இதனைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ இயலாது என்பதே உண்மையாகும். அரச படைகள் பெரும்பான்மை இனத்தை மட்டுமே கொண்டவையாகும். நாட்டில் நடைபெறுவது இனப்பிரச்சனையும் அதன் விளைவான யுத்தமுமாகும்.

எனவே, அரச படைகள் தமிழ்பேசும் மக்களது போராட்டத்தை தமக்கும் எதிரான போராட்டமாக கருதும் மனப்போக்கு தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்.

சூரியக்கதிரின் பின்னர் படைத்தரப்பும், ஆட்சியாளர்களும் யாழ் குடாநாட்டிற்கு மக்களை திரும்ப வருமாறும்- சகல வசதிகளும் தரப்படும் என்றும் இன்முகத்தோடு அழைத்திருந்தனர். தம்மை சந்திரிக்காவின் படையினர் என்றே பிரசுரங்களில் குறிப்பிட்டிருந்தனர்.

குடாநாட்டுக்கு திரும்பிய மக்களுடனும் ஆரம்பத்தில் பரிவுடனும், நட்புடனுமே படையினர் அணுகி வந்தனர். இந்தப் போக்கு யாழ் குடாநாட்டு மக்களிடமும் படையினர் பற்றிய நல்லபிப்பிராயங்களையே உருவாக்கியிருந்தது.

அப்போதே இது பற்றி குறிப்பிட்ட 'முரசு' படையினர்மீது புலிகள் தாக்குதலை தொடுக்கும்போது, படையினர் மக்களுடன் நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்தே படையினரின் உண்மையான குணாம்சத்தை அறியக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தது.

இங்கு மட்டுமன்றி, எந்தவொரு நாட்டிலும் நிலங்களைக் கைப்பற்றும் சண்டைகளில் ஈடுபடும் பிறிதொரு இனத்தைச் சேர்ந்த படையினர் இரண்டு விதமான போக்கை கைக்கொள்வர்.

1. கைப்பற்றிய பகுதி மக்களை உடனடியாக அடக்கி ஒடுக்குவது. அவர்கள்மீது பலாத்காரத்தைப் பிரயோகிப்பது.

2. கைப்பற்றிய பகுதி மக்களை சலுகைகள் மூலமும், வாக்குறுதிகள் மூலமும், இனிய வார்த்தைகள் மூலமும் தம் கீழ்ப்படிவுள்ளவர்களாக மாற்றுவது.

இதில் முதலாவது வழியைவிட இரண்டாவது வழிதான் போராட்டங்களையும், போராடும் மக்களையும் பொறுத்தவரை ஆபத்தானது என்று போராடும் இயக்கங்கள் கருதுகின்றன.

போராட்டங்கள் பின்னடைவுகளைச் சந்திக்கும்போது சகல மக்களுமே அதனை தாங்கும் பக்குவத்தை கொண்டிருப்பதில்லை. தளர்வுகளும், விரக்திகளும், நம்பிக்கையீனங்களும் ஏற்படுவது இயல்பானதே. அவ்வாறான சந்தர்ப்பத்தில் கவர்ச்சிகரமான சலுகைகளும், இனிய பேச்சுக்களும், தற்காலிக மயக்கங்களை ஏற்படுத்தவே செய்கின்றன.

குடாநாட்டிலும் ஆரம்பத்தில் தாமே தனியாக நின்று இத்தகைய அணுகுமுறையை முன்னெடுக்கவே படைத்தரப்பு ஆவல் கொண்டிருந்தது.

யாழ் குடாநாடு கைக்குள் வந்தமையால் புலிகளது கதை முடிந்துவிட்டது என்றுதான் ஆட்சியாளர்கள் திடமாக நம்பினார்கள்.

புலிகளை மட்டுமன்றி, முன்னாள் போராளிகளான இந்நாள் தமிழ்க் கட்சிகளையும் ஒரங்கட்டிவிட்டு, தாமே நேரடியாக தமிழ் மக்களை தம் விருப்பம்போல கட்டியாளும் திட்டத்தோடுதான் ஆட்சியாளர்களும் செயற்பட்டனர்.

ஆனால், புலிகளின் கெரில்லா தாக்குதல்களும், புலிகளின் பலம் சரியவில்லை என்ற யதார்த்தமுமே தமிழ்க் கட்சிகளை குடாநாட்டுக்குள் பயன்படுத்தும் முடிவுக்கு ஆட்சியாளர்களை வரச்செய்தன.

தமிழ்க் கட்சிகளும் மக்களை சலுகைகளால திசை திருப்பி, போராட்டங்கள் மீது நம்பிக்கை இழக்கச் செய்யும் தந்திரத்துக்கு ஒத்துழைக்க ஆரம்பித்தன.

எதற்கெடுத்தாலும் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுக்கு அறிக்கைகள், முறையீடுகள்; படை அதிகாரிகளுக்கு புகார்கள் போன்ற நடவடிக்கைகள் ஊடாக, அரசும் அதன் தலைமையும் கருணையுள்ளவர்கள், முறையீடுகளுக்கு செவிமடுப்பவர்கள் போன்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்த முயன்றன.

வெளிநாடுகளது நிதி உதவியால் தவிர்க்கமுடியாமல் யாழ் குடாநாட்டுக்கு செய்யப்படும் சில பணிகளை, குடாநாட்டில் பொற்காலத்தை உருவாக்கும் அறிகுறிகளாகவும் பிரசாரம் செய்யப்பட்டன.

இத்தகைய தந்திரங்கள் மேலும் சிலகாலம் தக்க பயனைத் தந்தே இருக்கும். ஆனால் புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் இத் தந்திரங்களை விரைவாக தகர்த்தெறிந்துவிட்டன.

கெரில்லாத் தாக்குதலுக்கு பதிலடியாக தமிழ் மக்கள்மீது நடைபெறும் பதிலடிகள், படையினர் முன்னர் காட்டிய இன்முக தோற்றப்பாட்டை தகர்த்துவிட்டன.

குடாநாட்டில் புதிதாக அமுல்படுத்தப்படும் பாதுகாப்பு விதிமுறைகளும், கெடுபிடிகளும் அங்குள்ள மக்களை தாம் பிறிதொரு நாட்டு படையின்கீழ் இருக்கிறோம் என்று கருதத்தக்க நிலையையே தோற்றுவித்து வருகின்றன.

கெரில்லா நடவடிக்கை ஒரு பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும்போது அங்குள்ள படையினரை அழிப்பது மட்டும்தான் அதன் குறிக்கோளாக இருப்பதில்லை. குறிப்பிட்ட பிரதேசத்தில் உள்ள அரச துருப்புக்களது சுயரூபம் என்ன என்பதை அப்பகுதி மக்கள் உணரச் செய்வதும் அதன் குறிக்கோளாக அமைந்திருக்கும். புலிகளும் அதனையே கைக்கொள்ளுகின்றனர்.

'அரச துருப்புக்களின் சுயரூபம் பற்றி ஆயிரம் பிரசுரங்கள் செய்யத் தவறும் அம்பலப்படுத்தலை, ஒரு கெரில்லா நடவடிக்கை மூலம் செய்துவிடலாம்' என்று கியூபா தலைவர் பிடல் காஸ்ரோ கூறியிருக்கிறார்.

வடக்கு-கிழக்கிலும், குறிப்பாக யாழ் குடாநாட்டில் புலிகளது கெரில்லா நடவடிக்கைகள் படையினரை இராணுவரீதியில் பலவீனப்படுத்துவதோடு, அரசியல் ரீதியில் அம்பலப்படுத்துவதாகவும் மாறியுள்ளன.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் இலங்கை அரசுக்கு புதிய தலைவலியாக மாறிவிட்டனர்.

புலிகளது கப்பல் மூலமாக அன்ரன் பாலசிங்கம் வெகு சுலபமாக இலண்டனுக்கு போய்விட்டார்.

பிரிட்டிஷ் அரசிடம் இலங்கை முறையிட்டுப் பார்த்தது. 'அவர் இந்நாட்டு குடிமகன். நாம் என்ன செய்வது?' என்று கைவிரித்து விட்டது பிரிட்டிஷ் அரசு.

பாலசிங்கம் இலண்டன் செல்ல முன்னரே, பிரிட்டிஷ் அரசுடன் அங்குள்ள புலிகள் தொடர்பு கொண்டு கருத்தறிந்தனர்.

பிரிட்டிஷ் அரசை சங்கடத்தில் மாட்டக்கூடாதே. இலங்கை பிரச்சனையை கிளப்பினால் பிரிட்டிஷ் அரசு பதில் சொல்லத்தக்கதாக இருக்க வேண்டுமே என்பதால் முன்கூட்டியே கலந்து ஆலோசித்தனராம்.

பிரிட்டிஷ் பிரதமர் வரை விஷயம் போனதாம். பிரதமரும், பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு சார்ந்த அதிகாரிகளும் பச்சைக் கொடி காட்டிய பின்னர்தான், வன்னியில் இருந்து புறப்பட்டனர் பாலசிங்கம் தம்பதி.

பாலசிங்கம் பிரபாகரனினதும், புலிகள் இயக்கத்தினதும் நீண்டகால விசுவாசி. பாலசிங்கத்துடன் பிரபாகரன் இடைக்கிடையே கோபப்படுவது உண்டுதான். பின்னர் மறுபடி 'பாலா அண்ணா' என்று அழைத்து அரவணைத்து கொள்வார் பிரபா.

சமீபகாலத்திலும் சிறு மனக்கசப்பு ஏற்பட்டது. அது பெரிய விரிசல் என்று இலங்கை புலனாய்வுப் பிரிவுக்கு தவறான தகவல் எட்டியிருந்தது. அதனால் பாலசிங்கம் தம்பதி பற்றி பல்வேறு கற்பனைச் செய்திகள் உலாவந்தன.

பாலசிங்கம் அவுஸ்திரேலியாவில் இயக்கத்தை விட்டு ஒதுங்கி இருப்பதாகவும் தகவல் வெளியானது.

இப்போது உண்மை இலண்டனில் வெளியாகி விட்டது. பாலசிங்கம் தானாக வெளிப்பட்டு நடமாடும் வரை இலங்கை அரசுக்கும் விஷயம் தெரியாது.

இலண்டனில் புலிகளது சர்வதேச தலைமை அலுவலகத்தில் பாலசிங்கத்தை கண்டவர்கள் கூறிய தகவலை வைத்து 'இந்து' பத்திரிகை செய்தி போட்டது.

அதன் பின்னர்தான் இலண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம்கூட துடித்துப் பதைத்து தகவல் திரட்டியது.

முன்னர் புலிகளது அரசியல் துறை துணைத் தலைவர் கரிகாலன் இலண்டன் சென்றுவிட்டதாக ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி போட்டுக் கொண்டிருந்தன.

இலண்டன் அலுவலகப் பொறுப்பை கரிகாலன் ஏற்றுவிட்டதாகவும் செய்திகள் வந்தன. 'முரசு' மட்டும் மறுத்திருந்தது.

கரிகாலன் அப்போது வன்னியில்தான் இருந்தார் 'ஓயாத அலைகள் 02' நடவடிக்கையில் பலியான படையினரின் உடல்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்ததும் அவர்தான்.

வன்னியில் இருந்த கரிகாலனை இலண்டனுக்கு அனுப்பியவர்கள், உண்மையாகவே இலண்டன் போன பாலசிங்கம் பற்றி தாமதமாகவே அறிந்தனர்.

பிரிட்டிஷ் இராஜதந்திர வட்டாரங்களை சந்தித்த பின்புதான் பாலசிங்கம் பகிரங்கமாக வெளிப்பட்டார்.

பிரிட்டிஷ் அரசுக்கு இலங்கை முறையீடுகளை செய்யாதவகையில், தனது நகர்வுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் பாலசிங்கம்.

தென்னாபிரிக்க தலைவர்களுடனும், இந்திய அரசியல் தலைவர்களுடனும் நட்பை இறுக்கமாக்கிக் கொள்வதே முதல் கட்ட திட்டம் என்று தெரிகிறது.

அன்ரன் பாலசிங்கத்தின் பெரிய பலம் அடேல். வெளிநாட்டுப் பெண் என்பதால் அவரது 'ஈழ ஈடுபாடு' மேற்குலக இராஜதந்திர வட்டாரங்களில் வியப்புடன் நோக்கப்படுகிறதாம். அவர் எடுத்துவைக்கும் ஆணித்தரமான வாதங்களும் எடுபடுகின்றன.

### எடுத்து விளக்கும் அடேல் பாலசிங்கம்

பெண் புலிகள் பற்றி அடேல் நூலும் எழுதியுள்ளார். பயிற்சியும் பெற்றுள்ளார். இலங்கை இனப்பிரச்சனை பற்றி ஆதியோடு அந்தமாய் விளக்கும் வல்லமை கொண்டவர் அடேல்.

பாலசிங்கத்தின் நகர்வுகளை அறிய இலங்கை அரசு குறிப்பாக வெளிநாட்டமைச்சு மிக்க ஆர்வம் கொண்டுள்ளது.

லக்ஷ்மன் கதிர்காமருக்கு சவாலாக சர்வதேச அரங்கில் தோன்றியிருக்கிறார் பாலசிங்கம்.

**

லங்கா சமசமாஜக் கட்சி அரசுக்கு சில அழுத்தங்களை கொடுத்துள்ளது.

மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை மறக்காது ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு முடிவு கட்டவேண்டும் என்று கேட்டுள்ளது.

திடீரென்று ல.ச.ச கட்சி ஆதரவை வாபஸ் பெற்றால் ஆட்சி ஆட்டம் காணும். பாராளுமன்றத்தில் ஈடாட்டம் ஏற்படும்.

ஆனால் சமசமாஜிகள் அத்தனை துணிகரமானவர்களல்ல. அம்மையாரை விட்டால் அவர்களை கைதூக்கி விட வேறு யார் இருக்கிறார்கள்?

என்றாலும், அம்மையார் உஷாராகத்தான் இருக்கிறார். அரச எம்.பிகள், அரசசார்பு தமிழ்க் கட்சிகளது எம்.பிகளது வெளிநாட்டு விஜயங்களை இரத்துச் செய்யுமாறு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நெருக்கடி ஏற்பட்டால் சமாளிக்கத்தான் முன்னெச்சரிக்கை. இதனால்தான், பாராளுமன்றத்தை உடன் கலைக்க திட்டம் என்றும் செய்திகள் வந்தன. பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஜனாதிபதி தேர்தலை நடத்தத்தான் அம்மையார் ஆர்வமாக உள்ளாராம்.

காலம் செல்லச் செல்ல வாக்குச் சரிவு ஏற்படலாம் என்பதால், வன்னியில் மன்னார்-பூநகரி பாதையை திறந்துவிட்டு சூட்டோடு சூடாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதுதான் திட்டமாம்.



படிப்பகம்

www.padippakam.com

அமீனின் மனைவியை குத்தி விட்டு அவன் திரும்பியபோது அமீனின் கையில் இருந்த கத்தியைக் கண்டதும் அவனுக்கு முச்சே நின்றுவிடும்போல இருந்தது.

தன் உயிரைக் காப்பாற்றுவதற்காக இன்னொரு உயிரைக் கொல்வதற்கு தயங்காதவனுக்கு, தன் உயிர் போகப்போகிறது என்று உணர்ந்தபோது பொறி கலங்கியது.

கத்தியைப் போட்டுவிட்டு முழந்தாளிட்டு கைகூப்பினான். அமீன் சிரித்தான்.

**"முட்டாளே! இப்போது வருகின்ற பயம், அவளைத் தொடும்போது எங்கேயடா போனது? அமீனின் மனைவி என்று தெரிந்தும் அவளைக் கட்டிலில் சந்திக்க எப்படித் துணிந்தாயடா சிறுவனே?"**

அப்போதுதான் அவனுக்கு உண்மையை சொல்லும் எண்ணம் வந்தது. அவளைக் கத்தியால் குத்தக் சொல்லும் போதே அதனைக் கூறியிருக்கலாம். பயத்தில் வாய்திறக்காது இருந்துவிட்டான்.

இப்போது கடைசியாக ஒரு தடவை உண்மையைக் கூறிப்பார்க்கலாம் என்று நினைத்தான்.

"சத்தியமாக கூறுகிறேன். அவருக்கும் எனக்கும் எந்த தப்பான உறவும் இருந்ததில்லை. என் விரல்கூட அவள்மேல் பட்டதில்லை" என்றான்.

அமீன் மண்டியிட்டிருந்தவனை மார்பில் காலால் உதைத்து மல்லாத்தினான். அவன் மார்பில் ஏறி நின்றான். அவனுக்கு முச்சடைத்தது.

**"உன் விரல் பட வில்லை. வேறு எது பட்டதடா நாயே?... பட்டதடா நாயே?"** என்று அவன் முகத்தில் பூட்ஸ் காலால் ஓங்கி உதைத்தான்.

# இடி அமீன்

அவனது முக்கும், உதடுகளும் இரத்த மாயின. அவன் கத்தினான். அமீனின் பூட்ஸ் கால் அவனது கழுத்தில் உதைத்து, பலமாக அழுத்தியது.



அவன் முச்சுத் திணறி கால்களை தரையில் உதைத்தான். ஆனால் அசைய முடியவில்லை. கழுத்து நெரிபட்டுக் கொண்டிருந்தது.

அவனது கண்களும், முகமும் பலவித கோணல்களில் பரிதவித்ததை இரசித்து, இரசித்து, பூட்ஸ் காலில் முழுப் பலத்தையும் செலுத்தி, கடைசியாக ஒரு அழுத்து அழுத்தினான் அமீன்.

அவன் நிச்சயமாக செத்துப்போனான். அகோரமாக உயிரை விட்டான்.

அமீனின் முகத்தில் கொடூரமான திருப்தி குந்தியிருந்தது.

அதே நேரம் பழைய நினைவு ஒன்றையும் அவனது மனது அசைபோட்டது.

அப்போதுதான் அமீன் இராணுவத்தில் சேர்ந்திருந்தான். இராணுவ உயரதிகாரி ஒருவரது வீட்டுக்கு வேலையின் நிமித்தம் அடிக்கடி சென்றுவர வேண்டியிருந்தது.

அந்த அதிகாரியின் வீட்டுச் சுவர்களுக்கு வெள்ளையடிக்கும் வேலையையும் அமீன்தான் செய்திருந்தான்.

அதிகாரி காலால் இட்ட கட்டளையை தலையால் செய்ய வேண்டியது அமீன் போன்றவர்களது கடமை.

அந்த அதிகாரியின் மனைவி பிரமாதமான அழகி. அமீனின் ராட்சத உருவத்தில் அவளுக்கு ஒரு கண் இருந்தது.

அமீனுக்கும் அவளை ஒரு தடவையாவது தொட்டுப் பார்த்துவிட வேண்டும் என்று உள்ளூரத் துடிப்பிருந்தது.

அவளாக தன்னை அழைக்கட்டும் என்று விட்டுப் பிடித்தான். வீட்டு வேலைகளைச் செய்து கொடுக்கும்போது, தன் உடம்பைக் காட்டத்தக்கதாக மேற்சட்டையை கழற்றி வைத்துவிட்டே வேலைகளைச் செய்வான் அமீன்.

குத்துச்சண்டைவீரன் போல பளபளத்த திரட்சியான அவனது தசைகளை அதிகாரியின் மனைவி ஆசையோடு பார்ப்பாள். கறுப்பாயிருந்தாலும் ஆணழகன் என்றெண்ணி அவள் விடும் பெருமுச்சுக்கு ஏற்ப அவள் மார்புகள் உயர்ந்து தாழும்.

ஒரு நாள் அவள் தானே வலிய வந்து அமீனை அழைத்தாள். படுக்கை அறைக்குள் மின்சார வயரில் ஏதோ கோளாறு இருப்பதாகவும், வந்து பார்க்குமாறும் அழைத்தாள்.

அமீனும் அதன்படி உள்ளே சென்று ஆராய அவள் கல கலவென்று அவன் பின்னால் நின்று சிரித்தாள்.

அமீன் திரும்பியபோது ஆவேசமாக தழுவப்பட்டான். அவனது தடித்த உதடுகளை அவசரமாக அவள் உதடுகள் கவ்விக் கொண்டன. அவளது கைகள் அமீனின் உடலெங்கும் பதட்டமாகப் பரவின. ஆசையோடு வருடத் தொடங்கின.

அமீன் சற்று நேரம் எந்த பிரதிபலிப்பும் இன்றி அவளது செய்கைகளை இரசித்தான். பின்னர் மெல்ல, மெல்ல அவளை ஆராய ஆரம்பித்து, அப்படியே தள்ளிச் சென்று கட்டிலில் சரித்து, தானும் மேலே கவிழ்ந்தான். அவள் தன் கால்களால் அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டு, அவனது காது மடல்களைத் தன் நாவால் வருடினாள். இன்னொரு காதை தன் விரலால் கடைந்தாள்.

அவளது ஆவேசமும், அமீனின் ஆர்வமும், படுக்கையறைக்கு கதவு என்று ஒன்று இருப்பதை மறக்கடித்திருந்தன.

அவர்கள் இருவருக்கும் அன்று மிக மோசமான நாள் என்று தெரியாமல், பிணைந்து கொண்டு முச்சுக்களை சூடாக வெளியிட்டுக் கொண்டிருக்க, "டேய் வேசி மகனே!" என்ற அதிகாரக்குரல் காதுகளுக்குள் பாய்ந்தது.

பாம்பு கொத்தியது போல இருவரும் பதறிக்கொண்டு எழுந்திருக்க, எதிரே உயரதிகாரி யமன் மாதிரி நின்றிருந்தான்.

அவனைக் கொன்றுவிடலாமா? என்று அமீன் யோசித்தான். ஆனால் அதற்கு வாய்ப்பில்லை. அதிகாரியின் கையில் எம்.எம். பிஸ்டல் இருந்தது.

தன்னை அந்த அதிகாரி நாயைச் சுடுவது மாதிரி சுடப்போகிறான் என்றுதான் அமீன் நினைத்தான்.

அப்போதே அவனுக்கு இராணுவத்திற்குள் பெரிய பதவிக்கு வரும் ஆசை இருந்தது. பல பெண்களை அனுபவிக்க வேண்டும், நிறைய பணமும், புகழும் சம்பாதிக்க வேண்டும் என்னும் எண்ணமெல்லாம் இருந்தன.

கனவு எதுவும் நிறைவேறாது சாகப்போகிறோமே என்றுதான் கவலைப்பட்டான். அந்த அதிகாரி அமீனின் நினைப்புக்கு மாறான மனிதர்.

"உன்னைக் கொல்லமாட்டேன். உன் மரியாதையை, உன் கௌரவத்தைக் கொல்லப்போகிறேன்!" என்று கூறினார்.

ஏனைய சிப்பாய்களை அழைத்து அமீனைக் கைது செய்யச் சொன்னான்.

கைதான அமீன் இராணுவ முகாமின் மைதானத்தில், ஏனைய வீரர்கள் முன்பாக நிறுத்தப்பட்டான்.

அடுத்த நொடியே அமீனின் ஆடைகள் எல்லாம் களையப்பட்டன. அந்த மைதானத்தைச் சுற்றி பத்துத் தடவை ஓடுமாறு கட்டளையிட்டார் அந்த அதிகாரி.

உடம்பில் பொட்டுத்துணிகூட இல்லாது நிர்வாணமாக ஓடிய அமீனை இராணுவத்தினர் கேலியாக நோக்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அமீன் முகத்தில் சிறிதும் வெட்க உணர்ச்சியோ, சங்கட உணர்ச்சிகளோ எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

தண்டனை முடிந்த பின்னர் தன் சகாக்களிடம் அமீன் கூறினான்: **"என் உடம்பை காண்பிப்பதில் எனக்குப் பெருமைதான். அந்த அதிகாரியின் உடம்பை அவன் மனைவிகூட கட்டியணைக்க விரும்பவில்லை!"**

"இது உனக்கு அவமானமாக இல்லையா?" என்று சகாக்களில் ஒருத்தன் கேட்டிருக்கிறான்.

## தருவது ரசிகன்

**"வாழ்க்கையில் எதனையும் அவமானமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அப்படி நினைத்தால் நாமே நமக்குள் முடங்கிப் போவோம்! முன்னால் போக முடியாது. என் இலட்சியம் முன்னால் ஓடுவது? பின்னால் ஓடுவதல்ல!"** என்று தத்துவ ஞானியைப்போல பேசி வெறுப்பேற்ற சகாக்கள் அத்தோடு பேசுவதை நிறுத்தி விட்டனர்.

அன்று நிர்வாணமாக ஓடவைத்த அதிகாரி அமீன் ஆட்சியைக் கைப்பற்ற முன்னரே தலைமறைவாகியதால் தப்பித்தார்.

உகண்டாவின் தலைநகரான கம்பலாவில் தெருத் தெருவாக அந்த அதிகாரியை ஓட வைத்து இரசிக்க நினைத்திருந்தான் அமீன். அதிகாரியின் நல்ல நேரம், அமீனின் கையில் சிக்கவில்லை.

அமீன் நிர்வாணமாக ஓடிய விடயம், அமீன் பதவிக்கு வந்த புதிதில் வெளியுலக பத்திரிகைகளில மட்டும் நினைவூட்டப்பட்டது.

உள்நாட்டில் அதுபற்றி பரவலாக அறியப்பட்டிருக்கவில்லை. யாருக்கும் அத் தகவலை நினைவூட்டும் தைரியம் இருக்கவில்லை.

அன்றைய தன் நிர்வாண ஓட்டத்தை இப்போது நினைக்கையில் அமீனுக்குச் சிரிப்பாக இருந்தது.

**"நான் ஓடும்போது பெண்கள் பார்த்திருந்தால் என் பின்னாலேயே ஓடிவந்திருப்பார்கள். மைதானத்தில் ஓடவிட்டதால் யாரும் பார்க்கவில்லை!"** என்று அப்போது அடிக்கடி கூறி, தன் சகாக்களை வெறுப்பேற்றுவதும் அமீனது வழக்கம்.

அதெல்லாம் இப்போது அமீனுக்கு நினைவுக்கு வந்தன. ஆனாலும் அன்று அதிகாரியின் மனைவிமீது கைவைத்ததால் நிர்வாணமாக ஓடிய அமீனுக்கு, இன்று தன் மனைவியோடு தொடர்பு வைத்ததாகச் சந்தேகித்து இரு கொலைகள் செய்வது உறுத்தலாக இருக்கவில்லை.

முன்னுக்குப் பின் முரணாக காரியம் செய்வது தன்னலவாதிகளுடன் ஒட்டிப் பிறந்த குணம்.

தங்களைச் சுற்றியே அவர்கள் சிந்திப்பதால், ஒவ்வொரு செயலையும் தமது தேவைகள், பலன்கள், விருப்பு வெறுப்பு, இலாபம் என்பவற்றின் அடிப்படையிலேயே செய்யப் பழகிவிடுகின்றனர்.

அமீனும் அப்படித்தான். அவனிடம் நீதி, நேர்மை, பாரபட்சமற்ற அணுகுமுறை என்று எதுவும் இருக்கவில்லை.

அவ்வப்போது தன் தேவைக்கு ஏற்றதை கூறுவதும், பின்னர் தேவை முடிந்ததும் முன்னர் கூறியதற்கு மாறாக கூறுவதையும் வழக்கமாக கொண்டிருந்தான்.

அமீனின் ஐந்தாவது மனைவி கொலலப்பட்ட தகவல் பல மாதங்களின் பின்னரே வெளியே தெரிந்தது.

அப்போதும் அமீன் சற்றும் அசராது ஒரு அறிக்கை வெளியிட்டான்.

**"என் மனைவி இறந்தது உண்மைதான். அவள் நீண்டநாட்களாக நோயில் வீழ்ந்திருந்தாள். தகுந்த மருத்துவம் செய்ய வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு டாக்டர்கள் கூறினார்கள். மக்கள் அனைவரும் உகண்டா மருத்துவத்தை நம்பும்போது, நான் மட்டும் என் மனைவியை வெளியே அனுப்புவது நியாயமல்ல. ஓர் அதிபர் செய்யக்கூடிய காரியமுமல்ல. அதனால் உள்நாட்டிலேயே மருத்துவம் பார்த்தோம்.**

**என் மனைவி இறந்த சோகத்தை ஜீரணிக்க முடியாததால் உடனடியாக அதனை என்னால் மக்களுக்குத் தெரியப்படுத்த இயலாமல் போய்விட்டது!"** என்று உருக்கமாக கூறியிருந்தான்.

அதனை நம்பவும் உகண்டாவில் ஆட்கள் இருந்தனர். இடி அமீனின் கொடூர சுயரூபம் படிப்படியாக வெளியே தெரிந்தபோதும், "இடி அமீன் நல்லவர், அருமையான அதிபர். 'அவர் பதவிக்கு வராது போனால் உகண்டா என்ற ஒரு நாடு இருப்பதாகக்கூட உலகுக்குத் தெரியாமல் போயிருக்கும்!" என்று அமீனின் விசுவாசிகள் பிரசாரம் செய்தனர்.

அமீனது புகழ் பரப்ப என்றே பத்திரிகைகள் சிலவும் வெளியிடப்பட்டன. அமீன் பதவிக்கு வந்த பின்னர் என்னென்ன சாதனைகள் நடந்துள்ளன என்று பட்டியல் போடுவார்கள்.

இவற்றை இலவசமாகக் கொடுத்தும்கூட மக்கள் நம்புவது கிடையாது. விரும்பிப் படிப்பதும் இல்லை.

மக்களைக் கவர புதிதாக ஏதாவது அதிரடி முயற்சிகளில் இறங்க அமீன் திட்டமிட்டான். மாதாந்தம் தனது வரவு செலவுக் கணக்கை பகிரங்கமாக வெளியிடத் தயார் என்று அமீன் அறிவித்தான்.

அமீனும் அவனது குடும்பத்தினரும் நிதியை சுருட்டுகின்றனர் என்ற சந்தேகம் வராதிருக்கவே தனது கணக்கு விபரங்களை வெளியிடுவது போன்று நாடகமாடினான்.

"நாட்டின் அதிபர் தனது வரவு செலவுக் கணக்குகளை வெளியிட்டால் அது எதிரிகள் பல இரகசியங்களை அறிய வாய்ப்பாக இருந்துவிடும். ஆகவே அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கோருகிறோம்!" என்று அமைச்சரவை தீர்மானம் எடுத்தது. அமீன் புன்சிரிப்போடு அத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டான்.

அடுத்து மற்றொரு திட்டம் தீட்டினான். அது நகர்வலத் திட்டம்.

**(இடி தொடரும்)**

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 69

**கடந்தவாரம்**

**அமீனின் ஐந்தாவது மனைவிமீது உளவுத்துறை சந்தேகம் கொள்கிறது. அவளைச் சந்திக்கும் உறவினன் கைதாகி தாக்கப்பட்டு, ஐந்தாவது மனைவி முன்னால் நிறுத்தப்பட்டு நிர்வாணமாக்கப்படுகிறான். அவனிடமே கத்தியைக் கொடுத்து தன் மனைவியை குத்திக் கொல்ல வைக்கிறான் அமீன்....**

**இனி....**

# அமெரிக்க மத்தியஸ்தம்

இந்திய-பாகிஸ்தான் மோதலில் மத்தியஸ்தம் வகிக்கும் அமெரிக்காவின் இரகசியத் திட்டத்தை இந்தியா முறியடித்து விட்டது.

பாகிஸ்தானின் ஊடுருவலை கண்டித்தால் இந்தியா தன்மீது நம்பிக்கை கொள்ளும். மத்தியஸ்தம் வகிக்க ஒப்புக்கொள்ளும் என்று அமெரிக்கா நினைத்தது.



மத்தியஸ்தம் வகிக்க வாய்ப்புக் கிடைத்தால், அது அமெரிக்காவுக்கு கிடைத்தற்கரிய வாய்ப்பாகும்.

தென்னாசியாவில் பொலிஸ்காரனாக செயற்பட கிடைத்த அங்கீகாரமாகவும் அமெரிக்கா அதனை கொண்டாடியிருக்கலாம்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள். பாகிஸ்தானை அமெரிக்கா கண்டித்தது இந்தியா மீதான கருணையாலோ, நியாயம் மீதான பரிவாலோ அல்ல.

காஷ்மீர் பாகிஸ்தானுக்கு சொந்தமானது என்றும், இப் பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்றும் பல ஆண்டுகளுக்கு முன்னரே பகிரங்கமாக கூறியவர் கிளின்ரன்.

எனவே, தற்போது ஊடுருவல்காரரை கண்டிக்கும் சாக்கில், நியாயவாதி என்ற முகமூடியுடன் மத்தியஸ்த்தம் வகிக்க முயன்றது அமெரிக்கா.

ஆனால், இந்த வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் தந்திரத்தை இந்தியா நன்கறியும். மத்தியஸ்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியா திட்டவட்டமாக கூறிவிட்டது.

இதன் பின்னரே பாகிஸ்தான் பிரதமர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டார். இந்தியா மத்தியஸ்தத்துக்கு தம்மை அழைக்காதபோதும், பாகிஸ்தானை பணிய வைத்தது தாம்தான் என்று தென்னாசிய மக்களை ஏமாற்றத்தான் இந்த நாடகம்.

இந்தியா தன் இராணுவ பலத்தால் ஊடுருவல்காரர்களை விரட்டியடித்து வெற்றி பெற்றுவிட்டது என்று கதை முடியக்கூடாது. அமெரிக்காதான் பாகிஸ்தானை சரிக்கட்டியது என்று காட்ட வேண்டும். அதுதான் அமெரிக்காவின் திட்டம்.

இத் திட்டத்துக்கு பாகிஸ்தான் பிரதமரும் ஒத்துழைத்திருக்கிறார். ஊடுருவலுக்கு எதிராக உலக கண்டனங்கள் எழுந்துள்ளதால், பாகிஸ்தான் அமெரிக்காவின் தயவை நாடி நிற்கிறது.

காஷ்மீர் பிரச்சனையில் பாகிஸ்தானின் கொள்கையை அமெரிக்கா கண்டிக்கவில்லை. இந்திய எல்லைக்குள் ஊடுருவிய கிளர்ச்சியாளர்களையே கண்டித்திருக்கிறது என்பதையும் மறக்கக்கூடாது. மற்றப்படி காஷ்மீரை உரிமை கொண்டாடும் பாகிஸ்தானின் நிலைக்கு அமெரிக்கா ஆதரவுதான்.

அப்படி ஆதரவு கொடுத்துத்தான் பாகிஸ்தானை கைக்குள் போட்டுக் கொண்டது.

ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம். இந்திய, பாகிஸ்தான் மோதல் தென்னாசியாவிலும் தளம் கண்டு தன்னை நிலைப்படுத்தத் துடிக்கும் அமெரிக்காவுக்கு கொண்டாட்டம்.

சி.என்.என் மற்றும் பி.பி.சி முதற் கொண்டு சர்வதேச பிரசார சாதனங்கள் அமெரிக்காச் சார்புடையவையே. எனவே அவற்றின் செய்தி அறிக்கைகளும் அமெரிக்கா ஏதோ நல்லது செய்வது போல புளுகித் தள்ளுகின்றன.

# கம்பியூட்டர் சிரிப்பு

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் மற்றொரு திருமணம் அமைதியாக நடந்து முடிந்து விட்டது. இளவரசர் ஆண்ட்ரு திருமணம் தான் எளிமையாக நடந்திருக்கிறது.

வெகு ஜோராக நடந்த சாள்ஸ்-டயானா திருமணம் தோல்வியில் முடிந்ததால், மிக எளிமையாக இத் திருமணத்தை நடத்தினரோ தெரியவில்லை.

இந்த திருமணத்தின் பின்னர் அடுத்த திருமணம் பற்றியும் பேச்சுக்கள் கிளம்பி விட்டன.

இளவரசர் சாள்ஸ்சும், கமீலாவும் திருமணம் செய்து கொள்ள மகாராணி பச்சைக் கொடி காட்டிவிட்டாராம்.

பிரிட்டிஷ் மக்களும் "சரி போனால் போகிறது. சாள்ஸ் கமீலாவை திருமணம் செய்து கொள்ளட்டும். ஆனால் அரசியாக மாறக்கூடாது!" என்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இளவரசர் வில்லியம்தான் சற்று முட் அவுட்டாக இருக்கிறார். ஆண்ட்ருவின் திருமண வரவேற்பில் வில்லியம் கலந்து கொண்டார். புகைப்படங்கள் எடுக்கப்பட்டன். அவற்றில் ஒன்றில்கூட புன்னகைக்கவில்லையாம்.



இதனால் அவரது புகைப்படங்கள் சிலவற்றை கம்பியூட்டர் உதவியுடன் மெல்லியதாக சிரிக்க வைத்ததாம் அரச குடும்பம். இந்த சங்கதியும் எப்படியோ வெளியே தெரிந்து தொலைத்துவிட்டது.

அரச குடும்பமே இப்படி மக்களை ஏமாற்றலாமா? என்று ஆளாளுக்கு கேட்கிறார்கள்.

# தூக்கத் திருடன்

மலேசியாவில் நடந்த ருசிகரமான ஒரு சம்பவம். அங்கு உசைனி அலி என்பவரது வீட்டுக்குள் திருடன் புகுந்துவிட்டான்.

முதல் நாளும் நித்திரை முழித்து எங்காவது திருடினானோ என்னவோ, உசைனி அலி வீட்டின் தரைவிரிப்பில் தூங்கிவிட்டான்.

திருடன் தூங்குவதைக் கண்டதும் அயலவர்களை அழைத்து வந்து காண்பித்தார் உசைனி அலி. பொலிசில் ஒப்படைக்குமாறு அயலவர்கள் கூறினார்கள்.

"ஒப்படைக்கத்தான் போகிறோம். அவன் தூங்கி எழுந்தபின்னர் ஒப்படைப்போமே" என்று மனிதாபிமானம் காட்டினார் உசைனி அலி. அவன் தூங்கி எழுந்ததும் அயலவர்களுடன் சேர்ந்து ஒரே அமுக்காக அமுக்கி பொலிசில் ஒப்படைத்தனர்.

# 67 வயது காதல் மன்னன்



சர்வதேச அளவில் பிரபலமானது ஸ்டார் ரி.வி. அதன் உரிமையாளர் பெயர் ரூபர்ட் முர்டோக். ரி.வி. தவிர பத்திரிகைகள் பலவற்றுக்கும் உரிமையாளர்.

பல ஆயிரம் கோடி ரூபா சொத்துக்களுக்கு அதிபதி. அன்னாருக்கு தற்போது 67 வயது.

இவருக்கு ஏற்கனவே இரண்டு மனைவிகள். மூன்று பிள்ளைகளும் உண்டு. முதல் மனைவி பற்றி சரியான தகவல் கிடையாது. இரண்டாவது மனைவியை சமீபத்தில் விவாகரத்து செய்துவிட்டார்.

அதன்பின்னர் தனது ரி.வி. நிறுவனத்தில் வேலை பார்த்துவந்த மொடல் அழகியை காதலிக்க ஆரம்பித்தார் இந்த கிளு கிளு வயோதிப வாலிபர்.

மொடல் அழகியைவிட முர்டோக் 36 வயது முத்தவர். பணம் உள்ளபோது இந்த வயது வித்தியாசம் எந்த மூலைக்கு? இருவரும் கடந்த நான்கு ஆண்டுகளாக இன்புற்றிருந்தனர்.

முர்டேக்கால் அழகியை இழக்கவோ மறக்கவோ முடியவில்லை. அதனால் திருமணம் செய்ய முடிவெடுத்தார். இதனை இரண்டாவது மனைவியின் பிள்ளைகள் எதிர்த்த போதும், முர்டோக் விட்டுக் கொடுக்கவில்லை.

சமீபத்தில் திருமணம் தடபுடலாக நடந்து முடிந்தது. திருமணம் முடிந்த கையோடு தன் காதல் மனைவியோடு யாரும் அறியாத தீவு ஒன்றுக்கு தேன் நிலவுப் பயணம் சென்றுள்ளார் முர்டோக்.

யாரும் தம்மை சில நாட்களுக்கு தொந்தரவு செய்யக்கூடாது என்று நினைத்துத்தான் எங்கு தேனிலவு என்பதை உலக மகா இரகசியமாக வைத்திருந்தாராம்.





படிப்பகம்

www.padippakam.com

## முறுக்கு மீசை



↑ இது என்ன புதுவிதமான முறுக்கு மீசை என்றா நினைக்கிறீர்கள்? இல்லை! மீசை வளர்க்கும் ஆசையெல்லாம் இந்த ஆசாமிக்குக் கிடையாது. மிருக எலும்புகளுக்குள் மூக்கை நுழைத்திருப்பதுதான் இங்கு ஃபாஷன். ஆண்களுக்கு அழகு எலும்பு மீசை.

இது எங்கே தெரியுமா? நியூகினித் தீவுகளில் வாழும் மனிதர்களில் ஒரு பகுதியினர்தான் இப்படி அலங்காரம் செய்கின்றனர்.

நியூகினித் தீவுகளில் மனித மாமிசம் சாப்பிடும் பழக்கம் தற்போதும் உள்ளது. கற்கால பழக்க வழக்கங்களை இப்போதும் கைவிட மறுக்கிறார்கள்.

## மோதிய பின்னும்

↘ அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சலசில் நடந்த வியப்பான செய்தி இது. இந்த விமானம் பறக்கும் போது கட்டுப்பாட்டை இழந்து தரையை நோக்கி நழுவி மோதியது.

வெறும் தரையில் மோதவில்லை. இரண்டு பாடசாலை பஸ்கள் மீது தான் மோதியது. இரண்டு பஸ்களிலும் 48 மாணவர்கள் இருந்தனர்.

அய்யய்யோ... என்று மனது பதறுகிறதா? விஷயம் என்ன தெரியுமா? பஸ்களில் இருந்த மாணவர்களுக்கு எந்த ஆபத்துமே இல்லை. இரண்டே இரண்டு மாணவர்களுக்கு மட்டுமே லேசான கீறல்! இதுதான் அதிசயம் என்பது!




## தகவல் பெட்டி

## புத்தகம் சிறிசு



↙ தற்போது உலகிலேயே மிகச் சிறிய புத்தகம் இதுதான் என்கிறது கின்னஸ்.

கண்ணின் கருவிழி அளவுதான் இந்தப் புத்தகம் இருக்கிறது. இதனை ஃபாங் கிசன் என்பவர் கஷ்டப்பட்டு உருவாக்கியுள்ளார். இவர் தாய்வான் நாட்டவர்.

இந்தப் புத்தகத்தில் 'வெள்ளைப் பனியும், ஏழு சித்திரக் குள்ளர்களும்' என்ற கதை 76 பக்கங்களில் அச்சாகியுள்ளது. இதன் எடை: 0.6 கிராம் மட்டும்.



## மலை சாயும் போது

↑ ஜப்பான் நாட்டின், தேசிய விளையாட்டுகளில் ஒன்றான 'சுமோ' மல்யுத்தம் விசித்திரமானது. சுமோ மல்யுத்த வீரர்கள் சிறுவர்களாக இருக்கும்போதே கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை மிக அதிகமாகவே உட்கொண்டு உடலைப் பருக்க வைத்துவிடுவார்கள்.

சுமோ மல்யுத்தத்தின்போது எதிர்த்தரப்பிலுள்ளவர்களைக் காலால் உதைக்கக்கூடாது; முஷ்டியைக் குவித்துக் குத்தக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் எதிரியை, தூக்கி வீசி எறியலாம். கால்கள் இரண்டையும் பிடித்து உடலைக் கிழிக்கவும் முடியுமாம்.

சுமோ மல்யுத்த வீரர்கள் ஒருவரை ஒருவர் தூக்கி எறியும்போது பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். இப்படி எறியப்பட்டு விழும்போது உடலில் தாக்கமே இருக்காதா? முறிவுகள், தெறிப்புக்கள் இருக்காதா? என்று நாம் நினைப்போம்.

ஆனால் தூக்கி எறியும்போது முறிவு, தெறிவு, நோவு, சாவு இன்றி விழுவதற்கு தனியான நுட்பங்கள் இருக்கின்றன.

படத்தில் தூக்கி எறியப்படும் மாமிச மலையும் நுட்பமாகத்தான் விழுந்துகொண்டிருக்கிறார். ஆகவே இந்த மலை சாய்ந்து போனால் சதை என்னாகும்? என்று பதை பதைக்கத் தேவையில்லை.

## வித்தியாச விருந்து



← அம்மாடி! என்னமாய் மூக்கு முட்டச் சாப்பிடுகிறார்கள்? மிக நீளமான மேசையில் பந்திக்கு முந்தி இவர்கள் குந்தியிருப்பதைப் பார்த்தால் தடபுடலான விருந்துக் கொண்டாட்டம்தான் என்றுதானே நினைப்போம்.

அதுதான் இல்லை. இவர்களது நண்பர் ஒருவரது மரணச்சடங்கில் கலந்து கொண்ட சூட்டோடு சூடாகத்தான் இந்த பெரு விருந்து!

என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? ரசியாவில் சில கிராமங்களில் இது ஒரு சம்பிரதாயம். இறுதிச் சடங்கு முடிந்ததும் உறவினர்களும், நண்பர்களும் ஒன்றுகூடி ஒரு பிடி பிடிப்பார்கள். நீள மேசையில் மாட்டுத் தலையும் கிடக்கிறது பாருங்கள்.

கி.மு. 4ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த 'சித்தியன்' வம்ச அரசர்கள் காலம் முதல் உக்ரேய்னை ஒட்டிய கிராமங்களில் இப்பழக்கம் தற்போதுவரை நிலவி வருகிறது. சோகத்திலும் சோக்கான விருந்துண்ண எப்படித்தான் முடிகிறதோ?

## கவரும் கார்



↗ இது சாதாரணக்கார் அல்ல. காந்தக் கார். கத்திகள், கரண்டிகள் மற்றும் இரும்புப் பொருட்களுடன் கிட்டப்போனால் தட்டிப் பறிப்பது போல இழுத்து ஒட்டவைத்துக் கொள்ளும்.

இந்தக் காரின் உரிமையாளர் பெயர் ஒக்ரிஜில்உர். 25 வருடங்களாக இந்தக் காரின் உடலில் முள் கரண்டிகள், கத்திகள் ஆகியவற்றை பல ரகங்களில் ஒட்டவைத்துள்ளார். மொத்தம் ஐந்தாயிரம் கரண்டி, கத்தி, முள்கரண்டிகளை ஒட்டவைத்துள்ளார். கின்னஸ் சாதனைக்கே இந்த முயற்சி நடக்கிறது.

## கப்பல் தொப்பி

→ தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன, முழம் என்ன என்பார்கள். இங்கே பாருங்கள் இந்த நங்கையின் தலையில் கப்பலே போகிறது.

ஃபிரான்ஸ் தலைநகரான பாரிசில் நங்கையர் நாடும் நவீன தொப்பி இதுதான்.

பாரிஸ் மக்கள் இப்படியான வித்தியாசமான ரசனைகளில் எப்போதுமே முன்னணியில் தான் இருக்கிறார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

'**கா**தலர் தின' நாயகன் புதியவர். நாயகியோ இந்தித் திரையுலகையே கலக்கிக் குடித்தவர். நாயகனுக்கு அவர்மீது சபலம். தொட்டு தொட்டு நடிக்கையில் அவரது சபலத்தை அளந்துவிட்டார் நடிகை. விட்டுப் பிடிக்கலாம் என்று வேடிக்கை பார்த்த நடிகை, படப்பிடிப்பின் கடைசி நாளன்று நாயகனை தானே அழைத்து, விரும்பியதை கொடுத்து திணறடித்துவிட்டாராம்.

**சூ**ப்பர் நட்சத்திரத்தின் அடுத்த படத்தில் எப்படியாவது இடம்பிடித்துவிட படாதபாடு படுகிறாராம் மீன் நடிகை. வேறு சில நடிகைகளும் முயற்சியை ஆரம்பித்துவிட்டனர்.

**மூ**ன்றெழுத்து இளம் நாயகனின் 'மின்சார' படத்தின் இயக்குநர் படப்பிடிப்பில் போதிய கவனம் செலுத்துவதில்லையாம். இதனால் நாயகன் கடுப்பில் இருக்கிறார். சூப்பர் நட்சத்திரத்தின் அடுத்த படத்தையும் நானே இயக்கப்போகிறேன் என்று 'பந்தா' காட்டிக் கொண்டிருக்கிறாராம் இயக்குநர்.

**வி**சித்ரமான நடிகை மணியான நடிகருடன் ராசியாக இருந்தும்கூட, நடிகர் அவரை போதுமானளவு சிபாரிசு செய்யவில்லையாம். அதனால் நடிகர்மீது ஆழ்ந்த வருத்தத்தில் இருப்பதோடு, இன்னொரு மணியான நடிகரையும் ஆழம் பார்க்கிறாராம். அந்த மணியான நடிகர் அதிக போதையால் நோயில் விழ்ந்து, உடல் இளைத்து, தற்போது தான் மீண்டுள்ளார்.

## ரவளி ரகசியம்

தமிழில் விஜயகாந்த் படங்களில் ஆஸ்தான நடிகையாக உலாவந்தவர் ரவளி. பின்னர் பார்த்திபனால் 'சீமைப்பசுவாக' புகழப்பட்டார்.

பார்த்திபன், ரவளி நெருக்கம் முறிந்த பின்னர், தெலுங்குப் பக்கம் போனார். சில படங்களில் கவர்ச்சி மழை பொழிந்தார். ஆயினும் போதிய வாய்ப்புக்கள் இல்லை.

சமீபத்தில் தெலுங்கில் கமனுடன் மட்டும் ஒரே ஒரு படத்தில் நடித்துள்ளார். அது தமிழிலும் 'செக்யூரிட்டி ஆபீஸர்' என்ற பெயரில் வரப்போகிறது.

கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கு சென்னையில் இருந்து அடிக்கடி போய் வருகிறார் ரவளி. கேட்டால் படப்பிடிப்பு என்கிறாராம். ஆனால் அப்படி எந்த புதிய படத்திலும் நடிப்பதாக தெரியவில்லை. அப்படியானால் எங்கு எதற்கு போகிறார்?

## ஷாலினி 30 இலட்சம்

குட்டிப் பாப்பாவாக ரசிகர் மனங்களை எட்டிப்பிடித்த பேபி ஷாலினி, இன்று கதாநாயகியாக உச்சத்தை எட்டியிருக்கிறார்!

'காதலுக்கு மரியாதை' படத்தின் பின்னர் அஜித்துடன் ஷாலினி நடித்துள்ள 'அமர்க்களம்' திரைக்குவரப்போகிறது. மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்திலும் கதாநாயகியாக நடித்து வருகிறார்.

'அலைபாயுதே' படத்தின் பின்னர் ஷாலினியின் சம்பளம் உயர்ந்திருக்கிறது. இந்திய மதிப்பில் 30 இலட்சம்வரை ஒரு படத்திற்கு கேட்கிறாராம். இதில் ஷாலினியின் அப்பா கறாராக இருப்பதாகவும் தகவல்.

ஆனால் ஷாலினி இதனை மறுக்கிறார். "தயாரிப்பாளர்கள்தான் என் சம்பளத்தை நிர்ணயிக்கிறார்கள். நான் கெடுபிடியாக நிற்பதில்லை!" என்று பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.




நெப்போலியன்-சுவாதி
படம்: சிவன்

## நட்சத்திர கிரிக்கெட்

தமிழ்நாட்டில் மாநகராட்சி பாடசாலைகளுக்கு உதவி செய்வதற்காக நட்சத்திரக் கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தினார்கள்.

விழாவை ஆரம்பித்து வைக்க வருவதாக ஒப்புக்கொண்ட கமலும், விஜயகாந்த்தும் நழுவிவிட்டனர். சரத்குமார், பிரபு, விஜய், அப்பாஸ், அருண்குமார், முரளி, வடிவேலு, செந்தில், ஜெய்கணேஷ் போன்ற நடிகர்களும், சிம்ரான் ரோஜா, மீனா, ராதிகா, கனகா, மகேஸ்வரி இந்து உட்பட பல நடிகைகளும் கலந்து கொண்டனர்.

இவர்களில் சரத்குமார் மட்டுமே பயிற்சியெல்லாம் செய்து கிரிக்கெட் வீரர் போலவே துடுப்பெடுத்தாடினார். விஜய மட்டையுடன் சென்றபோது ரசிகர்களின் கரகோசம் மைதானத்தை கிழித்தது. ஆனால் விஜய் ஒரு ஓட்டம் கூட எடுக்கவில்லை. கோட்டை விட்டார். மட்டையால் பந்தை தடவித் தடவிப் பார்த்தார். ம்ஹூம் வசமாக சிக்கவில்லை.

ராதிகா பந்துவீசி ஒரு விக்கெட்டை வீழ்த்தியதும் சந்தோசம் தாங்காது முரளியை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொள்ள, பார்வையாளர்களுக்கு மூச்சுத் திணறிவிட்டது.

இந்த உற்சாகத்தில் கார்கில் போர் நிதிக்காகவும் நட்சத்திர கிரிக்கெட் நடத்தி நிதி திரட்ட நட்சத்திரங்கள் சம்மதித்தனர்.



விசித்ரா

## கிரா:பிக்ஸ் அம்மன்

'அம்மன்', 'தேவி' போன்ற பக்திப் படங்கள் கிராஃபிக்ஸ் தொழில் நுட்ப வித்தைகளால் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதனையடுத்து அதே பாணியில் பல படங்கள் தயாராகி வருகின்றன.

தமிழிலும் 'ஊமைச்சியம்மன்' என்ற பெயரில் கிராஃபிக்ஸ் வித்தைகள் நிறைந்த பக்திப் படம் ஒன்று தயாராகிறது. இதனை அனுபவமிக்க இயக்குநரான வி.சி.குகநாதன் இயக்குகிறார்.

குஷ்பு, தேவயாணி, சங்கீதா, சுவலட்சுமி, கனகா, மாஸ்டர் மகேந்திரன், சிறுமி கௌரி ஆகியோர் நடிக்கின்றனர்.

இசை: இளையராஜா.

## ரஜினி உதவி

இந்த ஜூலை மாதமும் கடந்த ஆண்டைப் போல ஏழை ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கிறார் ரஜினி.

ஜோடிகள் திரட்டும் வேலையை ரசிகர் மன்றத் தலைவர் சத்யநாராயணாதான் செய்திருக்கிறார்.

இம்முறை தேர்தலில் பிரசாரம் செய்வதில்லை என்று ரஜினி முடிவு செய்திருக்கிறார். ஆனால் அவரை எப்படியும் வளைத்துப் பிடிக்க தி.மு.க. தரப்பு முயற்சிக்கிறது.

## 'டூப்' கிடையாது

'அமர்க்களம்' படத்தின் சண்டைக் காட்சிகளில் 'டூப்' போடமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து நடித்துள்ளார் அஜித்குமார்.

ஓடிவந்து கண்ணாடி ஜன்னலை உடைக்கும் காட்சி ஒன்றில் நடித்தாராம் அஜித். அந்தக் காட்சியில் 'டூப்'பாக நடிக்க இருந்த நடிகருக்கு 25000 ரூபா ஊதியத்தையும் தனது பணத்தில் கொடுத்தாராம் அஜித்.

சினி விசிட்



சத்யன்-ரவளி
படம்: செக்யூரிட்டி ஆபீஸர்

## புகை பகை

விஜயகாந்த் தொடர் புகை மன்னராக இருந்தவர். தற்போது புகை உடலுக்கு பகை என்று கைவிட்டுவிட்டார்.

உடற்பயிற்சியால் உடம்பையும் கட்டுக்கோப்பாக மாற்றிமிருக்கிறார். விஜயகாந்த்தை இப்போது பார்ப்பவர்கள் 'கண்ணுபடப் போகுதய்யா' என்கிறார்கள்.

## மினி சினி

* பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் 'நீ வருவாய் என...' படத்தில் கௌரவ வேடத்தில் அஜித்குமார் நடிக்கிறார். இதில் இவருக்கு இராணுவ வீரர்வேடம்.
* 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தை இயக்கிய ரவிச்சந்திரன் விரைவில் சிவாஜி புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.
* பிரபல இந்தி இயக்குநர் சுபாஷ் கய் இயக்கத்தில், முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் நடிக்கும் 'தால்' என்ற இந்திப்படம் தமிழில் 'தாளம்' என்ற பெயரில் மொழிமாற்றப்படுகிறது.
* தான் நடித்து வரும் சில படங்களுக்கு நகைச்சுவைப் பகுதிகளை எழுதி வரும் விவேக், அடுத்த வருட ஆரம்பத்தில் படமொன்றை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.
* சரத்குமாருக்கு ஜோடியாக 'ஒருவன்' படத்தில் நடித்துள்ள பூஜா பத்ரா, அடுத்து ராஜீவ்மேனன் இயக்கும் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தில் பூஜா பத்ராவாகவே நடிக்கிறார்.
* சத்யன்-கௌசல்யா நடிக்கும் 'கண்ணா உன்னை நேசிக்கிறேன்' படம், திலீப்-மஞ்சுவாரியார் நடித்த 'ஈ புழையும் கடந்து' என்ற மலையாளப்படத்தின் தமிழ்ப் பதிப்பு.
* பல சர்ச்சைகளுக்குள்ளான 'ஃபயர்' என்ற படத்தை இயக்கியவர் தீபா மேத்தா. இவர் இயக்கும் புதிய படமொன்றில் தபு நடிக்கவுள்ளார்.
* வஸந்த் இயக்கும் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படத்தில் இணைந்து நடிக்கும் சூர்யா-ஜோதிகா ஜோடி 'உயிரிலே கலந்தது' படத்தில் மறுபடி இணையவுள்ளது.
* டாக்டர் ராஜசேகரின் படங்களை தமிழில் மொழிமாற்றும்போது அதற்கு அவரது தம்பி செல்வா வசனம் எழுதுவார். இதேபோல் சாய்குமாரின் தமிழ்மொழிமாற்றுப் படங்களுக்கும் அவரது தம்பி ரவிச்சங்கர் தான் வசனம் எழுதுவார்.
* ரஞ்சித்-பிரியாராமன் ஜோடியாக நடிக்கும் 'நேசம் புதுசு' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக கேரளத்தைச் சேர்ந்த விஷாலி என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார்.



கரிஷ்மா
படம்: கோக

www.padippakam.com

ரயுலக பக்கம் 110

# கடத்தப்பட்ட நடிகை

நாட்டிலிருந்து **மயன்**

**நா**ன்கெழுத்து நடிகை அவர்! 'யா' என்ற எழுத்தில் அவர் பெயர் முடிவடைகிறது. அந்த
க்கு சமீபத்தில் பெரும் அதிர்ச்சி ஒன்று ஏற்பட்டது.
ழக மாநில அரசியலில் வி.ஐ.பி. ஒருவர் நடிகையின் வீட்டுக்கு போன் செய்தி
ர். அச்சமயம் நடிகை வீட்டில் இருக்கவில்லை. படப்பிடிப்பில் இருந்திருக்கிறார்.
பின் தாயார்தான் போனை எடுத்திருக்கிறார்.
த வி.ஐ.பியின் பெயரைக் கேட்டதுமே தாய்க்குலத்
கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.
கையை தான் கூறும் இடத்திற்கு அன்று
ய அனுப்பி வைக்குமாறும், நடிகையுடன்
செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் கூறியிருக்கி
.ஐ.பி.
ய்க்குலத்திற்கு என்ன பதில் கூறுவது என்றே
பில்லை. மகள் வந்ததும் தகவல் கூறுவதாக



## திருப்பம்?

பல படங்களில் கதாநாயகனாக நடித்தும் இதுவரை திருப்பம் எதுவும் இல்லையே என்பது விக்னேஷின் வருத்தம்.

திருப்பம் இருக்கிறதோ இல்லையோ காதலிகள் மட்டும் இவருக்கு தொடர்ந்து கிடைக்கிறார்கள்.

கூறிச் சமாளிக்கப் பார்த்தார். வி.ஐ.பி. விடவில்லை.

'என்ன பண்ணுவீங்களோ தெரியாது. இன்னைக்கு உங்க மகள் என்கூட வந்தாகணும், வந்தேயாகணும்' என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார்.

மகளுடன் தொடர்பு கொண்டு தகவலைக் கூறினார் தாய்க்குலம். "அந்த மனிதரின் வயதென்ன, என் வயதென்ன? அவருடன் நான் போகமுடியாது" என்று நடிகை தாயாரிடம் சத்தம் போட்டிருக்கிறார்.

சினிமா உலகில் மேலும் நிலைக்க வேண்டுமானால் அந்த வி.ஐ.பியை பகைக்க முடியாது என்பது தாய்க்குலத்திற்கு தெரியும்.

தயாரிப்பாளரிடம் ஒரே ஒரு போனில் அந்த வி.ஐ.பி. உத்தரவிட்டால் போதும், நடிகை நடிக்கும் படங்களில் இருந்து தூக்கிக் கடாசிவிடுவார்கள்.

முடிவை அறிய வி.ஐ.பி. தரப்பில் இருந்து மீண்டும் போன். இம்முறை வி.ஐ.பி.யின் தனிப்பட்ட செயலாளர்தான் பேசினார்.

மகள் மறுப்பதை சொல்லிவிட்டார் தாய்க்குலம். தனக்கு மறுப்பில்லை என்பதையும் கூறிவிட்டார்.

அடுத்த பத்தாவது நிமிடமே வி.ஐ.பி.யின் அடியாட்கள் நான்கு ஐந்துபேர் நடிகை வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். நடிகை எப்போது வருவார் என்று காத்திருந்தனர்.

## கடத்தல்

இரவு ஏழு மணியளவில் படப்பிடிப்பில் இருந்து வீடு திரும்பினார் நடிகை. அவர் காரைவிட்டு இறங்கியதுதான் தெரியும். அலாக்காகத் தூக்கிச் செல்லப்பட்டு இன்னொரு வண்டிக்குள் திணிக்கப்பட்டார்.

மகளுடன் வண்டி பறந்து போவதை நடிகையின் தாய்க்குலம் ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டிருக்க, நடிகையின் கார்ச்சாரதி அலறியடித்துக்கொண்டு போய் அவரிடமே முறையிட்டார்.

"வெளியே இதுபற்றி மூச்சுவிடக் கூடாது!" என்று சாரதிக்கு கூறிவிட்டார் தாய்க்குலம்.

வி.ஐ.பி.யைக் கண்டதும் கடத்திச் செல்லப்பட்ட நடிகை பெட்டிப் பாம்பாக அடங்கிவிட்டார். அவருடன் ஊட்டிக்குச் சென்று மூன்று நாட்கள் 'கம்பனி' கொடுத்தார்.

இதனால் நடிகை நடித்த இரண்டு படங்களின் படப்பிடிப்புக்கள் இரத்தாகின. தயாரிப்பாளர்களுக்கு பெருத்த நஷ்டம். நடிகைக்கு உடம்பு சரியில்லை· ஓய்வில் இருக்கிறார் என்று சொல்லிச் சமாளித்தார் தாய்க்குலம்.

அந்த நடிகையை தன் கட்டுப்பாட்டிலேயே இருக்குமாறு கேட்டாராம் அந்த வி.ஐ.பி. மாதாந்தம் கணிசமான தொகை தருவதாகவும் கூறியிருக்கிறார். நடிகை பவ்வியமாய் மறுத்துவிட்டாராம்.

அந்த வி.ஐ.பிக்கு இதுதான் பொழுதுபோக்கு. திரைப்படங்களை பார்க்கும்போது. அதில் நடிக்கும் நடிகைகள் அவரைக் கவர்ந்துவிட்டால் போதும். வேட்டையை ஆரம்பித்துவிடுவார்.

தமிழ்நாட்டில் இரும்புக்கு பெயர்போன பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்தான் அந்த வி.ஐ.பி. அவரது பெயருக்குள் ஒரு பழவகையின் பெயரும் மறைந்திருக்கிறது.

—★—

## மறுபடி நட்பு

இயக்குநர்களுக்கும் நடிகைகளுக்கும் இடையே உரசல் ஏற்படுவது போன்றே, விரிசல்களும் ஏற்படுவது வழக்கம்.

சுந்தருக்கும் ரம்பாவுக்கும் இடையே உரசல் இருந்தது. பின்னர் விரிசல் ஏற்பட்டு, சங்கத்தில் புகார் செய்யுமளவுக்கு போனது.

குஷ்பு இருக்கக்கூடியதாகவே ரம்பாவையும் தன் நண்பியாக ஏற்று நடத்தினார் சுந்தர். இவர்களது நெருக்கம் படப்பிடிப்புக் குழுவினருக்கும் பரகசியம்.

இதனை அறிந்த குஷ்பு சுந்தரில் ஏறி விழுந்தார். தற்கொலை செய்யப்போவதாக மிரட்டினார். அரண்டுபோனார் சுந்தர்.

அதன் பின்னரே ரம்பாவை சற்று ஓரம் கட்ட முற்பட ரம்பா கோபத்தில் கொந்தளிக்க தகராறு முற்றியது.

ஆனால் தற்போது மறுபடி பழைய 'நட்பு' துளிர்த்துள்ளது. இப்போது குஷ்புவும் குறுக்கே நிற்கவில்லை. இதன் மர்மம்தான் புரியவில்லை.

குஷ்புவும் பிரபுவும் மறுபடி ஒரு படத்தில் இணைந்து நடிக்கவும் பேச்சு வார்த்தை நடந்துவருகிறது. இதற்கு சுந்தர் தடைபோடவில்லை. இதுவும் புதிராகவே இருக்கிறது.

சுந்தர் இயக்கத்தில் குஷ்புவும் ஒரு படத்தில் நடிக்கிறார். இருவரும் தமது திருமணம் விரைவில் நடக்க உள்ளதாகவும் கூறி வருகிறார்கள்.

# புதிய கூட்டணி

## விவேக்—வையாபுரி

செந்தில், கவுண்டமணி கூட்டணிபோல இப்போது விவேக், வையாபுரி கூட்டணி நகைச்சுவை நடிப்பில் கொடிகட்டிப் பறக்கிறது.

சமீபத்திய வெற்றிப் படங்களில் விவேக், வையாபுரி கூட்டணிதான் நகைச்சுவை விருந்து படைத்திருக்கிறது.

இக் கூட்டணி பற்றி வையாபுரி கூறுகிறார்: "நானும் விவேக்கும் 'இளையராகம்' படத்தில்தான் ஜோடி சேர்ந்து நடித்தோம். அதன் பின்னர் 'கண்ணெதிரே தோன்றினாள்', 'உன்னைத் தேடி', 'பூமகள் ஊர்வலம்' உட்பட பல படங்களில் ஜோடியாக நகைச் சுவை பண்ணியிருக்கிறோம்.

தற்போது 'ஆசையில் ஒரு கடிதம்', 'ரோஜா வனம்' உட்பட பல படங்களில் இணைந்து நடிக்கிறோம். எங்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக உலா வரும்" என்று நம்பிக்கையோடு கூறுகிறார்.

முகப்பில் கௌசல்யா

ரம்யா கிருஷ்ணன்



அஜித்குமார்-ஷாலினி
படம்: அமர்க்களம்

## ணுவ சாந்தி

அதிகாரியாக, புரட்சிப் பெண்
றியும் அதிகாரியாக என்று
ளில் நடித்தார் விஜயசாந்தி.
த்னா' படத்தில் இராணுவ
நடிக்கிறார். இந்திய இரா
ம்களுக்கு அருகே குளிர் பிர
ட்டிப் புரண்டு சண்டை போட்
ந்தி ஐ.பி.எஸ்'
த்து ஏராள
பெண் கள்
வேலையில்
அதேபோல
ா' பார்த்து
பெண்கள்
தில் சே
அதுதான்
ம்' என்
சாந்தி.

## ஜப்பானில் ரஜினி

ஜப்பானில் ரஜினியின் 'முத்து' படம் பிரமாதமாக ஓடியது. அதனால் 'எஜமான்' படத்தையும் வாங்கி திரையிட்டார்கள். அதுவும் செமர்த்தியான வசூல். அதனால் 'தளபதி' பட உரிமையை வாங்குவதற்கு அங்குள்ள விநியோகஸ்தர் முன்வந்துள்ளார். அடுத்தது படையப்பாதான்.

மொழி புரியாது விட்டாலும் ரஜினியின் ஸ்டைலை ஜப்பானியர்களும் ஆர்வமாக ரசிக்கிறார்களாம். கலைக்கு மொழி தடையில்லை என்பது சரிதான்.

## தேவா மகிழ்ச்சி

தமிழ்ப்பட இசையமைப்பாளர்களில் தொடர்ந்து அதிக படங்களுக்கு இசையமைத்து வருபவர் தேவா.

அவரது இசையில் வெளியான 'உன்னைத் தேடி', 'வாலி' ஆகிய படங்கள் வெற்றி பெற்றதில் சந்தோசமாக இருக்கிறார். 'நெஞ்சினிலே' படமும் தேவா இசையில் ஜூன் 25 இல் வெளிவந்திருக்கிறது.



## ஓஹோ இல்லாத ஒருவன்

**படம்:** ஒருவன்
**நடிப்பு:** சரத்குமார், தேவயானி, பூஜாபத்ரா, ஆனந்தராஜ், மணிவண்ணன், விவேக், வடிவேலு, ரகுவரன், தலைவாசல் விஜய்.
**இயக்கம்:** சுரேஸ் கிருஷ்ணா. **இசை:** தேவா.

பிரமாண்டமான தயாரிப்பாக வந்துள்ளது. ஆனால் கதை? சொதப்பல்!

சரத்குமார் தீயணைப்பு படை அதிகாரி. தேவயானி மனைவி. அழகான குழந்தையும் உண்டு. ஆனந்தராஜ் பற்றிய இரகசியங்கள் அடங்கிய நாட்குறிப்பை பத்திரிகையாளர் பூவிலங்கு மோகன் சரத்குமாரிடம் தந்துவிட்டு பலியாகிறார்.

அதனை மீட்க வரும் ஆனந்தராஜ் சரத்குமாரை சுடுகிறார். அந்த தீ விபத்தில் தேவயாணியும், குழந்தையும் இறக்கிறார்கள்.

ஆனந்தராஜும் சரத்குமாரால் தீயில் எறியப்படுகிறார். பின்னர் உயிர் தப்பி வேறு பெயரில் நடமாடுகிறார்.

இதற்கிடையே சரத் ஒரு பையனை காப்பற்றி வளர்க்கிறார். அது ரகுவரனின் பிள்ளை என்று தெரிகிறது.

ரகுவரன் துப்பறியும் அதிகாரி. ரகுவரனை மிரட்ட அவரது மகனை ஆனந்தராஜ் கடத்த, சரத் குமார் காப்பாற்றுகிறார். ஆனந்தராஜும் கொல்லப்படுகிறார். இதுதான் கதை.

மணிவண்ணன், விவேக், வடிவேலு கூட்டணி மலசலகூடத்தை வைத்தே நகைச்சுவையை ஒப்பேற்றிவிடுகிறது. வடிவேலு மறதிக்காரராக வருகிறார். கலகலப்புக் கூட்டணிதான்.

பூஜாபத்ரா சரத்தை காதலிக்கிறார். ஆழமில்லாத காட்சிகள். பூஜாபத்ராவும் மனதைக் கவரவில்லை. ஏன்தான் இவரை தெரிவு செய்தார்களோ தெரியவில்லை.

தேவயாணி சில காட்சிளே வந்தாலும் நிற்கிறார். சரத்தின் வளர்ப்பு மகனான சுட்டிப்பையன் சிறப்பான தெளிவு. பாடல்கள் தேறவில்லை. ஒளிப்பதிவு இடைக்கிடையே பொறுமையைச் சோதிக்கிறது.

சரத்தின் நடிப்பு ஜொலிக்கிறது. இயக்கமும் விறுவிறுப்புத்தான். ஆனாலும் படத்தில் ஏதோ ஒன்று குறைவது போன்ற திருப்தியின்மை ஏற்படுகிறது. ஆனந்தராஜ் ஜமாய்க்கிறார். ரகுவரனை வீணடித்திருக்கிறார்கள். நடிக்க சந்தர்ப்பமே தரவில்லை.

**ஒரே சொல்:** ஒருமுறை பார்க்கலாம்! பரவாயில்லை ரகம். ஜூன் 25 இல் தமிழ்நாட்டில் திரைக்கு வந்துள்ளது. நம் நாட்டில் வீடியோ மற்றும் வி.சி.டி.களில் தரமான பிரதிகள் வந்துள்ளன.

## அங்கும் மயக்கம்

காதலரின் கவனிப்பில் இருந்தபடியே படங்களிலும் நடித்து வருகிறார் மந்த்ரா.

தமிழில் மந்த்ரா நம்பியிருக்கும் ஒரே ஒரு படம் புதுக்குடித்தனம். விக்னேஷ் ஜோடியாக நடிக்கிறார்.

கன்னடத்திலும், தெலுங்கிலும் சில படங்களில் நடிக்கிறார். கன்னட ரசிகர்களும் மந்த்ராவின் முன்னழகில் மயங்கப்போகிறார்கள். மயங்கிவிடலாம் என்ற நம்பிக்கை மந்த்ராவுக்கு இருக்கிறது.

## கௌசல்யா-சங்கவி

## இவர்கள் நடுவே பிரபுதேவா

பிரமாண்டமான படங்களை இயக்கி வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக சந்தித்தவர் கே.சுபாஷ். தற்போது மற்றொரு பிரமாண்டமான படத்தை இயக்கப்போகிறார்.

ஏற்கனவே பிரபுதேவா நடித்த 'நினைவிருக்கும்வரை' படத்தை சுபாஸ் இயக்கியிருந்தார். பிரமாதமான வெற்றி பெறாவிட்டாலும், போட்ட முதலுக்கு மோசமில்லை. நஷ்டமில்லை.

அதனால் தனது அடுத்த படத்தையும் பிரபுதேவாவை வைத்து இயக்குகிறார் சுபாஸ். இப்படத்தில் பிரபுதேவாவுக்கு இரண்டு ஜோடிகள். கௌசல்யா, சங்கவி. படத்திற்கு சூட்ட பெயர் தேடுகிறார்கள். ரஞ்சித், விவேக், நம்பியார், குமரிமுத்து உட்பட பலர் நடிக்கின்றனர். இசை: தேவா.



படிப்பகம்

www.padippakam.com

## சரியான விடையின் கீழ் கோடிடு

ஞாயிறுகளில் உதித்து
என்னை தீயிட்டு
கொளுத்துபவளே!
••
உன் நினைவுகளை
தொட்டெழுதிய-
என் வாழ்க்கைக் கவிதைக்கு
இன்னும் முற்று
வைக்கப்படவில்லை!
••
மரண விளிம்பிலும்
உன் நினைவுகள்
தெத்திக் காட்டுகிறது.
••
நீ மௌனமாகிறாய்
நான் இங்கு-
மரணமாகிறேன்!
••
உன் நினைவுகளில்
இன்னும் என்னுயிர்
இன்னும் என்னுயிர்!
••
தோழி-
நீ காணிக்கையாகவாவது
எனக்கு வாழ்க்கையை
பிச்சை போடு!
••
உன்னில்
வெந்து நொந்த
என் உயிர்
இனியாவது
ஆனந்தமடையாதா?
••
நீ என்னை விட்டு
தூரமாகி விடாதே!
நெஞ்சம் பதறிவிடும்!
••
பெண்ணே!
நான் சுவாசிக்க மறந்தாலும்
உன்னை நினைக்க
மறப்பதில்லை!
••
நீதான் என் வாழ்க்கையின்
சுவாசம்!
••
கறுப்பு உடுத்திய
என் வாழ்க்கை நிலவே!
என் வானத்தில் எப்போது
பௌர்ணமியாவாய்?
••
நீ காற்று! மறுத்து விடாதே
நான் சுவாசிக்க வேண்டும்.
••
என் வாழ்க்கை
சூனியமா? கலர் கனவுகளா?
சரியான விடையின் கீழ்
கோடிடு.
••
எதிர் பாராத விடையாக
நீ என்னை இன்னுமொரு தரம்
மரணிக்க வைத்துவிடாதே!

எம்.ஏ. தஸ்ரீப்.

## எனது நிபந்தனை....

ஒன்று:-
உன் பெயரை
என்
உதடுகள்
உச்சரிக்கின்றது.
அது
உச்சரிக்கவில்லையென்றால்
எனக்கு
உதடுகள் இருந்தும்
பயனில்லை....
▫▫
இரண்டு:-
கண்களால்
தினம்-தினம்
உன் அழகு முகம்
காண்கின்றேன்.
அந்த முகம்
காணவில்லையென்றால்
எனக்கு
கண்ணிருந்தும்
பயனில்லை...
▫▫
மூன்று:-
கைகளால்
உனக்கு
சைகை காட்டுகிறேன்.
அதைக் காட்டவில்லையென்றால்
எனக்கு
கையிருந்தும்
பயனில்லை...
▫▫
நான்கு:-
கால்களால்
உன்னைத் தேடி
வீதி
வலம் வருகின்றேன்.
அப்படி
வரவில்லையென்றால்
எனக்கு
காலிருந்தும்
பயனில்லை...
▫▫
ஐந்து:-
எனது
இதயம்
உன்னை
இப்படி எல்லாம்
நினைக்காவிட்டால்,
எனக்கு
இதயமிருந்தும்
பயனில்லை...

என்.எல். முஸம்மில்-
புதிய காத்தான்குடி-06.

## யார் இவர்கள்?



வில்லன் நடிகர் அல்ல இவர். தமிழ் நாட்டின் சிறந்த துப்பறியும் எழுத்தாளர். தற்போது உயிருடன் இல்லை. துணிவே துணை என்பார். இனிப்பான பெயர் கொண்ட சஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்தவர். தற்போது இவரது மகன் ஆசிரியராக இருக்கிறார். அவர் அடிக்கடி கொழும்பு வந்து போயிருக்கிறார். கண்டு பிடிக்க முடிகிறதா?



சிவாஜி கணேசனின் நண்பரான இந்த நடிகர் பல படங்களில் அவருடன் நடித்து பாராட்டுப் பெற்றவர். இவர் குரலும் கம்பீரக் குரல்தான். இவரது பெயருக்கு முன்னால் உள்ள பட்டத்தை சொன்னாலே யார் என்று புரிந்து விடுமள வுக்கு பிரபலம். சுந்தரமான இவரைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.?

விடைகளுதவி: 18ம் பக்கம்

## புரியாதா உனக்கு என் கவலை?

என்
இதயத் துடிப்பின்
எதிரொலியே!

இதழ் பிரியாப் புன்னகையால்
என்னைப் பித்தனாக்கிய
பூங்கொடியே!

பூப்படைந்த கற்பனைக்கு
பொட்டிட்டு தலைவாரி
யாப்படைந்த கொலுசிட்டு
அழகு பார்க்க வைத்திட்ட
கலைமகளே!

என் கவி வரிகளுக்கு
களமமைத்துக்
கொடுத்தவளே!

தனிமரமாய் என்னைத்
தவிக்க வைத்த
பூமகளே!

கண்ணீர் மழையதனைக்
கவி மலராய்த்
தொடுக்கின்றேன் மோகனமே!

உன் இதயத்தில்
இடமிருந்தால்
படித்துப் பார்!
இளையவளே!
புரிந்திடும் உனக்கு
என் கவலை!

வாஞ்சியூர்: எஸ். ஞானு.

## முகம் காட்டிவிட்டுப்போன ஒரு மோகனம்

பொருத்தங்கள்
இடம்மாறித்தான்போனது.
உயிரின் நாடிகளின்
உணர்வுப் பிறழ்வுகளிலும்
உன் நினைவுகள்
குமிழிடுகின்றன.
**
ஒரு கணப் பொழுதாயினும்
குதூகலித்துத்தான் போனேன்!
ஏதோ காலம் காலமாய்
கட்டிக் காத்த
உறவு போல அது!
**
எட்டாத தொலைவில்
ஏக்கம் தவித்தழுகின்றது மனம்:
உன் சுமைகளைச்
சுமக்க ஆவல் படுகிறேன்!
**
ஒவ்வொரு பனிதூவும்
மாலைப் பொழுதுகளிலும்
நீ என்னருகில் வேண்டும்போல
வாஞ்சைப் பட்டுப் போகிறேன்.
**
அந்த மழைக்கால இருட்டும்
சிறு தூறலும்
நீயும் நினைவுகளில்
பதிந்து போய்...
என் கற்பிதங்களுக்கு
பூர்வ ஜென்மம் என்றுவிட்டுப்
போயே விட்டாய்.
**
சிதறுபட்ட ஞாபகங்களாய்
ஏன்தான் அந்தப் பொழுதுகள்
வந்து போயினவோ?
**
அந்த அரங்கம்
உன் சிணுங்கும் குரல்
என்னை இரசிக்கும்
உன் இரசனை; உன் அண்டை
உன் இதழ்கள்; உன் சிரிப்பு
உன் எல்லாமே
என்னுடனாக... எனக்காக...!
**
மனம் அங்கலாய்த்துக்
கொண்டு
அவதிப் பட்டுக் கொள்வதோடு
கண்களை மூடிக்
கொள்கிறேன்.
கனவாவது வருவதற்காக...

ஹரீரா அனஸ்-
இலண்டன்.

## தேன் கிண்ணம்

## கிடைக்கப் போவது

கைப்பிடிக்குள் வந்த..
வெண் புறா..
உயிரோடு இருக்குமா..?
அழுத்தி அமத்திப்
பிடித்திருந்தால்...?
***
அனுசரிக்க வேண்டிய..
அத்தனை பேரையும்
திருப்திப் படுத்தி
முடியுமுன்னரே
மாயமாகிப் போகலாம்
சமாதானம்....!
***
ஐயகோ..
சமாதானத்தின்..
குரல் வளை..
அதிகாரக் கரங்களுக்குள்
அமுங்கிப் போனதோ?
***
பக்கவாத்தியம் வழங்க
பாகவதர்களிருந்தால்
பாடுபவர்களுக்கு ஏன்
தெம்பிருக்காது...?
***
சாயம் பூசினாலும்
சாக்கடைகளில்
கிடைக்கப் போவது
அழுக்குகள் மாத்திரமே
அடித்துச் சொல்லலாம்!

என். சஹாப்தீன்-
ஒட்டமாவடி.

## கிழித்துப் போட்டாய்

இரவுகளை
வெறும்
கண்ணீரால்
நனைத்து விடவா
காதலிப்போம்-வா
என்றாய்?
**
இதயத்தை
ஒரு
சிறையென நினைத்தா
கவனமாய் எடுத்து
கழிவுக்குள்
எறிந்தாய்?
**
கவிதைகளை
வெறும்
கற்பனை என்றா
இரசித்துப் படித்தாய்...?
பின்
கிழித்துப் போட்டாய்?
**
நினைத்துக்கொள்!
எனக்கு
சொர்க்கம்
எங்கோ
ஒரு
தொலைவிலேனும்...
உனக்கு...?

உதயா பசுபதி- மல்லாவி.

## நீங்கள் நீரிழிவு நோயாளியா? உங்களுக்கு உதவும் பயிற்சிகள்!

மற்றவர்களைவிட நீரிழிவு நோயாளிகளுக்கு, காலிலும், உள்ளங்காலிலும் இரத்த ஓட்டம் குறைந்து தொல்லைகள் ஏற்படலாம். தினமும் உடற்பயிற்சி செய்வதாலும் புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவதன் மூலமும், கால்களுக்கு ஏற்படும் கொடிய பின் விளைவுகளைத் தடுக்க முடியும்.



**1. நடத்தல்:**

தினமும் அரைமணி அல்லது ஒரு மணி நேரம் சுறுசுறுப்பாக நடந்து பழகவும். தினமும் நடக்கும் தூரத்தை அதிகப்படுத்தவும்.



**2. மாடிப்படி பயிற்சி:**

முன்னங் கால்களை மட்டும் உபயோகித்து விரைவாக மாடிப்படி ஏறவும்.

**3. கெண்டைக்கால் சதையை நீட்டுதல்:**




முழங்கை மடியாமல் கைகளை நீட்டி, உள்ளங்கைகளை சுவரில் பதிக்கவும். கால்கள் சுவரில் இருந்து சிறிது தூரத்தில் பார்க்கும் படி நின்று உள்ளங்கால்களால் தரையைக் கெட்டியாக அழுத்திய படி நிற்கவும். கைகளை மடித்தும், நீட்டியும் அதே சமயம் உடல், கால்கள், பாதங்கள் நேராக இருக்கும் படியும் வைத்து முன்னும் பின்னும் அசையும் பயிற்சியை 10 முறை செய்யவும். இப்பயிற்சி கெண்டைக்கால் பிடிப்பு, கால் மரத்துப்போதல் இல்லாமல் காக்கும்.

**4. நாற்காலி உடற்பயிற்சி:**



ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளவும். கைகளை முறுக்காகக் கட்டிக் கொண்டு. நாற்காலியிலிருந்து எழுந்து கொள்ளவும். இவ்வாறு 10 முறை செய்யவும்.



**5. நுனி விரல்கள் பயிற்சி:**

ஒரு நாற்காலியின் பின்புறமாக நின்று அதைப் பிடித்துக் கொள்ளவும். நின்ற இடத்திலேயே கால் விரல்களை உயர்த்தித் தாழ்த்தவும்.

**6. முழங்கால் வளைத்தல்:**



ஒரு நாற்காலியை கையால் பிடித்துக் கொள்ளவும். முதுகை வளைக்காமல் நேராக வைத்துக் கொண்டு, முழங்காலை 10 முறை மடக்கவும்.

**7. குதிக்காலை உயர்த்துதல்:**

முன் கால்களை அழுத்தி குதிக்காலை உயர்த்தவும். பிறகு குதிக்காலைத் தாழ்த்தவும். பிறகு உயர்த்தவும். இது போல 20 முறை செய்யவும். உங்கள் உடம்பின் முழு எடையையும் ஒரு காலில் தாங்கிக்கொண்டு நிற்கவும். இன்னொரு காலுக்கும் அதேபோல் செய்யவும்.




**8. கால் வீசுதல்:**



ஒரு காலால் சற்று உயர்த்திய நிலையில் நிற்கவும். உதாரணமாக ஒரு பலகைக் கட்டையில் நிற்கவும். ஒரு நாற்காலியையோ, மேசையையோ பிடித்துக் கொண்டு இன்னொரு காலை முன்னும் பின்னுமாக ஆட்டவும். இதுபோல் 10 முறை செய்யவும். இன்னொரு காலுக்கும் இதேபோல் பயிற்சி செய்யவும்.

**9. கால்களை அசைத்தல்:** கால்களை நீட்டி தரையின் மீது உட்காரவும். உள்ளங்கைகளைத் தரையில் பதித்து, சிறிது பின்னால் சாய்ந்தபடி உட்காரவும். காலை உயர்த்தி முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் அசைத்து, கால்கள் பிடிப்பு நீங்கும்வரை செய்யவும்.



♥ இதயநோய் உள்ளவர்கள் மருத்துவரைக் கலந்தாலோசித்த பிறகே, பயிற்சிகளைச் செய்ய வேண்டும். நடப்பதையும் கால்களுக்கான பயிற்சிகளையும் தினமும் செய்ய மறந்து விடாதீர்கள்.

நன்றி: 'நோவோ' வெளியிட்ட 'நீரிழிவு நோயுடன் சுலபமாக வாழ்வது எப்படி?'

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கீர்னீர'

11.07.99 முதல் 17.07.99வரை

**மேடம்:**
7 1/2 சனி காலம், கிரகயோகம் அமைப்பில் ஜென்ம வீட்டில் வியாழன் அமைதலும், எதிர்பார்த்த விடயங்கள் சிக்கல்களிலேயே காணப்படும். கல்வி, தொழில் விடயங்கள் தடைகளாகவே அமையக்கூடிய சூழ்நிலை. பரணி, கார்த்திகை நட்சத்திரருக்கு நிகழ வாய்ப்பு உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை: எண் : 2.
அதிஷ்ட திகதிகள் : 11, 16.

**இடபம்:**
சனிகாலம் தடைகள் தாமதங்களைக் கொடுத்தாலும் எப்போதும் தொழில் முயற்சிகள் சீராக அமையும். தூர இடத்து உறவினர் நண்பர்கள் வருவார்கள். ரோகிணி, மிருகசீரிட நட்சத்திரருக்கு பண வசதிகள் வந்து சேரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம் சிவப்பு: எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 12, 14.

**மிதுனம்:**
11ம் இடத்தில் கிரகச் சிறப்பு உள்ளதும் காலக்கிரக உதவியின்படியும் மாறி மாறி சுபஸ்தானத்தில் வேலை செய்வதால் தடைப்பட்ட கருமங்கள், திருமணங்கள் என்பன கைகூடும். பண வசதி பெருகும். புநர்பூச நட்சத்திரக்காரருக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : இளபச்சை: எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 11, 15.

**கடகம்:**
10ம் இடத்தில் கிரக நட்சத்திரஸ்தான ரூபபலம் பெற்று உள்ளதால் உடலில் நோய் துன்பங்கள் தோன்றும், மனதில் நிம்மதியற்றுக் காணப்படும். கணவன், உறவினர்களது ஒத்துழைப்பு பெண்களுக்குக் கிடைக்கும். ஆயிலிய நட்சத்திரக்காரர் ஓரளவு நன்மை பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்: எண் : 8.
அதிஷ்ட திகதிகள் : 17, 14.

**சிம்மம்:**
9ம் இடத்தில் பாக்கியஸ்தானமும் கிரகபலச் சிறப்பும் பெறுவதால் முக்கிய உறவினர்களைச் சந்திப்பார்கள். எண்ணிய கருமங்கள் சிறப்புற நடைபெறும். புதிய வாழ்வு மலரும். மகம், பூர நட்சத்திரருக்கு சிறப்பான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்: எண் : 3.
அதிஷ்ட திகதிகள்: 12, 14.

**கன்னி:**
அட்டமத்துச்சனி காலமும் கிரக அம்ஸ நிலையுள்ள அமைப்பும் நன்றாக இல்லாதமையினால் பலகருமங்கள் தடை சிக்கலுடன் காணப்படும். எதிலும் உறுதியான நிலை தென்படமாட்டாது. பணம் பொருள் விரயமாகும். அத்த நட்சத்திர பெண்கள் உடலைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: இளநீலம்: எண் : 4.
அதிஷ்ட திகதிகள்: 13, 15.

**துலாம்:**
7ம் களத்திர யோகம் கொண்ட வியாழனும் கிரகபல சுக்கிரனும் குடும்பத்தில் சுபகருமங்களைக் கொடுக்கக் கூடியவாறு அமையும். பரீட்சைகள், தொழில் முன்னேற்றங்களும் தூர தேசப்பயணமும் ஏற்படும். விசாகம், சுவாதி நட்சத்திரருக்கு நன்மையான காலம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : றோஸ்: எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 11, 14.

**விருட்சிகம்:**
மறைவுஸ்தான கிரகபலம் எடுத்த கருமங்களைத் தாமதப்படுத்தினாலும் முன்னேற்றங்களைக் கொடுக்கும். பொதுவான காலபலன்படி நன்மையான பல விடயங்கள் சுமுகமாக அமையும். அனுஷ நட்சத்திரருக்கு நன்மையான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்
அதிஷ்ட நிறம் : பச்சை: எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 15, 16.

**தனுசு:**
5ம் இடத்தில் கிரக பலம் சிறப்படைவதால் குடும்பத்தில் முன்னேற்றங்கள் அமையும். பொருளாதார வசதிகள் கைகூடும். பிரயாண வாய்ப்பும் உருவாகக்கூடிய நிலை காணப்படும். மூல, உத்திராட நட்சத்திரருக்கு யோகமான காலமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: சாம்பல்: எண் : 3.
அதிஷ்ட திகதிகள்: 12, 14.

**மகரம்:**
சனி ஆதிபத்தியம் பெற்று வீட்டிலுள்ள இவ்விராசியினருக்கு ஓரளவு சோதனைகள் வந்தாலும் பணப் பொருளாதார வசதி ஏற்படும். வார நடுப்பகுதியில் உடலில் நோய் துன்பங்கள் வந்து போகும். பிள்ளைகள் உறவினர்களால் பிரச்சனைகள் தோன்றலாம். அவிட்டம்திருவோண நட்சத்திரருக்கு வாரப்பிற்பகுதி ஓரளவு நல்ல பலன் தரும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், சனி.
அதிஷ்ட நிறம்: மரூண்: எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**கும்பம்:**
சனி 3ம் வீட்டில் நீசமடைவதாலும் 3இல் வியாழன் சிறப்புக் குன்றுவதாலும் எதிர்பார்த்த கருமம் ஏமாற்றத்தைத் தரும். பெரிய செலவுகள் ஏற்படும். தொழில் செய்யும் அல்லது வீட்டில் பிரச்சனைகள் தோன்றி மறையும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை: எண்: 8.
அதிஷ்ட திகதிகள்: 17, 14.

**மீனம்:**
ஏழரைச் சனி முடிவுறும் காலத்தில் உள்ளதாலும் வியாழன் 2ம் வீட்டில் உள்ளதாலும் கல்வி, தொழில் சிறப்பாக அமையும். உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கையும், வசதி வாய்ப்புக்களும் ஏற்படும். உத்திரட்டாதி நட்சத்திரருக்கு சிறப்பான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : கலப்பு நிறம்: எண்: 5.
அதிஷ்ர திகதிகள் : 14, 15.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## காது சுத்தம்

காதுக்குள் எறும்பு சென்று விட்டால் உடனே அதை எடுக்க முயற்சிக்கக் கூடாது. பதற்றத்தில் காதுக்குள் ஏதாவது கருவியைப் புகுத்தி எடுக்க முயன்றால், அது இன்னும் பலமாக உள்ளே சென்று விடும்.

அதே நேரம் எறும்பு காதுக்குள் இரண்டாகப் பிய்ந்து விடுமே தவிர, வெளியே வராது. சிலர் இந்த எறும்பை அகற்ற காதுக்குள் தண்ணீர் ஊற்றுகின்றனர். நீரில் ஒட்சிசன் இருப்பதால் எறும்பு காதுக்குள் உயிர் வாழும்.



எனவே காதில் ஒரு துளி எண்ணெயை விட்டால் எறும்பு இறந்துவிடும். வலியும் நின்று விடும். பின் எறும்பை இலகுவாக எடுத்துவிடலாம்.

உறவு முறையில் திருமணம் செய்வதால் செவிட்டுத்தன்மை அதிகம் ஏற்படுகிறது. காதில் சீழ் வருவது பரம்பரை வியாதி அல்ல. காதில் சீழ் வந்தால் செவிடாகும் வாய்ப்பும் உண்டு. சிலருக்குக் காதில் வரக்கூடிய சீழ் மூளையையும் பாதிக்கும்.

காது குடைதல் என்பது ஒரு இன்பமான நிகழ்வு. இதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தால் என்றைக்காவது ஒரு நாள் செவிப்பறை கிழிபட வாய்ப்பு உண்டாகி விடும். காது குடைய கடைகளில் விற்கும் 'பட்ஸ்'ஸை உபயோகிப்பதன் மூலம் அழுக்குகளை நாம் உள்ளே தள்ளி விடுகிறோம்.

அழுக்கு இயற்கையாகவே உண்டாகிறது. சவர்க்காரம், சீயக்காய் போன்றவைகளால் தான் இந்த அழுக்கு உண்டாகிறது என்பது தவறு. இயற்கையாகவே தோலின் மேல் அழுக்குப் படியும் தன்மையுள்ளது.

இந்த அழுக்குத்தான் கெட்ட வாடையை ஏற்படுத்தி நம் உடலின் உள்ளே பூச்சிகள் செல்லவிடாமல் காக்கிறது. மூக்கு, காது, வாய், சிறுநீர்த் துவாரங்கள் ஆகியவற்றில் மட்டும் கெட்ட வீடை இல்லை என்றால், பூச்சிகள் உடலுக்குள் செல்ல ஏதுவாகிவிடும். இது எமது உடலில் இயற்கையாகவே உள்ள காவல் அரணாகும்.

எனவே காதுகளை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

## கட்டான உடல்



உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள எல்லோருக்கும் ஆசைதான். ஆனால் வாயைக் கட்ட அவர்களால் முடிவதில்லை.

தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே சாப்பிடும் பழக்கம் இருக்கிறதா? நான்கு பேரிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே எதையாவது கொறித்துக் கொண்டிருக்கும் பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா?

இதெல்லாம் இருந்தால் உங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க முடியாது.

உணவின் அளவு, ஒரு நாளைக்கு எத்தனை தடவை உணவு சாப்பிடுதல், உணவில் இருக்கும் கொழுப்பு, உணவில் இருக்கும் சத்து, உணவு சாப்பிடும் முறை, உடற்பயிற்சி- இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு ஒருவருடைய உடல் கட்டுக் கோப்பு நிர்ணயிக்கப்படுகிறது.

**உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருக்க சில ஆலோசனைகள்:**

- சாப்பிட்ட சிறிது நேரத்தில் மீண்டும் பசி எடுப்பதுபோல் தோன்றினால் சீனி போடாமல் ஒரு 'கப்' தேனீர் குடியுங்கள்.
- நன்றாக மென்று சாப்பிடுங்கள். மென்று மெதுவாகச் சாப்பிடாவிட்டால் தேவைக்கு அதிகமான உணவு வயிற்றுக்குள் சென்று விடும்.
- குழந்தைகள் மிச்சம் வைக்கும் உணவை பெற்றோர் சாப்பிடுவதைத் தவிர்த்து விடுங்கள்.
- தினசரி உடற்பயிற்சி செய்யுங்கள்.
- இரண்டு வாரத்திற்கு ஒரு முறை உடல் நிறையைப் பாருங்கள்.

## சின்னக் குறிப்புக்கள்

- வேகவைத்த உருளைக் கிழங்கின் சாற்றைக் கைகளில் தடவி ஐந்து நிமிடம் கழித்து தண்ணீரில் கை கழுவி வந்தால் கைகள் பஞ்சுபோல் மிருதுவாக இருக்கும்.
- கூந்தல் வறண்டு காய்ந்திருந்தால் தண்ணீரைக் கொதிக்க வைத்து சிறிது நேரம் ஆவியில் காட்டுங்கள். பிறகு ஒலிவ் எண்ணெயை இளஞ்சூடாக்கி மெதுவாகத் தலையில் தேய்த்து மசாஜ் செய்து வந்தால் கூந்தல் வறட்சி போய் பளபளப்பாகவும் மாறும்.
- வெள்ளரிக்காயை நன்றாக மசிய அரைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் ஊறியபின் குளிர்ந்த தண்ணீர் கொண்டு முகத்தைக் கழுவி வந்தால் முகம் புதுப் பொலிவு பெறும்.
- வெயிலில் செல்வதற்கு முன் அரை தேக்கரண்டி சந்தனம், அரைத் தேக்கரண்டி கசகசா பொடி செய்து நீரில் குழைத்து முகத்தில் தேய்த்து பத்து நிமிடங்கள் கழித்து கழுவிய பின் வெயிலில் சென்றால் முகம் வாடாது- கருகாது.
- வேப்பிலையை வேக வைத்து நீரில் தலை முழுகி வந்தால் தலைமுடி கொட்டுவது நின்று விடும்.
- சோறு வடித்த கஞ்சியை உடம்பில் தேய்த்துக் குளித்து வந்தால் உடம்பின் பளபளப்பு அதிகமாகும்.
- வாரம் ஒரு நாள் வாழைத்தண்டின் சாற்றைக் குடித்து வந்தால் உடல்பருமன் குறையும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GA

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-07-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள்

**95**

**புவனா**

டயானா துடித்துக் கொண்டிருந்தபோது காரின் 'ஹோண்' சத்தமும் நெடுநேரமாக கேட்ட வண்ணம் இருந்தது.

சாரதியான ஹென்றி போலின் உடம்பு காரின் 'ஸ்டிரிங்' மேல் அழுத்திக் கொண்டு கிடந்தது.

அதனால் ஹென்றிபோலை அங்கிருந்து அகற்றும்வரை 'ஹோண்' சத்தம் அடங்கவில்லை. அபாய ஒலி போல ஒலித்துக்கொண்டே இருந்தது.

காரில் இருந்து புகையும் வெளி வந்து கொண்டிருந்தது.

இதற்கிடையே படப்பிடிப்பாளர்கள் சிலர் தாவியோடிச் சென்று விபத்தை படம்பிடிப்பதில் ஈடுபட்டனர். காரினுள்ளே இருந்தவர்களை மீட்பதற்கு என்று யாரும் முன்வரவில்லை.

றாற் என்னும் படப்பிடிப்பாளர் டயானாவின் அருகே சென்றார். இவர் டயானாவை அச்சுறுத்திய படப்பிடிப்பாளர். டோடியுடன் காரில் செல்லும்போது இவரைக் கண்டுதான் டயானா முன்பு பயந்திருந்தார்.

குற்றுயிராகக் கிடந்த டயானாவை றாற் தொட்டதை ஏனைய படப்பிடிப்பாளர்கள் கண்டுள்ளனர்.

ஆனால் றாற் என்ன செய்தார்? என்று அவர்களுக்குத் தெரியவில்லை. பின்னர் பொலிசார் றாற்றை விசாரித்தபோது, முதலுதவி செய்ய முடியுமா? என்று பார்க்கவே டயானாவின் நாடித்துடிப்பை அறிய முயன்றதாக றாற் கூறியிருந்தார்.

றாற் பிரிட்டிஷ் அரச குடும்பத்து கையாளா? டயானாவை கொல்லும் சதிக்கு நியமிக்கப்பட்ட ஆளா? என்றெல்லாம் சந்தேகங்கள் எழுந்தபோதும், போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

### வழிமறிப்பு

விபத்து நடைபெற்ற செய்தி அறிந்ததும் பொலிஸ் படை விரைந்து வந்தது.

விபத்து நடைபெற்ற இடத்தில் குழுமியிருந்த படப்பிடிப்பாளர்களை விலக்கிக் கொண்டுதான் பொலிசார் காரை அண்மிக்க வேண்டியிருந்தது.



விபத்து நடந்த பகுதி. இந்த தூணில்தான் கார் மோதியது.

பொலிசார் வருவது தெரிந்தும்கூட வழியை மறித்தபடி படப்பிடிப்பாளர்கள் பலர் படம் எடுத்துக் கொண்டிருந்தனர்.

விபத்துக்குள்ளானது இளவரசி டயானா என்பது பொலிசாருக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

உலகமே அதிரப்போகும் விபத்து ஒன்றை சாதாரண விபத்தாகக் கருதிக் கொண்டுதான் பொலிசார் வந்திறங்கி, நெருங்கினார்கள்.

நெருங்கும்போதுதான் குற்றுயிராய்க் கிடப்பது டயானா என்பதை தெரிந்து கொண்டனர்.

உலகப் புகழ்மிக்க இளவரசி கார் ஒன்றுக்குள் கிடந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பார் என்று அவர்கள் நினைத்தே பார்க்கவில்லை.

அதிர்ச்சியில் உறைந்த பொலிசார் தம்மை சுதாகரித்துக்கொண்டு மருத்துவர்களுக்கு துரித தகவல் அனுப்பினார்கள்.

மருத்துவர்குழு விரைந்து வந்தது. படப்பிடிப்பாளர்களை பொலிசார் தூர விரட்டியிருந்தனர். ஹென்றி போலும், டோடியும் இறந்து விட்டனர் என்பதை அந்த இடத்திலேயே டாக்டர்கள் உறுதிப்படுத்திவிட்டனர்.

அவர்கள் தமது முடிவை அறிவிக்கும்போது அதிகாலை 1.45 மணி.

சிதைந்து கிடந்த வண்டிக்குள் குற்றுயிராகக் கிடந்த டயானாவை மீட்டெடுக்க சிறிதுநேரம் பிடித்தது. றீவ் ஜோன்ஸ்சும் மீட்கப்பட்டார்.



விபதது நடைபெறற இடததிலிருந்து பெரிய மருத்துவமனை 6.4 கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. அந்த மருத்துவமனையின் பெயர்: பிட்டி சலபெட்றியறி.

அங்கு முன்கூட்டியே பறந்த தகவலை அடுத்து. இளவரசியை எப்பாடுபட்டாவது காப்பாற்றும் துடிப்போடு மருத்துவ நிபுணர்கள் விரைந்து வந்து காத்திருந்தனர்.

சத்திர சிகிச்சைக்கான ஏற்பாடுகள் துரித கதியில் செய்யப்பட்டிருந்தன.

இளவரசியை காப்பாற்றுவதை சவாலாக எடுத்துக்கொண்டு பணியாற்ற மருத்துவ நிபுணர்கள் தயாராய் இருந்தனர்.

ஆனால் டயானாவை ஏற்றிக்கொண்டு வந்த வாகனம் மித வேகத்தில்தான் வந்து சேர்ந்தது.

ஆறரை கிலோமீட்டர் தூரததைக் கடக்க 45 நிமிடங்களை விழுங்கியிருந்தது.

டயானாவின் உடல்சேத நிலையில் காரை வேகமாக ஓட்டக்கூடாது என்பதால்தான் அத்தனை மிதவேகம்.

ஃபிரான்ஸ் அரசுக்கும் தகவல் கிடைத்தது. ஃபிரான்ஸ் பிரதமர் தூக்கங் கலைந்து எழுந்து உட்கார்ந்து விட்டார். தனது உள்துறை அமைச்சரை உடனடியாக நேரில் செல்லுமாறு பணித்துவிட்டு, தடதடக்கும் இதயத்தோடு காத் திருந்தார் பிரதமர்.



டயானாவை உடனடியாக சத்திர சிகிச்சை அறைக்கு கொண்டு சென்றனர். பேராசிரியர் ஜீன் பியர்ரி பெனசெற் என்பவர் அவசர சத்திர சிகிச்சையை மேற்கொண்டார்.

### உலகெங்கும்

டயானாவைக் காப்பாற்ற கடைசி நேரப் போராட்டம் நடந்துகொண்டிருக்கையில், டயானா விபத்துக்குள்ளான செய்தியும், அவரது உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் தகவலும் செய்தி ஊடகங்களால் சுமக்கப்பட்டு உலகெங்கும் பரவிவிட்டது.

கண்ணீர் விட்டு கதறினர் பல இலட்சம் பேர். உடனடியாக பிரார்த்தனையில் ஈடுபட ஆரம்பித்தனர் மேலும் பல இலட்சம் மக்கள். தொலைக்காட்சிகள் முன்பாகவே காத்திருந்தனர் மேலும் பல இலட்சம் மக்கள்.

டயானா...டயானா... டயானா என்றே உலகெங்கும் பலகோடி உதடுகள் ஒரே சமயத்தில் உச்சரிக்கத் தொடங்கிய அந்த வேளையில்,

டயானாவின் இதயத் துடிப்பு மெல்ல, மெல்ல, அடங்கிக்கொண்டிருந்தது.

டாக்டர்கள் முகத்தில் ஏமாற்றம்!

மக்களின் இளவரசியை மரணம் தழுவத் துடித்து. வெற்றி பெற்றுவிட்டது!

'மரணமே உனக்கு ஒரு மரணம் நேராதா?' என்று உலகமே மரணத்தை சபிக்கும் அளவுக்கு மாபெரும் மரணம் அங்கு நிகழ்ந்துவிட்டது.

டயானா மரணமாகிவிட்டார் என்பதை அறிவிக்க மருத்துவமனையிடில் செய்தியாளர் மாநாடு கூட்டப்பட்டது.

## மாபெரும் மரணம்

உலகெங்கும் அந்தத் தகவலால் சோக இருள் கப்பிக்கொண்டது.

யாரும் கூறாமலேயே உலகம் கறுத்த ஆடை அணிந்துகொண்டு, கண்ணீர் வழிந்தோட நின்றது.

உலகமே ஒன்றுபட்டு அனுஷ்டித்த துக்க தினம்போல அந்த நாள் மாறியது.

டயானாமீது உலக மக்களுக்கு இத்தனை பேரபிமானமா? என்று பிரிட்டிஷ் அரச குடும்பமே பேரதிர்ச்சி கொண்டது.

டயானா... டயானா... ஓ டயானா... உலகெங்கும் சோகக் குரல்கள் விம்மலுடன் வெளிப்பட்டன.

உண்மையாகத்தானா? டயானா மறைந்து விட்டாரா? நம்பமுடியாமல் நம்பினர்!

### 24 மணிநேரத்தில்

டோடி, ஹென்றி போல் ஆகியோரின் உடல்கள் பாரிஸ் சவச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இஸ்லாமிய முறைப்படி அம்மதத்தைச் சேர்ந்தவர் இறந்துவிட்டால், 24 மணிநேரத்தில் நல்லடக்கம் செய்யப்படவேண்டும் என்பது முறை. ஆகவே டோடியின் உடலை அல் ஃபாயிட் பொறுப்பெடுத்து, தனது சொந்த ஹெலிகொப்டரில் இலண்டனுக்குக் கொண்டு சென்றார்.

டயானாவின் உடலை இலண்டனுக்கு எடுத்துச் செல்ல ஃபிரான்ஸ் அரசும், பிரிட்டன் அரசும் இணைந்து ஏற்பாடுகளைச் செய்தன.

இதேவேளை டயானா மரணம் திட்டமிட்ட கொலைதான் என்று அல் ஃபாயிட்டும் அவரது குடும்பத்தினரும் கூறினார்கள்.

அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாக சில தகவல்களும் கிடைத்தன. அவை சந்தேகங்களை ஊக்குவித்தன. மர்ம முடிச்சுக்களைப் போட்டன.

டோடியும், டயானாவும் சென்ற பென்ஸ் காரை படப்பிடிப்பாளர்கள் தவிர, வெள்ளை நிற கார் ஒன்றும் வேகமாகப் பின்தொடர்ந்து சென்றது.

அந்தக் கார் டயானா சென்ற காரை முந்திக்கொண்டு செல்ல முற்பட்ட நேரத்தில் தான் விபத்து நேர்ந்தது என்று பின்தொடர்ந்த பத்திரிகையாளர்கள் சிலர் கூறினார்கள்.

ஃபிரான்ஸ் பொலிஸ் அதனை விசாரிக்க ஆரம்பித்தது.

விபத்து எப்படி நேர்ந்திருக்கும் என்று கம்பியூட்டரில் ஊகம் உருவாகி ஆராய்ந்தனர்.

வெள்ளைக் கார் எங்கே? விசாரணையாளர்கள் தேடலை ஆரம்பித்தனர்.

அதேசமயம் படப்பிடிப்பாளர்கள் சிலரும் கைதாகினர்.

சாரதியான ஹென்றி போல் பற்றியும் புதிய தகவல்கள் சில கிடைத்தன.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**சாவகச்சேரி வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**மா. கலைமகள்,**
தாமோதரம் பிள்ளை வீதி, சாவகச்சேரி.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு ஜீ வைர மோதிரப் போட்டி

www.padippakam.com





சக்தி தனக்கே கருவியாக்கு–அது
சந்ததமும் நல்லமுதைப் பாடும்–கன்டம்
சக்தி தனக்கே கருவியாக்கு–அது
சக்தியுடன் என்றும் உறவாடும்!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# நாக்கும் பணிவும்

சீனாவில் அறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிறந்த கல்விமானாகவும், தத்துவ ஞானியாகவும் இருந்தார்.

இதனால் அவரிடம் பலர் மாணாக்கராகச் சேர்ந்து கல்வி பயின்று வந்தார்கள்.

அந்தச் சீன அறிஞர் கடும் நோய் வாய்ப்பட்டு, மரணப்படுக்கையில் இருந்தார்.

மரணப்படுக்கையில் இருக்கும் அந்த அறிஞரைச் சூழ்ந்து கொண்டிருந்தனர் அவரது மாணாக்கர்கள்.

அவர்களில் ஒரு மாணாக்கன் அறிஞரைப் பார்த்து,

"குருவே! உங்களின் தத்துவம் என்ன?" என்று கேட்டான்.

அறிஞர் வாயைத் திறந்தார். மாணாக்கர்களைப் பார்த்து,

"என்ன தெரிகிறது?" என்று கேட்டார்.

"நாக்கு" என்றார்கள் மாணாக்கர்கள்.

"ஆம். நாக்குத்தான்," என்ற அறிஞர் தனது பொக்கை வாயைக் காட்டி, "இதில் என்ன இருந்தது?" என்று கேட்டார்.

மாணாக்கர்கள் "பற்கள்" என்றார்கள்.

"ஆம்! நாம் பிறக்கும்போது பற்கள் இருப்பதில்லை. இடையிலேதான் முளைக்கின்றன அப்படித்தானே?" என்றார் அறிஞர்.

மாணாக்கர்கள் அதை ஆமோதித்து தலையசைத்தார்கள்.



"மிகவும் விறைப்போடு இருக்கும் பற்கள் நாம் இறப்பதற்கு முன்னரே விழுந்து விடுகின்றன.

ஆனால் நாக்கு அப்படியல்ல. நாம் பிறக்கும் போதும் இருக்கிறது. இறக்கும் போதும் இருக்கிறது.

விறைப்போடு இருக்கும் பல்லைப்போல் இல்லாது, மென்மையாக இருக்கிறது நாக்கு. அதற்குப் பணியும் குணம் உண்டு." என்று கூறினார்.

அந்த மாணாக்கர்களில் ஒருவன், அறிஞரைப் பார்த்து,


"குருவே! எல்லோரும் பணிவோடு இருக்க வேண்டும் என்றுதானே கூறுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஆம். பணிவு யாரிடம் இருக்கிறதோ அவன் வாழ்க்கையில் நிம்மதியோடு உறுதியோடு வாழ்வான்!" என்று கூறினார்.


# அதிசயம் – ஆனால் உண்மை!



➡ இத்தாலி நாட்டில் உள்ள திவோலி என்ற இடத்தில் இருக்கும் நீர்த்தாரையில் இருந்து 400 ஆண்டுகளாக தண்ணீர் விழுந்து கொண்டிருக்கிறது. இந்தத் தண்ணீர் விழும்போது ஜலதரங்கம் இசைப்பது போன்று ஒலிக்கும்.




⬆ போட்டோஸ்ட் டோமியாஸ் கூரனி என்ற மீனினத்தின் உடலில் இருளில் ஒளிரும் ஒளி மினுக்கும் புள்ளிகள் இருபுறமும் உள்ளன. இதனால் இந்த மீன் கடலடியில் போகும்போது ஒளி வெள்ளமாக இருக்கும்.



➡ இந்தியாவில் உள்ள டகோர் என்ற இடத்தைச் சேர்ந்த ராமதாஸ் போதானோ என்பவர் தனது உள்ளங்கையில் துளசிச் செடியை நட்டு அதை 4 அங்குல உயரம் வரை வளர்த்தார்.

# வானத்தின் நிறம்




பெரும்பாலான நேரங்களில் வானத்தைப் பார்க்கும்போது நீல நிறமாகத் தெரியும்.

இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

பூமியைச் சுற்றியிருக்கும் காற்று மண்டலத்தில் உள்ள சின்னஞ்சிறிய துணுக்குகள் ஒளியில் உள்ள நீல நிற ஒளியை மட்டும் சிதறச் செய்கின்றன. அதனால் தான் வானம் நீல மயமாகத் தெரிகின்றது.

ஆனால் பூமிக்கு வெளியே போய்ப் பார்த்தால் வானம் கறுப்பாகத்தான் தெரியும். சூரியனையும், அதன் ஒளிபட்டு நம் கண்ணுக்குத் தெரியும் நட்சத்திரங்களைத் தவிர, வானம் முழுவதும், அதாவது விண்வெளி முழுவதும் கும்மிருட்டாக கறுப்பாகத் தெரியும்.

# உப்பின் அளவு



கடல் நீரில் சோடியம் குளோரைட்டு அதிகம் இருப்பதால்தான் அது உப்புக் கரிக்கிறது.

ஒரு லீட்டர் கடல் நீரைக் காய்ச்சினால் 36 கிராம் நிறையுடைய கட்டிப் பொருள் கிடைக்கும். இதில் 26 கிராம் உப்பு. மீதமுள்ள 10 கிராமில் சல்பேட்டுக்களும், அயோடேட்டுக்களும் உள்ளன. பல காலத்திற்கு பூமியில் நீரடித்துக் கடல் சேர்த்த பூமியின் உப்புக்கள் தான் இவைகள் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அத்துடன் ஒரு இலட்சம் லீட்டர் கடல் நீரில் .005 கிராம் தங்கம் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

# பெர்முடா முக்கோணம் (BERMUDA TRIANGLE)




பெர்முடா முக்கோணம் என்றாலே அமெரிக்கர் அரண்டு போவார்கள். அவர்கள் இதை பேய் முக்கோணம் என்றும் கூறுவார்கள்.

அமெரிக்காவின் தென் கிழக்கு அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள இந்த முக்கோண கடல் பிராந்தியத்தில் இதுவரை ஏராளமான கப்பல்கள், படகுகள், மற்றும் விமானங்கள் மூழ்கியுள்ளன. இது இன்றளவும் மிகவும் புதிரானதாகவும் அமானுஷ்ய சக்தியுடையதாகவும் நம்பப்படுகிறது.

ஆனால் அறிவியல் ஆய்வாளர்களும், புவியியல் ஆராய்ச்சியாளர்களும் இந்த அமானுஷ்ய சக்தியை நம்ப மறுக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள காந்த சக்தியே கப்பல்கள், படகுகள், விமானங்கள் காணாமல் போவதற்கெல்லாம் காரணம் என்கிறார்கள் இவர்கள்.

# பறவைகளின் இடமாற்றம்



சில பறவைகள் தாம் இருக்கும் இடத்தை விட்டு பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஓரிடத்திற்குச் செல்லும். சிறிது காலத்தின் பின் மறுபடி பழைய இடத்திற்குப் போகும்.

இப்படி வருடந்தோறும் ஒரு கண்டத்தில் இருந்து இன்னொரு கண்டத்திற்குச் செல்வதை சில வகைப் பறவைகள் வழமையாக்கியுள்ளன. ஐரோப்பிய கண்டத்தில் இருந்து ஆசியக் கண்டத்திற்கு பறந்து வருகின்றன.

இதற்குக் காரணம் கடுங்குளிர். சில பறவைகளால் கடுங்குளிரைத் தாங்க முடிவதில்லை. கடுங்குளிரால் அப்பறவைகளின் உடலில் விறைப்புத் தன்மை ஏற்படுகிறது. குளிரில் இருந்து தப்பிக்கவே ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பறவைகள் ஆசியாக் கண்டத்திற்கு வருகின்றன.

கடுங்குளிரை ஏற்கும் பக்குவம் வந்ததும் அவை மறுபடி தமது நாட்டிற்குப் பறந்து சென்றுவிடும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **17.07.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **304**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 302

**பரிசுக்குரியவர்:**
செல்வி ஆர். கமலினி,
தமிழ் மஹா வித்தியாலயம், வெலிமடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஐ. அபிலாஷினி, றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை. | லெஸ்லி ரவீந்திரன் தர்ஷினி, சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| எஸ். செந்தூரன், கோகிலா வீதி, கொழும்பு–06. | ராம்குமார் நிரோசன், இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு. |
| முஹம்மத் நப்ரிஸ் ரஸா, அல்-மின்ஹாஜ் மு.வி., பெருக்குவற்றான், கொத்தாந்தீவு. | நரேன் பிரசாத், நம் மாதா பாடசாலை, நுவரெலியா. |
| து. பிரதீபன், தபாற் கந்தோர், நீர்கொழும்பு. | டி.எஸ். கிளின்டன், கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி. |
| பே. தினேஸ்குமார், கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று. | ந. கவிதா மாரிமுத்து, ஹோலிரோசரி ம.வி., பொகவந்தலாவை. |

# விடு கதைகளும் விடைகளும்

1. தள்ளாடித் தள்ளாடிப் போனாலும் தவறாமல் கரை சேர்ப்பான்.
   அவன் யார்?
2. தண்ணீருக்குள் இருப்பான். குழம்புக்குள் மணப்பான்.
   அவன் யார்?
3. ஓயாமல் இரையும்-இயந்திரம் அல்ல; உருண்டோடி வரும்- பந்தும் அல்ல.
   அது என்ன?
4. எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல்.
   அது என்ன?
5. கிணற்றுக்குள்ளே வெள்ளைக் கற்கள்.
   அது என்ன?
6. கறுப்புத் தோட்டத்தில் வெள்ளை விதைகள். அறிவுக்கு விருந்தாகும். அடுத்தநாள் புதிதாகும்.
   அது என்ன?
7. அடித்தால் விலகாது. அணைத்தால் நிற்காது.
   அது என்ன?
8. அரைச்சாண் ராணிக்குள் ஆயிரம் முத்துக்கள்.
   அது என்ன?
9. வெட்டிக் கொள்வான், ஆனாலும் ஒட்டிக் கொள்வான்.
   அவன் யார்?
10. ஓடியாடி வேலை செய்த பின் மூலையில் ஒதுங்கிக் கிடப்பான்.
    அவன் யார்?

**விடைகள்**

1. படகு 2. மீன்
3. கடல் அலை 4. விக்கல்
5. பற்கள் 6. கரும்பலகை எழுத்துக்கள்
7. தண்ணீர் 8. மாதுளம்பழம்
9. கத்தரிக்கோல் 10. துடைப்பம்.

தொகுப்பு:- ஏ.அகல்யா



# எங்கே இருக்கிறார்?

இந்தப் படத்தில் ஒருவர் ஒளிந்திருக்கிறார். கண்டுபிடிக்க முடியாதவர்கள் விடையைப் பாருங்கள்.

# விரிவாக்கம்

Police (பொலிஸ்) என்ற சொல்லின் விரிவாக்கம் Protection Of Life In Civil Establishment என்பதாகும்.

இதன் அர்த்தம் என்ன தெரியுமா? 'குடிமக்கள் அமைப்பில் வாழ்க்கையைப் பாதுகாத்தல்' என்பதாகும்.



படிப்பகம்

# கை விரல் 11

# சத்திய மின்னல்

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

**இதுவரை**

பாக்கியத்தின் மகள்
வர்ணாவின் நாய் பிங்கிக்கு
'டிஸ்டெம்பர்' எனப்படும்
கொடிய நோய் வருகிறது.
அதனை காப்பாற்றவே முடியாது
என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர்.
ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது.
இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின்
மகள் பூவிழி கொலையாகிறாள்.
பொலிஸ் விசாரிக்கிறது.

**இனி...**

வத்சலா தன்னுடைய பெரிய கண்களில் வியப்பைக் காட்டி டெலிஃபோனில் குரலை உயர்த்தி தன் அண்ணன் விஷாலிடம் கேட்டாள்.

"அண்ணா... உனக்குப் பூவிழியைத் தெரியுமா?"

"கன்சல்டன்ஸி க்யூப்பில் வேலை பார்க்கிற பூவிழியைத்தானே நீ கேட்கிறே...?"

"ஆமா..."

"இப்ப எதுக்கு அந்தப் பொண்ணைப் பத்திக் கேட்கிறே?"

"அந்தப் பொண்ணைப் பத்தி கேட்டுக்கிட்டு பொலிஸ் நம்ம வீட்டுக்கு வந்திருக்காங்க...."

"பொ...பொலிஸ்... வந்திருக்காங்களா...? எ...எதுக்கு...?"

"அண்ணா... அந்தப் பொண்ணை நேத்து ராத்திரி யாரோ கொலை பண்ணிட்டாங்களாம்..."

"அய்யய்யோ...! இது என்ன பெரிய விவகாரமா இருக்கு...! அந்தப் பூவிழி பொண்ணை எனக்கு பர்ஸனலா தெரியாது. என் ஃப்ரண்ட் கோபி மூலமாத்தான் தெரியும். அதுவும் பார்த்ததோடு சரி. பேசிப் பழகினது கிடையாது... பொலிஸ் இப்ப வீட்ல இருக்காங்களா வத்சலா?"

"ஆமா... இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வந்து உனக்காக வெயிட் பண்ணிட்டிருக்கார்... நீ உடனே புறப்பட்டு வர்றியா...?"

"இதோ வந்துட்டேயிருக்கேன்..." மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட, வத்சலாவும் ரிஸீவரை வைத்துவிட்டு இன்ஸ்பெக்டர் பலராமனிடம் வந்தாள்.

"ஸார்... ஃபோன்ல பேசினது என்னோட ப்ரதர், விஷால். நான் விஷயத்தைச் சொன்னேன். உடனே புறப்பட்டு வந்துட்டிருக்கார். ஹி ஈஸ்..ஆன்...த...வே.. எப்படியும் இருபது நிமிஷ நேரத்துக்குள்ளே வந்துடுவார்..."

"வரட்டும்... லெட் அஸ் வெயிட்...!" சொன்ன பலராமன் டீபாயின் மேல் கிடந்த அந்த ஆங்கில நாளிதழை எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டார்.

சரியாய் பதினைந்து நிமிஷம்.

வாசலில் பைக் படபடத்தது.

ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்று வாசலையே பார்த்துக்கொண்டிருந்த வத்சலா இன்ஸ்பெக்டரிடம் திரும்பினாள்.

"ஸார்... அண்ணன் வந்துட்டார்.."

போர்டிகோவில் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்த விஷாலுக்கு இருபத்தைந்து வயது இருக்கலாம். தலை கொள்ளாத கேசம். வெளிர் மஞ்சள் நிற ஷர்ட். கறுப்பு பாண்ட் சிவப்பு டை. கையில் ஒரு மல்டி பர்ப்பஸ் ஃபைல்.

இன்ஸ்பெக்டரை நெருங்கினான். பயத்திலும் பதற்றத்திலும் முகம் வியர்த்து இருந்தது. நாற்காலி நுனியில் உட்கார்ந்தான்.

"ஸார்... நான் விஷால்... டெலிஃபோன்ல என்னோட சிஸ்டர் வத்சலா விபரம் சொன்னா ஸார்! பூவிழி மர்டரான விஷயம் எனக்குப் பெரிய அதிர்ச்சியா இருக்கு. நேத்திக்குக் கூட என்னோட ஃப்ரண்ட் கோபி அவளைப் பத்தி என்கிட்ட பேசிட்டிருந்தான்..."

பலராமன் விஷாலை தன் பொலிஸ் பார்வையில் நனைத்து விட்டுக் கேட்டார்.

"போன மாதத்தில் ஒருநாள் பூவிழியும் அவளுடைய அப்பாவும் பர்னிச்சர் வாங்கறதுக்காக பஜாருக்குப் போனபோது அவங்க பயணம் செய்த ஆட்டோவை மாருதி ஜென்னில் ஃபாலோ பண்ணினது நீங்கதானே?"

"நானில்லை ஸார்..."

"பின்னே...?"

"என் ஃப்ரண்ட் கோபி...! நீங்க சொல்ற அந்த நாள் எனக்கு நல்லாவே ஞாபகம் இருக்கு ஸார். நானும் கோபியும் ஒரு ரெஸ்டாரெண்டில் சாப்பிட்டுவிட்டு வெளியே வரும்போதுதான் பூவிழியும், அவளோட அப்பாவும் ஆட்டோவில் போய்க்கிட்டு இருந்ததைப் பார்த்தோம்... உடனே கோபி என்னை ரெஸ்டாரெண்டிலேயே இருக்கச் சொல்லி விட்டு என் காரை எடுத்துக்கிட்டு அவங்க பயணம் பண்ணின ஆட்டோவை ஃபாலோ பண்ணிட்டுப் போனான்."

"பூவிழிக்கும், கோபிக்கும் என்ன உறவு...? ரெண்டு பேரும் லவ்வர்ஸா...?"

"ஸார்... கோபிக்கு பூவிழி மேல் காதல். ஆனா பூவிழி கோபியை லப் பண்றாளான்னு எனக்குத் தெரியாது. பூவிழி ஆபீஸுக்குப் போகிற சமயங்களில் அவளை ஃபாலோ பண்ணிட்டு போறது கோபிக்கு ஒரு பிடித்தமான வேலை. இப்படியெல்லாம் ஃபாலோ பண்ணக்கூடாதுன்னு, இது ரொம்பவும் இன்டீஸண்ட்ன்னு எத்தனையோ தடவை நான் சொல்லியிருக்கேன். கோபி அதைக் காதிலேயே போட்டுக்க மாட்டான்... நேத்திக்குக் காலையில் கூட பூவிழி ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போறப்ப ஃபாலோ பண்ணியிருக்கான்."

பலராமன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அந்த கோபியை இங்கே உடனே வரவழைக்க முடியுமா?"

"அவன் சொந்தத்துல டெக்ஸ்டைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸ் கடை வெச்சிருக்கான் ஸார். காலை பத்து மணியில் இருந்து சாயந்திரம் ஆறு மணி வரைக்கும் ஆர்டர்ஸ் கேன்வாஸ் பண்றதுக்காக மில் ஸுக்குப் போயிடுவான். அவனை சாயந்திரம் ஆறு மணிக்கு மேல்தான் பார்க்க முடியும்..."

"கோபியோட கடை எங்கே இருக்கு?"

"லஸ் கார்னர்ல ஸார். கடையோட பேர் ஆல்ரைட் ஸ்பேர்ஸ்."

"மிஸ்டர் விஷால்..! உங்க ஃப்ரண்ட் கோபியோட கேரக்டர் எப்படி...?"

"அவன் ரொம்ப நல்ல டைப் ஸார். உழைப்பில் முன்னுக்கு வந்தவன். பான் பீடா போடறதைத் தவிர வேற எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாதவன். கொஞ்சம் பயந்த சுபாவம் கூட. பூவிழியைக் கடந்த ஒரு வருஷ காலமா மனசுக்குள்ளேயே வெச்சு காதலிச்சிட்டிருக்கான். ஒரு லெட்டர் எழுதிக் கொடுக்கவோ, பூவிழியை நேர்ல பார்த்துத் தன் காதலை தெரிவிக்கவோ அவனுக்குத் தைரியம் வரலை ஸார்..."

"விஷால்! உங்க ஃப்ரண்ட் கோபிக்கு ஒரு விஷயம் தெரியலைன்னு நினைக்கிறேன்..."

"என்ன ஸார்...?"

"பூவிழிக்கு வீட்ல கல்யாண ஏற்பாடுகள் நடந்துட்டிருந்தது. நேத்திக்கு சாயந்திரம் அவளைப் பெண் பார்க்க யாரோ வர்றதாகவும் இருந்தது."

"கோபிக்கு அந்த விஷயம் தெரிஞ்சிருக்க வாய்ப்பில்லை ஸார்... ஏன்னா... விஷயம் அவனுக்குத் தெரிஞ்சிருந்தா நிச்சயம் எனக்கு ஃபோன் பண்ணிச் சொல்லியிருப்பான்."

"விஷால்..! கொஞ்ச நேரத்துக்கு முந்தி நீங்க ஒரு விஷயம் சொன்னீங்க... நேத்திக்குக் காலையில கூட கோபி பூவிழி ஆபீஸுக்குப் போறப்ப ஃபாலோ பண்ணிட்டு போனதா சொன்னீங்க..."

"ஆமா... ஸார்..."

"ஃபாலோ பண்ணிட்டு போகும்போது கோபி, பூவிழியோடு பேசினாரா... இல்லையா...?"

"அவன் இதுவரைக்கும் பூவிழியோடு பேசினதே இல்லை ஸார்... வெறுமனே ஃபாலோ பண்ணிட்டு போறதோட சரி..."

விஷால் சொல்லிக்கொண்டிருக்கும் போதே வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ இரைச்சலோடு வந்து சடன் பிரேக்கிட்டு நின்றது.



வத்சலா ஜன்னலில் எட்டிப் பார்த்துவிட்டு பதற்றமாய் விஷாலை ஏறிட்டாள்.

"அண்ணா..."

"என்ன வத்சலா...! ஆட்டோவில் வந்திருக்கிறது யாரு...?"

"உன் ஃப்ரண்ட் கோபி..."

★★★

டாக்டர் ரத்னவேல் நாய்க்குட்டி பிங்கியின் ஊதா நிற இரத்தத்தைக் கண்ணாடித் தகட்டில் தேய்த்து, அதில் ஒரு சொட்டு அமோனியாவைக் கலந்து சோதனைக்கு உட்படுத்திப் பார்த்தார். மைக்ராஸ் கோப்பிலிருந்து தலையை உயர்த்தியவர் தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த டாக்டர் ஈஸ்வரை வியப்பாய் பார்த்தார்.

"ஈஸ்வர்.."

"என்ன...எனி அப்நார் மல்ஸி...?"

"எஸ்..."

"என்ன... சொல்லுங்க..."

"நாயின் உடலில் இப்போ ஓடிக்கிட்டிருக்கிறது சுத்தமான இரத்தம் கிடையாது. ப்ளட்ல இம்ப்யூரிட்ரிடீஸ் நிறைய கலந்திருக்கு. ஹீமோக்ளோபின் பர்சன்டேஜ் ரொம்பவும் குறைச்சல். அதான் ப்ளட் ஊதா நிறமாயிருக்கு..."

"ப்ளட்... அதே கண்டிஷன்ல இருந்தா நாய் இந்நேரம் அன்கானஷியஸ் ஸ்டேஜில்தான் இருந்து இருக்கணும். பட்... ஆக்டிவா இருக்கே...?"

"எனக்கும் அதே ஆச்சரியம்தான்..."

"ப்ளட்ல எப்படி இவ்வளவு இம்ப்யூரிடீஸ்?"

"டிஸ்டெம்பர் கண்ட நாய் இது. அந்த நோயிலிருந்து நாய் மீண்டு உயிர் பிழைச்சுட்டாலும் ப்ளட் இன்னும் சரியான முறையில் ப்யூரிஃபை ஆகாமே... இருந்திருக்கு..."

டாக்டர் ரத்னவேல் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு ஈஸ்வரை ஏறிட்டார்.

"நீங்க என்னதான் சொல்லுங்க ஈஸ்வர், இந்த நாய்கிட்ட ஏதோ அமானுஷ்யத்தனம் இருக்கு. நான் ஒரு டாக்டராக இருந்துகிட்டு இப்படிச் சொல்லக்கூடாதுதான். பட்... அதுதான் உண்மை. வர்ணா வீட்ல மனித சக்திக்கும் மீறிய ஏதோ ஒரு சக்தி இருக்கு... இல்லேன்னா சாக வேண்டிய நாய் உயிர் பிழைக்காது. உடம்பில் ஊதா இரத்தம் ஓடுகிற நாய் இவ்வளவு சுறுசுறுப்பாக இருக்காது..."

"ரத்னவேல்..! நீங்க இவ்வளவு தூரம் சொல்லும்போது எனக்கும் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம் தட்டுது. வர்ணாவோட அப்பா ஃபோட்டோ உங்களைப் பார்த்து ஸ்மைல் பண்ணினதா சொன்னீங்களே...?"

"ஆமா..."

"அந்த ஃபோட்டோவை நான் பார்க்கணும்."

(தொடர்ந்து வரும்)

---

**இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் இருக்கிறது அஜ்மீர். அங்கு இருந்து ஆட்சி புரிந்த மகாராஜாக்களது அந்தப்புர கதைகள் சுவாரசியமானவை. அவைதான் இங்கு அரங்கேறுகின்றன.**

# 02 அஜ்மீர் அரண்மனை இரகசியங்கள்

அரண்மனையில் ஒரு விசேஷப் படையே இந்த விஷயத்துக்காக (மகாராஜாவின் இயற்கைக் கடன் இலாகாவைக் கவனிப்பதற்காக) இருக்கிறதாம். மொத்தம் பத்து அதிகாரிகள். சிப்பந்திகள் இருபது பேர்.

அவர்கள் தினமும் மகாராஜாவின் பள்ளி அறைக்கு வெளியே விடியற்காலை இரண்டு மணியிலிருந்து காத்திருப்பார்கள்.

மகாராஜா எந்த நேரமும் வெளியே வருவார்.

வந்ததும் அவர்கள் வெள்ளிப் பல்லக்கு போன்ற ஒன்றை அரண்மனை ஹாலில் வைப்பார்கள்.

மகாராஜா பல்லக்குக்குள் சென்று அங்குபோட்டிருக்கும் கம்மோட்டில் உட்கார்ந்து இயற்கைக் கடனைக் கழிப்பார். அது முடிந்தவுடன் சிப்பந்திகள் அந்தப் பல்லக்கை சுமந்து சென்று அரண்மனைக்கு வெளியே இரண்டு மைல் தொலைவிலுள்ள அரசரின் நந்தவனத் தோட்டத்தில் குழி தோண்டிப் புதைத்து விடுவார்கள்.

'இன்று இத்தனை மணிக்குப்புதைக்கப் பட்டது' என்று அதிகாரிகள் பேரேட்டில் பதிவு செய்வார்கள்.

காரணம் அரசர் சாப்பிடும் தங்க பஸ் பங்களிலிருந்து சிலர் தங்கத்தைச் சேகரிக்க முயன்றதால் இந்த ஏற்பாடாம்.

"சரி. மகாராணிகள் விஷயம் எப்படி?" என்று வெளிநாட்டு அமைச்சர் கேட்டாராம்.

"அவர்கள் சாதாப் பல்லக்கில் தோழிகளுடன் நந்தவனத்துக்குப் போய் முடித்துக்கொண்டு வந்துவிடுவார்கள்," என்றாராம் தளபதி.

மகாராஜா சுபோதய சிங்கிற்கு அணிவகுப்பு மரியாதை ஏற்பதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனாலும் தன் தளபதிகளுக்கு அணிவகுப்பு நடத்தும் முறை மறந்துவிடுமோ என்ற அச்சமும் எழுந்தது.

ஆகவே, முக்கியமான தளபதியைத் தினமும் விடியற்காலை மூன்று மணிக்கு அரண்மனைக்கு வரச் சொல்லி, தன் எதிரே அவரை 'லெப்ட் ரைட்' போடச் சொல்லி கவனிப்பார்.

சில நாட்களில் இரண்டு மணி நேரம் கூட அந்தத் தளபதி லெ.ப்ட் ரைட் போட்டு மகாராஜா எதிரில் அவரது அறையில் நடைபோட வேண்டியிருக்கும்.

மகாராஜா சுபோதய சிங்கிற்குப் புல் தரையில் உருளுவதென்றால் நிரம்பப் பிடிக்கும்.

அரண்மனையிலுள்ள பூங்காவின் புல்தரைகளை இதற்காகச் சரிவாக அமைக்கச் செய்திருந்தார். மேட்டிலிருந்து பள்ளத்துக்குக் கிடுகிடுவென உருண்டு செல்லுவார்.

இவற்றையெல்லாம் அரண்மனையின் மந்திரிகளும் தளபதிகளும் தூர இருந்து ரசித்துக் கைதட்ட வேண்டும் என்பது அவரது கட்டளை.

மகாராஜா உருளுவதற்கு முன்னதாக, புல் தரையில் பாம்பு கிம்பு ஒளிந்திருக்கிறதா என்பதை ஒரு குழுவினர் பரிசோதித்துச் சான்றிதழ் மகாராஜாவுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

மகாராஜா சுபோதய சிங்கிற்கு ஏராளமான அழகிகள் நாயகிகளாக இருந்தாலும் அவரது ஆசை எப்போதும் தணியாத ஒன்றாகவே இருந்தது.

தபால் தலை, தீப்பெட்டி லேபில், கீ செயின்கள் சேகரிப்பதில் நாட்டமுள்ளவர்களாகச் சிலர் இருப்பது போல மகாராஜாவுக்கு அழகிகள் சேகரிப்பதில் தீவிர வேட்கை. ஆனால் ஆசை இருந்த அளவுக்கு ஆண்மை கிடையாது.

தினமும் இரவு பத்து மணிக்கு அரண்மனையிலுள்ள சகல சிப்பந்திகளும் மந்திரிகளும் பிரார்த்தனை மண்டபத்தில் கூட வேண்டும்.

இது மகாராஜாவின் கட்டளை. மண்டபத்துக்கு வராதவர்களுக்கு முதலில் அபராதமும், தொடர்ந்து வராதிருந்தால் சவுக்கடியும் உண்டு. பெண்கள் வர வேண்டியதில்லை.

ஆண்கள் மட்டுமே கலந்து கொண்டு பிரத்தியேகமாக ஒரு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

மகாராஜாவும் அது சமயம் தவறாமல் கலந்து கொள்வார்.

என்ன விஷயத்துக்காகப் பிரார்த்தனை என்பதுதான் விசித்திரமானது.

மகாராஜாவின் அன்றைய 'இரவுக் கேளிக்கை' அவருக்கு வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று எல்லாரும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

அரண்மனை புரோகிதர் சில மந்திரங்களை உச்சாடனம் செய்ததும் பிரார்த்தனை தொடங்கும்.

'கருணைமிக்க இறைவன் மகாராஜாவுக்கு தேஜஸையும் வீர்யத்தையும் அளவில்லாமல் கொடுப்பாராக.

இன்றைய இரவு அவருக்குச் சுகமானதாக அமையட்டும்.

அவரது ஆசை நீண்ட நேரம் நீடிக்க ஆண்டவன் அருள் புரிவாராக. வற்றாத ஜீவநதியாக ஒஷதிகள் இந்திரியத் தடத்தை ஈரமுள்ளதாகச் செய்யட்டும்.

தருப்பையின் நுனியில் நெய் சொட்டிக் கொண்டே இருப்பதாக எல்லாப் பெண் பிரஜைகளும் மகாராஜாவை இச்சிக்கட்டும். இந்திரனே! வண்டி இழுக்கும் காளையின் பலத்தை மகாராஜாவுக்கு அளியும்.

மகாராஜாவுக்கு விருப்பங்கள்- குவியட்டும். நல்ல மனைவிகளுடன் இம்சையாகாமல் மகாராஜாவுக்கு நீடித்த சுக மருளுங்கள். மகாராஜாவின் இரவு தூண்டப்படட்டும்.'



இம்மாதிரி அர்த்தத்தில் அந்த மந்திரங்கள் இருக்கும்.

சில சமயம் மகாராஜா பிரார்த்தனை முடிவதற்குள் சிம்மாசனத்தில் உட்கார்ந்தபடியே தூங்கி விடுவார்.

அவர் தூங்காமலிருக்க இடை இடையே அவர் மீது சேடி ஒருத்தி பன்னீர் தெளித்துக் கொண்டிருப்பாள்.

'பன்னீர் ஊதியம்' என்று அந்தப் பெண்ணுக்கு மாதாமாதம் அதிகப்படி சம்பளம் உண்டு.

(இரகசியம் தொடரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# கோகிலா என்ன செய்துவிட்டாள்?

## ஜெயகாந்தன்

தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.

**முன்கதைச் சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. கோகிலாவின் பால்ய நண்பன் அவளை சந்திப்பதும் அனந்தராமனுக்கு பிடிக்கவில்லை. அவனது சந்தேகங்களால் கோகிலா வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

இனி....

**10**



அப்போது கீழ்வீட்டுச் சிறுமி 'அவனுக்காக வாங்கிவைத்த பாலைக் காய்ச்சிக் கொண்டு வரவா, அப்படியே கொண்டு வரவா?' என்று அம்மா கேட்டுவரச் சொன்னதாக வந்து அறிவித்தாள். தன்னால் அவர்களுக்கு ஏன் சிரமம் என்று எண்ணித் தானே காய்ச்சிக் கொள்வதாகச் சொல்லி அனுப்பினான். அந்தச் சிறுமி போனதும்-பத்துவருஷமாய்த் தன் குடும்பத்தோடு பழகி விட்ட அந்த வீட்டுக்காரத் தம்பதியினரை எண்ணி அவன் அச்சங் கொண்டான்.

பத்து வருஷங்களுக்கு முன்பு தானும் கோகிலாவும் கலியாணம் செய்துகொள்ள முடிவு செய்தவுடனேயே வீடு தேடி இந்த வீட்டிற்குள் வந்து நுழைந்ததை அவன் இப்போது நினைவு கூர்ந்தான்.

அந்த வீட்டுக்கார அம்மாள் அவர்கள் இருவரும் கணவன்-மனைவி என நினைத்துக்கொண்டு 'எத்தனை குழந்தைகள்?' என்று வினவியபோது அதைக் கேட்டு நாணிச் சிவந்த முகத்தைத் தன் முதுகுக்குப் பின் மறைத்துக் கொண்டாளே கோகிலா- அந்தச் சிருங்காரக் காட்சியையும் எண்ணிப் பார்த்தான்.

வீட்டுக்கார அம்மாளின் கேள்விக்குப் பதிலாகத் தங்கள் திருமண அழைப்பிதழ் ஒன்றை அவள் எடுத்துத் தந்தபோது அந்த வீட்டுக்கார அம்மாள் அவர்கள் இருவரையும் ஒரு சேர நிறுத்தி "இந்த வீட்டுக்கு நீங்க குடிவர அதிர்ஷ்டம் என வாய்முகூர்த்தப்படி அடுத்த வருஷமே பொறக்கப்போறது பார்த்துக்கோங்கோ" என்று ஆசீர்வதித்தாளே. அவற்றையெல்லாம் வரிசையாக எண்ணிப் பெருமூச்செறிந்தான்.

தங்களது சுகத்துக்காக ஏக்கமும் தங்களது சுமைக்காகப் பெருமூச்சும் கொண்டு தனது குடும்ப நலனில் வலிந்து ஒரு சொந்தம் பாராட்டி அக்கறை காட்டிவரும் அந்த வீட்டுக்கார அம்மாளுக்கு இந்தத் தாம்பத்யமே சீர் குலைந்துபோன விஷயம் தெரிந்தால்?...' என்று எண்ணி அதனால் அந்த அம்மாள் எவ்விதம் பாதிக்கப்படுவாள் என்பதைக் கற்பனை செய்தபோது பிறரது திருப்திக்காகவே சில துன்பங்களைத் தாங்கிக் கொள்வதில் இருக்கின்ற சுகத்தையும் நான் எவ்வளவு சுயநலமாக இழந்து நிற்கிறேன்... இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் எவ்வளவு வறண்ட நெஞ்சோடு அவள் சகலத்தையும் முடித்துக்கொண்டு போய்விட்டாள்... எப்படி முடிந்தது அவளால்? அந்த அம்மாளிடம் என்ன சொல்லி விட்டுப் போயிருப்பாள்... ஒரு வேளை எல்லாமே எல்லாருக்கும் தெரிந்திருக்கிறதோ? சீச்சீ, இருக்காது-தெரியவும் கூடாது. இந்த வீட்டுக்கு நானும் அவளும் ஒன்றாக வந்ததுபோல் ஒன்றாகவே வெளியேறிய பின்னர் தனித்தனியே தத்தம் வழியில் பிரிந்திருந்தாலும் நன்றாயிருந்திருக்குமே' என்றெல்லாம் பலவாறு எண்ணி எண்ணி மனம் குமைந்தான்.

"நானே காய்ச்சிட்டேன்! அவள் கீழே போட்டுடுவா. பிளாஸ்க் கழுவியிருக்கோ?" என்று பேசியவாறே அடுக்களை வரைக்கும் நடந்துவிட்டாள் வீட்டுக்கார அம்மாள்.

பிளாஸ்கில் பாலை ஊற்றி மூடி வைத்த பின் அறைவாசலைக் கடக்கும்போது-கட்டிலின்மேல் உட்கார்ந்திருக்கும் அனந்தராமனைப் பார்த்து வீட்டுக்கார அம்மாள் கேட்டாள்: "சாப்பிட்டேளா? சூடா ரெண்டு தோசை குடுத்து அனுப்பறேனே" என்று

சொல்லிவிட்டு அவன் பதிலை எதிர் பார்க்காமல் படி இறங்கிப்போனவள் மறுபடியும் நின்று "கோகிலா எப்போ வருவா?" என்று திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

"தெரியலை.... அவாத்துக்குப் போயிருக்கா. இஷ்டம் போல் இருந்துட்டு வரட்டுமே"- அங்கே தனியாகப் போய் இருக்க மாட்டாள் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும் அந்தப் பொய்யை மனமறிந்து சொன்னான் அனந்தராமன்.

"ஆமாம்... இருக்காதா பின்னே? இத்தனை வருஷத்துக்கப்புறம் மனசு மாறி ஒண்ணா ஆகியிருக்காளே-ஆயிரந்தான் இல்லேன்னு சொல்லிண்டாலும், இல்லேன்னு ஆயிடுமோ" என்று அவனுக்கும் கேட்கிற மாதிரித் தனக்குள்ளேயே பேசிக்கொண்டு கீழிறங்கிப் போனாள் வீட்டுக்கார அம்மாள்.

அனந்தராமன் 'கோகிலா எங்கேதான் போயிருக்கக்கூடும்?' என்று இப்போதுதான் யோசித்தான்.

நிச்சயமாக அவள் தன் பெற்றோரிடம் போயிருக்க முடியாது. ஒரு முறை தனியே சென்று விட்டு வந்தபின் தனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தை அவனிடம் வந்து அவள் ஆத்திரத்துடன் விவரித்தாளே அதை அவன் இப்போது நினைத்துப் பார்த்தான்.

அன்று அவள் தன் பெற்றோரிடம் போய்விட்டுத் திரும்பி வரும்போது தன்னால் அவள் இழந்துவிட்ட மகிழ்ச்சிகளில் இந்த ஒன்றை யாவது திரும்பப் பெற்றிருக்கிறாளே என்ற திருப்தியுடன் அவளுக்காக அனந்தராமன் காத்திருந்தான்..

'-கோகிலாவுக்கு மகிழச்சியா?'

அவள் வந்த உடனேயே அவளுக்கு அதிலும் தோல்வி தான் என்று அவளது முகத்தோற்றத்திலேயே அவனுக்குத் தெளிவாயிற்று. பத்து வருஷங்களுக்குப் பின் தன் பெற்றோரைச் சந்தித்து அனுபவத்தைப் பரவசமாகத் தன்னிடம் அவள் விவரிப்பாள் என்று அவன் எதிர்ப்பார்த்தான். அவளோ எங்கோ சென்று அவமானப்பட்டு வந்தவளைப் போல் மௌனத்துடன் அறையுள் சென்று தனிமையில் அமர்ந்திருந்தாள்.

"வாட் இஸ் ராங்க? என்ன நடந்துவிட்டது இவளுக்கு" என்று முனகியவாறு அவளது அறைக்குள் நுழைந்து விளக்கைப் பொருத்தினான் அனந்தராமன். ஏதோ விரும்பத்தகாதது நடந்துவிட்டது என்று தெரிந்தும்கூட அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவன் அவளிடம் கேட்டான், "நீ போய்விட்டு வந்தாச்சு: அவா எப்போ இங்கே வரப் போறா?"

அவள் ஒரு நிமிஷம் அவன் முகத்தைப் பார்த்தாள். பின்னர் உதடுகள் மட்டும் அசைய வேற சலனமேதும் இல்லாமல் உறுதியான குரலில் கூறினாள்: "அவா இங்கே வரமாட்டா. நானும் இனிமேல் அங்கே போகமாட்டேன்."

"ஏன்? என்ன நடந்தது? உன்னை அவா சரியா நடத்தலியா?"

"என்னைச்சரியாத்தான் நடத்தினா! ஹூம்.. தப்பு எம்மேலேதான். நான் தனியாப் போயிருக்கப்படாது."

"நீ என்ன சொல்றே? என்ன நடந்தது?"

அந்த அனுபவத்தை விவரிப்பதற்கே சலிப்புற்றவள் போல முகத்தைச் சுளுக்கிக் கொண்டு அவள் சொன்னாள்:

"ஒண்ணும் சரியா இல்லே-'என்னைச் சரியா நடத்தறதுன்னா நான் இன்னொரு வீட்டுக்குப் போயிட்டவள் வந்திருக்கேன்'ங்கிற முறையிலே நடத்தணும். அதனாலே இனிமே அந்த வீட்டுக்கு நீங்க இல்லாமப் போறதில்லைங்கற தீர்மானத்தோட வந்துட்டேன். நம்மரெண்டு பேரையும் அவா வந்து அழைச்சால் அப்புறம் போகலாம்."

அவள் சொன்ன வார்த்தைகளிலிருந்து அங்கே என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை யோசித்துப் பார்த்தான் அனந்தராமன். அதற்குள் அவள் ஒரு முறை கண் கலங்கி முந்தானையில் கண்களைத் துடைத்து விம்மியவாறே சொல்ல ஆரம்பித்தாள்.

"அம்மா மாத்திரம் தெருவாசற்படி வரைக்கும் கூடவே வந்து மெதுவாகக் கேட்டாள்: 'இனிமேயானும் அடிக்கடி வந்து போயிண்டிரு. அடுத்த தடவை எப்போ வரே'ன்னு அவ கேட்டப்போ எனக்கு எப்படிப் பத்திண்டு வந்தது தெரியுமா? அவள் கிட்டேதானே என் கோபத்தைக் காண்பிச்சுக்க முடியும்! 'வரிசை வெச்சு அழையுங்கோ. அப்போதான் வருவோம்'னு நன்னாச் சொல்லிவிட்டு வந்துட்டேன்."

"என்னத்துக்கு அப்படிச் சொன்னாய்?"

"சொன்னேன், இன்னும் என்னென்னவோ சொல்லத் தோணித்து... பின்னே என்ன? பத்து வருஷம் கழிச்சு நடந்ததையெல்லாம் மறந்து நான் போயிருக்கேன்...

(கோகிலா.... தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

**19**

அப்படி அவன் சத்தியம் செய்தபோது மின்சாரம் வந்துவிட்டது.

அவள் உதடு துடித்துக் கொண்டிருந்தது.

"சரி! சரி! வா வா!" என்று அவளை அழைத்துக்கொண்டு பாத்ரூமுக்குப் போய்த் திரும்பியவன்போல், தலைவரும் அதிபரும் இருந்த அறைக்குத் திரும்பினான் குமாரசாமி.

அந்த விநாடியில் இருந்தே, அவனை விசேஷமாகக் கவனிக்கத் தொடங்கினாள் லலிதா.

சாப்பிட்டு முடித்த பிறகு, நாராயணசாமியைக் காரில் தூக்கிப் போட்டு அனுப்பும்போது, லலிதாவும் கீழே இறங்கி வந்து வழியனுப்பினாள்.

பிறகு காதல் கடிதங்கள் பறந்தன.

நாராயணசாமியின் ரகசியங்களைத் தெரிந்த, ராஜசேகரனே இந்த ரகசியத்தையும் அறிந்தவன். அவனே கடிதம் கொண்டு செல்லும் பாங்கன் -அதாவது தோழன்.

இப்படி இவர்கள் காதலிப்பதே தங்கசாமிக்குத் தெரியாது; நாராயணசாமிக்கும் தெரியாது; நளாயினிக்கு மட்டும் தெரியும்.

தலைவர், பதவி தேடுவதில் தீவிரமாக இருந்தார். அதிபர் பணம் தேடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்.

அவர்கள் பதவி, பணம் என்று பண்பாடிக் கொண்டிருக்கும்போது, இங்கே பண்பாடு பறந்தோடிக் கொண்டிருந்தது.

நளாயினியால் தங்கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கணவனுடன் அவள் பேசுவதும் குறைவு.

தலைவர் தங்கசாமி விஜயா வேதாசலத்துக்கும் மற்ற பெண்களுக்குமே அதிக நேரம் ஒதுக்க வேண்டியிருந்ததால், இந்த விஷயத்தை அறியாமலேயே இருந்தார்.

மைத்துனி ஓடிப்போன பின்னாலேதான், அவருக்கும் நிலைமை புரிந்தது.

பெங்களூருக்குப் போன குமாரசாமியும் லலிதாவும் ஒரு நவீன ஒட்டலில் ரூம் எடுத்துக் கொண்டார்கள்.

காலையிலே காபி வரும்போது கதவைத் திறப்பார்கள், பலகாரம் வரும்போது- பிறகு சாப்பாடு வரும் போது-

அந்த நான்கு சுவர்களுக்குள்ளே முறைப்படி திருமணம் செய்த ஒரு கணவனும் மனைவியும் அனுபவிக்கின்ற வாழ்க்கையை அவர்கள் அனுபவித்தார்கள்.

செம்பிலே ஓட்டையிருந்தால், அதிலே தீர்த்தத்தை ஊற்றினால் என்ன? பாலை ஊற்றினால் என்ன? ஒழுகித்தான் போகும்!

அடிப்படைப் பழக்கமே மோசமாக இருந்தால், எந்தப் புத்திமதியும் ஏறாது; ஏறினாலும் உடனே இறங்கிவிடும்.

காம நுகர்ச்சியைக் கன்னிப் பருவத்திலேயே அறிந்து விட்ட லலிதா, 'உலகம் என்ன சொல்லும்?' என்ற கேள்வியையே தூக்கி எறிந்து விட்டாள்; அத்துடன் குமாரசாமி



கையோடு கொண்டு வந்த இலட்சக்கணக்கான ரூபாயையும் அவள் பார்த்து விட்டாள்.

ஆசை இருக்கிறது; 'வறுமையும் இல்லை' என்று தெரிந்து விட்டால், ஏற்கனவே துணிந்து விட்ட பெண்ணுக்கு மேலும் துணிச்சல் வந்துவிடாதா?

குமாரசாமியும், லலிதாவும், 'இந்தியா முழுவதிலும் உள்ள சுகவாச ஸ்தலங்களுக்குச் செல்வது' எனத் திட்டமிட்டார்கள்.

'முதலில் கல்கத்தாவுக்குப் போவது என்றும், அங்கே ஒரு காரை விலைக்கு வாங்கிக் கொண்டு அந்தக் காரிலேயே, இந்தியா முழுவதையும் சுற்றி வருவது' என்றும் முடிவு கட்டினார்கள்.

குமாரசாமி சென்னைக்கு டெலி.:.போன் போட்டு அண்ணியோடு பேசினான்.

அண்ணன் சிங்கப்பூருக்குப் போயிருந்தது அப்போதுதான் அவனுக்குத் தெரிய வந்தது.

அண்ணியிடம் காதல் கதைகளை விவரித்தான்; அண்ணி மறுக்கவில்லை.

தலைவர் வீட்டில் சம்பந்தம் ஏற்பட்டு விட்டால் பிறகு லைசென்ஸ் விஷயம் சுலபமாகி விடும் அல்லவா?

அண்ணன் ஊரில் இல்லை? அண்ணி ஒப்புக் கொண்டு விட்டாள்; இனி என்ன கவலை?

குமாரசாமி மறுநாள் பெங்களூரில் இருந்து லலிதாவோடு கல்கத்தாவுக்குப் புறப்பட்டான்.

கல்கத்தாவின் போய் இறங்கியதும் நகைக் கடையையும் சேலைக் கடையையும் முற்றுகையிட்டாள் லலிதா.

ஆடம்பர ஒட்டலில் அவர்கள் பணத்தை அள்ளி வீசிய முறையில் இருந்து, 'அவர்கள் பெரும் புள்ளிகள்' என்று கண்டு கொண்ட ஒட்டல் சிப்பந்திகள், அவர்களுடைய ஊழியர்கள் போலவே நடந்து கொண்டார்கள்.

மறுநாள் காலை பத்து மணிக்கெல்லாம், நேரே ஒரு மோட்டார் 'கம்பெனிக்கே' சென்று ஒரு காரை விலைக்கு வாங்கிக் கொண்டான் குமாரசாமி.

கல்கத்தாவில் தமிழர்களும் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

தமிழும் இந்தியும் தெரிந்த முனுசாமி என்ற டிரைவரை வேலைக்கு அமர்த்திக் கொண்டான் குமாரசாமி.

'எந்த நாட்டு இளவரசனோ?' என்று எண்ணும்படி அவன். நடந்து கொண்டான்.

நாராயணசாமிக்குப் பழக்கமான மேற்கு வங்காள செகரட்டேரியட் அதிகாரிகள் எல்லாம் அவனை வந்து பார்த்தார்கள்.

லலிதாவுக்கோ, தாள முடியாத மகிழ்ச்சி. 'கல்யாணம் என்ற சடங்கு எதற்கு?' என்றே அவள் எண்ணத் தலைப்பட்டாள்.

கல்கத்தாவிலிருந்து தன் அக்காள், நளாயினியிடம் டெலி.:.போனில் பேசினாள்.

அப்போது மட்டும் தங்களுக்குக் கல்யாணமாகி விட்டதாகவே கூறினாள்.

எல்லாம் முடிந்த பிறகு, இனி சுத்தப்படுத்துவது எப்படி என்று கருதிய நளாயினி, எப்படியாவது அந்த உறவை உறுதிப்படுத்திக் கொள்ளும்படி தங்கைக்கு யோசனை கூறினாள்.

"நீ கொஞ்சங்கூடக் கவலைப்படாதே! அவரை என் முந்தானையில் முடிந்து வைத்திருக்கிறேன்" என்றாள் லலிதா.

(அந்தரங்கம் வரும்)

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

-கண்ணதாசன்-



படிப்பகம்

www.padippakam.com

# 'ஃபிளையிங் கிஸ்'

**பை**க்குள் வைத்த கீரைக்கட்டு அடங்க மறுத்து தண்டுகளை வெளியே நீட்டுவது போல ஒவ்வொரு பஸ்ஸும் சனக்குவியலில் பிதுங்கியவண்ணம் எங்களைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. அந்த பஸ்ஹோல்ட் எங்களது பிரத்தியேக ஹொபி பிளேஸ்.

வியர்வையை ஆவியாக்கும் வெயில் எங்களை எதுவும் செய்வதில்லை. இந்த மாதிரியான இடங்களில் நிற்கும்போது-நின்றோம் இரசித்தவண்ணம். எல்லாமே ரசனைக் குரியதான பருவத்தில் எனது நண்பர்கள் மூவருடன் நான்காவதான நண்பன் சுகந்தனது வருகைக்காகக் காத்திருந்தோம்.



ஜெ. சூரியன்

சுகந்தன் ஒரு ஜாதியானவன். மூஞ்சி எப்போதும் ஸீரியஸ் நிலையிலிருக்கும். தனக்குள் என்னென்னவோ கற்பனைகள், புதுமையானதொரு நடையுடை பாவனைகளில் புதுப்புது தோரணைகள் காட்டுவான். பெண்கள் விசயத்தில் சற்று ஏடாகூடமான சிந்தனைகள். மோசமாக இருக்காது- ஆனாலும் எதையும் சட்டென்று நம்பி ஸீரியஸாகிவிடும் சுபாவம். இத்தனைக்கும் காம்பஸ்ஸில் ஒக்டோபரில் சேர இருப்பவன். அது எங்களுக்கு அதிசயம்-அவனது முகபாவனையைப் போல.

போவோர் வருவோர், கடந்து போகும் வண்டிகளென்று ஒன்று விடாமல் சைட் அடித்து ஒருத்தருக்கொருத்தர் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தது சட்டென்று நின்றுபோனது-சுகந்தன் வந்து சேர்ந்ததும். இப்போது நமது கவனமெல்லாம் அவன் பக்கம் திரும்பியது. அவனை, சீண்டுவதில், ஏற்றியிறக்குவதில், எமக்கு கிடைக்கும் சந்தோஷப் பரிமாறல்கள் அலாதியானது.

பாதையை விட்டு அரைவட்டமாக அவனைச் சுற்றி நின்று ஸீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு அவன் சொல்லிய அன்றைய தனது வெகுளித்தனமான அனுபவங்களை காதில் வாங்கி பதிலுக்கு நக்கல் பண்ணி- சிரித்துக் கொண்டிருந்தபோது, சுகந்தனது பேச்சு திடீரென்று தடைப்பட்டுப் போனது. பார்வையில் அந்த ஸீரியஸ் நிலை கொள்வது தெரிந்தது. அவனது பார்வை பதிந்து நின்ற திசையில் திரும்பினோம்.

வந்து நின்ற பஸ்வண்டிக்குள் இந்தண்டை ஜன்னலோரத்திலிருந்த அழகான பெண்ணொருத்தி இவனையே பார்த்த வண்ணம் இருந்தவள், என்ன நினைத்தாளோ தன்னுள்ளங்கையில் இதழ்களைப் பதித்து பத்திரமான பாவனையுடன் மூடி, ஜன்னல் வழியே நீட்டி, திறந்து மிக மென்மையாக, ஊதிவிட்டாள். நமக்கோ என்ன நடக்கிறது என்று புரிவதற்குள், சுகந்தன் எங்களை தள்ளிவிட்டு பாய்ந்தான். "ரைட்" சொன்ன கண்டக்டரின் குரலுக்கு பஸ் உருளத் தொடங்கியது. குரங்காகத் தாவி தொற்றினான் சுகந்தன்.

நாம் எத்தனையோ, 'ஃபிளையிங் கிஸ்கள், பார்வைகள், வார்த்தைகள், ஃபோன்கள், தாங்ஸ்கள் பரிமாறிக் கொண்டுள்ளோம். அது அன்றைய, அந்த நேரத்து சந்தோஷப் பூக்கள். அன்றே உதிர்ந்து போய் விடுவன. இவை, இந்தப் பருவத்து சில்மிஷங்கள்.' இவனோ...? சிரிப்பாக வந்தது.

அடி, வாங்குகிறானோ இல்லை பேசி சமாளிக்கிறானோ, இல்லை அவளிறங்கும்வரை இவனும் பயணம் செய்கிறானோவென ஆளாளுக்கு அபிப்பிராயங்களை சொல்லி, சொல்லி அவனது வருகையை எதிர்பார்த்திருந்தோம். சிறிது நேரத்தில் சுகந்தனது நடை தெரிந்தது தொலைவில்.

என்னவொரு அலாதியான நடை. தோளிரண்டையும் முன்னே சற்று தூக்கிய வண்ணம், கால் பாதங்களை உள்நோக்கித் திருப்பி, நடு வகிடெடுத்து படிய வாரிய முடியை அடிக்கொரு தடவை கைகளால் தடவியபடி, கழுத்தை மெல்ல அசைத்த ஒரு தனி நடை நடப்பது அவனது ஸ்டைல். அந்த ஸ்டைலை வைத்தே கண்ணுக் கெட்டிய தூரத்தில் வரும்போது அடையாளம் கண்டு கொள்வோம்.

அடுத்த ஹோல்டில் இறங்கி வருகிறானென்பது புரிந்தது தமக்குள் எழுந்த சிரிப்பையடக்கியவர்களாக அவனை நோக்கினோம். "என்னாச்சுடா?" என்றோம் ஒருமித்த குரலில் ஆவலாக.

அதே ஸீரியஸ் முகபாவனையுடன் சொன்னான்: "சே!.. மிஸ்ஸிங்கடா.. என்னவொரு அருமையான சான்ஸ்..." குரலில் சலிப்பு வழிந்தது.

"என்ன...என்னடா, சொல்லித் தொலைடா!" விசயத்தை அறிந்து கொள்ளும் ஆவல் எங்களைப் பரபரக்க வைத்தது.

எம்மை ஒரு ஹீரோ பார்வை பார்த்தான். சொன்னான்: "தாவி ஏறினேனோல்லியோ போய் நின்றேன் அவ முன்னாடி. ஒரு விநாடி திகைத்துப்போய் பார்த்தவள். கல கல வென்று சிரித்தாள். அப்புறம் கட, கட வென்று என்னென்னவோ சொன்னாள். நானும் சொன்னேன் பதிலுக்கு. வண்டிக்குள்ளிருந்தவர்களெல்லோரும் சிரிக்கத் தொடங்கினர். எனக்கொன்றும் புரியலை. ஏன்னா அவள் பேசியது சிங்களம். நான் பேசியது தமிழ்"! என்றான்.

அவ்வளவுதான் என்ன நடந்திருக்கும் என்பதையுணர்ந்த நம்மிடையே எழுந்த சிரிப்பின் ஆரவார அலைகள் அவ்விடத்தில் அலைமோதிக் கொள்ளத் தொடங்கியது. எவரைப் பற்றிய கவலையுமின்றி நாம் மனம் விட்டு-வாய்விட்டு சிரிக்க, சுகந்தன் அதே, அதே ஸீரியசான தோற்றத்தில் முகத்தை வைத்துக்கொண்டு நின்றான்.

---

**நி**ர்மலாவுக்கு எதுவும் நேர்ந்து விடக்கூடாதே என்ற கவலை [illegible]ன வெளியூர் சென்றிருந்த வேணு வீட்டினுள் நுழைந்தான்.

அவன் மனைவி நிர்மலா சிரித்து வரவேற்றதைப் பார்த்த பிறகே அவனுக்கு உயிர் வந்தது.

வேணுவுக்கும் நிர்மலாவுக்கும் சமீபத்தில்தான் திருமணமாகியிருந்தது. தனிக்குடித்தனம்.

காலையில் சென்றால் இரவு பத்து மணிக்குத்தான் வீடு திரும்புவான் வேணு. அப்படி ஒரு வேலை அவனுக்கு. தான் இல்லாத சமயத்தில் நிர்மலாவுக்கு போரடித்துவிடக் கூடாதே என்று ரேடியோ, டி.வி., டேப் ரெக்கோடர், காஸட், கதைப் புத்தகங்கள் எல்லாம் வாங்கிப் போட்டிருந்தான்.

# தனிமை இரவு



சுகந்தி

அவசரமாக வேணு வெளியூர் வரை அலுவலக வேலையாச் செல்ல வேண்டியிருந்தது. ஒருநாள் இரவு அவன் வீட்டில் இருக்க முடியாது. நிர்மலாவை அழைத்துச் செல்லலாம் என்றால் அலுவலக வேலை கெடும். அதனால் நிர்மலாவை வீட்டிலேயே விட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம். அவளிடம் நிலைமையைச் சொன்னான்.

"கவலைப்படாமல் போய் வாருங்கள்!" என்றாள் நிர்மலா அவனிடம்.

ஊரிலிருந்து நிர்மலாவுக்கு வாங்கி வந்த பொருட்களை கொடுத்தபடி- "நிர்மலா... இரவில் உனக்கு பயமாயில்லையா? நம் ஏரியாவில் திருட்டுப் பயம் அதிகமாயிற்றே?" என்று கேட்டான் வேணு.

"நீங்கள்தான் என் கூடவே இருந்தீங்களே!" என்றாள் நிர்மலா.

"என்ன சொல்றே நிர்மலா?"

"நீங்களும் நானும் பேசுவதை எல்லாம் ரெக்கோடர் செய்து வைத்திருக்கிறேன் காஸட்டில். அதை நேற்றிரவு அடிக்கடி போட்டுக்கொண்டிருந்தேன். அதைக் கேட்கிற யாருக்கும் வீட்டில் ஓர் ஆண்பிள்ளை இருப்பதாகவே தோன்றும். திருடன் யாராவது வந்திருந்தால்கூட அதைக் கேட்டு அப்படித்தான் எண்ணியிருப்பான். அது தவிர வராந்தாவில் உங்களுடைய செருப்புக்களையும் போட்டு வைத்திருந்தேன்!" என்றாள் நிர்மலா.

---

**கோ**டை வெயிலின் தகிப்பை அவளுடைய மனக்கொதிப்பு முந்திக்கொண்டிருந்தது. இந்நேரம் பாடசாலை முடிவடைந்திருக்கும். பிள்ளைகள் இருவரும் அவள் வரவுக்காக காத்து நிற்பார்கள். அவர்களுக்கு அப்பாவாகவும் அம்மாவாகவும் வாழவேண்டிய கட்டாயம் அவளுக்கிருக்கிறது.

வெளிநாட்டிலிருக்கும் கணவனிடமிருந்து ஆதரவான கடிதம் வந்து பல மாதங்களாகிவிட்டன. காதலித்துக் கை கோர்த்துக்கொண்ட வாழ்க்கை அவளுடையது. அந்த நாட்களில் எல்லாவிதமான சுகங்களும் கிடைத்துவிட்டன போலொரு பூரிப்பு. கூந்தலில் குண்டுமல்லிப்பூவைக் கோர்த்துச் சூடிக்கொள்வதுபோல, நெற்றியில் நீளவாக்கில் பொட்டு வைத்து கண்ணாடியில் பார்ப்பதுபோல, வியர்த்த மேனியை தென்றல் தொடுவதுபோல ஆனந்தமான காலங்கள். அவை இப்போது எங்கோ தொலைந்துவிட்டன.

# திருப்பம்



வி. கமலினி

அப்போதெல்லாம் அவனும் அவளும் அருகில் இருந்தார்கள். வாழ்க்கை தூரத்தில் இருந்தது. ஆனால் இப்போது அவன் அவளை மணந்துகொண்டு கணவன் என்றாகிய பின் வாழ்க்கை அருகில் வந்துவிட்டது. அவனும் அவளும் தூரத்தில் இருக்கிறார்கள். காதல் திருமணத்தில் முடிந்துவிட்டால் வெற்றியடைந்துவிட்டதென்பதற்கில்லை.

குழந்தைகளை அழைத்துக்கொண்டு வருகிறாள். அவள் மனம் முழுவதையும் மாமியாரின் குதர்க்கப்பேச்சு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அவளுடைய நடத்தை சந்தேகிக்கப்படுகிறது. செலவுகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. அவளுடைய அபிப்பிராயங்கள் நிராகரிக்கப்படுகின்றன. மொத்தத்தில் அவள் வாழவில்லை. மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாள் என்பதே உண்மை.

இயற்கை அன்றையப் பொழுதை இரவாக்கிவிட்டது. குழந்தைகள் இருவரும் அவளுக்கு இருபுறமும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஓசைப்படாமல் எழுந்து அதை எடுக்கிறாள்.

"என்னைப் புரிந்துகொள்ளாத அன்புக் கணவனே! நாளைய நாட்களில் உன் அறியாமையை எண்ணிப் புலம்புவாயா? அல்லது என் எண்ணங்களை, நினைவுகளை அழித்து விட்டு புதிய துணையைத் தேடிக்கொள்வாயா? என்னை நீயும் உன்னை நானும் நம்பித்தானே காதலித்தோம். இப்போது மட்டும் ஏன் சந்தேகிக்கிறாய்? நீ தவறுகிறாயா? எனக்கு ஒரு ஈனம் வந்தால் அதில் உனக்குப் பங்கு இல்லையா? இன்பத்தில் சேர்ந்து கொண்டு துன்பத்தில் பிரிந்து நிற்குமளவுக்கு அந்நியமாகிவிட்ட உன்னை நம்பி வாழ முடியாது. முள்ளில் விழுந்த சேலை கிழிந்தாக வேண்டும்." மன விரக்தி ஆத்திரமாகப் பரிணமிக்கிறது அவளுக்கு.

அதைத் திறந்து தலையில் கவிழ்க்கிறாள். நெற்றி வழியாக இறங்கி, கழுத்தை நனைத்து, நெஞ்சுக் குழியில் நின்றிருந்த அவள் காதலைக் கரைத்து வயிற்றில் வழிகிறது. தீக்குச்சைத் தட்டுகிறாள். 'ஆ' இருட்டைக் கிழித்துச் சிரிக்க, உறங்கிக் கொண்டிருந்த குழந்தை வீரிட்டு அழுகிறது. தீக்குச்சை வீசிவிட்டு ஓடிச் சென்று குழந்தையை வாரிக் கொள்கிறாள்.

'அம்மா, நாங்கள் என்ன பாவம் செய்தோம்? தற்கொலை செய்துகொண்டு எங்களை ஏன் அநாதைகளாக்குகிறீர்கள்?' என்று கேட்பதுபோலிருந்தது அந்த அழுகுரல். அவளுடைய மன வைரம் அந்த மழலையின் அழுகுரலில் கரைந்து கண்ணீர் சிந்தத் தொடங்கியது.

எங்கோ ஒரு கூட்டிலிருந்து சேவல் குரலொன்று கேட்கிறது. கிழக்கு வானத்தில் சூரிய வரவுக்காக சிவப்புக் கம்பளம் விரிகிறது. பொழுது புலரப் போகிறது. அவளுடைய வாழ்க்கையின் விடிவைக் காண வேண்டுமென்கின்ற ஆவல் பிறக்கிறது. அவளுள்ளே ஒரு உத்வேகம் எழுகிறது. இனி அவள் கலங்கப் போவதில்லை. நாளைய பொழுதை எதிர்கொள்ளத் துணிந்துவிட்டாள்.

---

**அ**ன்று செவ்வாய்க்கிழமை என்று எண்ணியதும் அன்னம்மாவுக்குக் கைகால் ஓடவில்லை. அவசர அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு அந்தோனியார் கோயிலுக்கு ஓடவேணும் என்று எண்ணினாள்.

ஒன்பது கிழமை தவறாமல் பிரார்த்தனை செய்து மெழுகுதிரிகொழுத்தினால் அந்தோனியாரிடம் கேட்டது கிடைக்கும் என்பது அன்னம்மாவின் அசையாத நம்பிக்கை. இத்தனைக்கும் ஆச்சாரமுள்ள இந்துக் குடும்பத்தில் பிறந்தவள் அன்னம்மா.

சண்முகத்தாரின் கடையில் மெழுகுதிரி மூன்று வாங்கிக்கொண்ட அன்னம்மா முனைத்தெருவில் உள்ள அந்தோனியார் கோயிலை நோக்கி விரைந்தாள்.

அந்தோனியாரிடம் மனமுருக வேண்டிக்கொண்டு மெழுகுதிரிகளை எரியவிட்டாள். பீடத்திலிருந்த மல்லிகைப் பூக்களில் இரண்டொன்றை எடுத்துத் தன் கொண்டையில் செருகிக்கொண்டு கோயிலுக்கு வெளியால் வந்தபோது எலிஸபெத் அக்காவைக் கண்டதும் அன்னம்மாவின் முகத்தில் மகிழ்ச்சி பரவியது.

"என்ன அந்தோனியாரை விட மாட்டீங்க போல...?" சிரித்துக் கொண்டே சொன்னாள் எலிஸபெத்.

"பின்னே என்னதான் செய்யிறது எலிஸபெத் அக்கா? ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு எண்டு ஒண்ட வச்சிற்று நான் படுறபாடு எத்தனை இடம்பார்த்தாச்சு அக்கா; ஒண்டும் அவளுக்கு அமையிறாப்பில இல்ல. அந்தளவு சீதனமும் இல்ல. நம்மட நிலைமைக்கு ஏத்தமாதிரி ஒருத்தன் கிடைச்சாப்போதும். உங்களுக்குத் தெரியுந்தானே லீலாட வயது முப்பத்தி அஞ்சு. அதுதான் அந்தோனியாரிட்ட குடிபுகை இல்லாத ஒரு நல்லவனக் காட்டச் சொல்லி மடிப்பிச்ச கேட்டுப்போறன்!" மனதில் இருந்த சுமையை எலிஸபெத்திடம் இறக்கி வைத்தாள் அன்னம்மா.

எலிஸபெத்தின் பார்வை அன்னம்மாவில் பரிதாபமாக நிலைத்தது.

"நீங்க ஒண்டுக்கும் கவலைப்படாதீங்க. கட்டாயம் அந்தோனியார் உதவி செய்வார் நானும் ஏதாவது சந்திச்சா சொல்லியனுப்புறன்." சொல்லி விட்டுக் கோயிலுக்குள் நுழைந்து விட்டாள் எலிஸபெத்.

அன்னம்மா நினைவுகளை அசைபோட்டபடி நடந்தாள்.

அன்று அன்னம்மா யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் எதிர்பார்த்தவர் வந்துவிட்டார். அவர் வேறுயாருமல்ல. லீலாவுக்காக அன்னம்மா பார்த்த மாப்பிள்ளை. ஒரு வகையில் பார்த்தால் அவளுடைய கணவனுக்குத் தூரத்து உறவு. தனியார் நிறுவனத்தில் எழுதுவினைஞன். யாரைக்கேட்டாலும் 'நல்லபெடியன்' என்று சான்றிதழ் பெற்றவன்.

"மாமி, உங்க மக லீலாவை நான் கட்டிக்க விரும்புறன். அவ விருப்பத்த தெரிஞ்சப்பிறகு அம்மா முறைப்படி பேச வருவா.." சொல்லிய வேகத்தில் அவன் மின்னலாய் மறைந்தான்.

அன்னம்மாவின் சந்தோஷம் கணப்பொழுதில் கவலையாய் மாறும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"அம்மா நீ கொண்டு வந்த மாப்பிளைய நான் கண்டிட்டன். இந்தக் கரியை யார்

# கொடிக்குக் காய் பாரம்



முடிக்கிறதாம்?"

"கறுப்பெண்டா என்ன? அவன் குணசாலிடி!" அன்னம்மா ஆத்திரப்பட்டாள்.

"குணத்த யார் பார்க்கிறது. நிறந்தான் முக்கியம். எனக்குப் பிடிக்கல்ல" முடிவாகச் சொல்லி விட்டாள் லீலா.

அன்னம்மா பெருமுச்சுவிட்டுத்தன் நடையின் வேகத்தைக் கூட்டினாள். லீலாவை நினைத்தபோது கவலை அவள் மனதை அரித்தது. மீண்டும் மற்றொரு சம்பவம் நினைவில் மிதந்தது.

"அன்னம்மா நாளைக்கு லீலாவப் பெண்பாக்க வாறாங்க, பெடியன் மாஸ்டர். நல்லகுடும்பம். எல்லாம் நான் றெடி பண்ணிற்றன். குத்தம்குற செல்ல ஒண்ணுமில்ல. சான்ஸ உட்டிடாத. ஏதோ வாறவங்கள நல்லா உபசாரம் பண்ணி அனுப்பு. மிச்சத்த நான் பாக்கிறன். எனக்கு அவசரமா ஒரு பயணம் போகக்கிடக்கு. எல்லாம் நல்லபடியா நடக்கும் சொல்லிவிட்டுப்போனவர் அன்னம்மாவின் குடும்பத்தை வெகுகாலமாகத் தெரிந்த சுருட்டுக் கடைச் சுந்தரம்.

அன்னம்மாவின் கண்களில் கலியாணக் காட்சி களை கட்டியது. எதிர்பார்த்தபடி அன்னம்மாவின் வீட்டுக்குச் சுந்தரம் ஏற்பாடு செய்த குடும்பம் வந்தது. பெண் பார்க்கும் படலம் ஒரு குறையுமின்றி நிறைவு பெற்றது. மாப்பிள்ளை வீட்டாரின் திருப்தி அவர்கள் முகத்தில் தெரிந்தது.

"எங்களுக்குப் பூரணதிருப்தி. உங்களால கொடுக்க முடிஞ்சதை உங்க பொண்ணுக்குக் குடுங்க. கட்டாயப்படுத்தி எதுவும் கேக்க மாட்டம்." அன்னம்மாவுக்கு உடல் பூராவும் சந்தோஷம் பரவியது. அவர்கள் போய் விட்டார்கள்

"அம்மோய்...! சத்த கொஞ்சம் வாவன்!"

"என்ன லீலா?" அன்னம்மா முறுவலித்தாள்.

"உனக்கு இந்த மாஸ்டரைப் புடிச்சிருக்கா?"

"ஓ நல்ல பெடியன். நல்ல குடும்பம். நாம குடுத்து வைக்கவேணும் இப்பிடி ஒரு சம்பந்தம் கிடைக்க."

"நான் குடுத்து வைக்கலியே அழகா சிவப்பா நல்ல முடியோட, ஒரு மாப்பிள கிடைக்க...!"

ரூபராணி

"நீ என்னடி சொல்ற?" அன்னம்மாவின் சந்தோஷம் சுருங்கியது. அவள் முகத்தில் கலக்கம் கோடிட்டது.

"அம்மா எனக்கு இந்த மாப்பிள வேணாம்!" அன்னம்மாவின் அடிவயிற்றில் இருந்து தீச்சுவாலை எழுந்தது. லீலாவின் கன்னத்தை நோக்கி ஓங்கிய கை சோர்ந்து ஒதுங்கியது.

"நல்லாக்கேளு அவர் மாஸ்டராயிருக்கலாம். ஆனா அவர் தலையில முடி இல்ல. முகம் பாக்கிறாப்ப பளபளக்குது மொட்டை. எனக்குப் பிடிக்கல்லம்மா!" இந்த முறையும் அன்னம்மா தோற்றுப் போனாள்.

"என்ன அன்னம்மாக்கா எதிரவாற ஆக்களத் தெரியாதபடி அப்பிடி என்ன யோசன?" கையைப் பிடித்து அசைத்துக் கேட்டாள் அன்னம்மாவைத் தெரிந்த தெய்வானை.

அன்னம்மா சிந்தனைகளை அறுத்துக் கொண்டு சிரித்தாள்; "என்ன லீலாவின்ர கலியாணச் சாப்பாடு எப்போ தரப் போறியள்?"

அன்னம்மாவின் முகத்தில் சோகம் பனி முட்டமாய்ப் பரவியது. வாய் மட்டும் "சீக்கிரம்தாறன்" என்று முணுமுணுத்தது. "அந்தோனியப்பா எனக்கொரு வழிகாட்டு. லீலாட மனச மாத்து" தனக்குள்ளே வேண்டிக் கொண்டு வீடு நோக்கி விரைகிறாள் அன்னம்மா.



படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சினிலே



அவன் நினைவாக
அவளிடம்
இருக்கும் பெரும் சொத்து
சோகம்!

வேண்டாம் என்று
அவன்
விலகிப் போன பின்னும்
அவள்
வேண்டாம் என உதறாதது
சோகம்!

காதல்
முறிந்ததென்று
அவன்தான்
பறையறைந்ததுபோல
இரைந்துவிட்டுப் போனான்!

காதல் என்ன
பட்ட மரமா
'படீர்' என்று முறிவதற்கு?

காதல் என்ன
முகம் பார்க்கும்
கண்ணாடியா
'டமார்' என்று உடைவதற்கு?

காதல் என்ன
மண்பானையா
போட்டுவிட்டதும்
பொட்டென்று சிதைவதற்கு?

நினைப்பது சுலபம்
மறப்பது கடினம்!

காதல்
கைப்படுவதைவிட
காதலை
கைவிடுவது கடினம்!

எதை மறக்க வேண்டும்
என்று நினைக்கிறோமோ
அதையே மனம்
நின்று நினைக்கிறது!

பாம்பு தன் தோலை
உரித்துப் போடலாம்!

மனிதர்கள் தம் சட்டைகளை
மாற்றிக் கொண்டிருக்கலாம்!

மனதை அடிக்கடி
மாற்றிக் கொள்ள முடியுமா?

ஒரே மனம்
ஒரே குணம்!

மாற்ற முடியாது- ஆகவே
ஆழப் பதிந்தவற்றை
மறக்கவும் முடியாது!
அழித்துவிடவும் இயலாது!

காரணத்தோடு பிரிவது
என்றால்-மனதில்
ரணம் வராது!

காரணமே இல்லாமல்
பிரிந்தானே!-அதுதான்
ஏராளமான வலியை

இதயத்தில் விதைக்கிறது!

ஊர் அறிந்த காதலுக்கு
ஒரு நொடியில் சாதலா?

தேர் போல சுற்றிவந்த
காதல் இரதத்தை
ஓர் நொடியில்
காலுடைத்து போடலாமா?

சுரம் மீட்டிய வீணையை
கரம் எடுத்து எறிந்ததேன்?

கை பறித்த பூவை
கசக்கி எறிந்து பார்க்கலாமா?

ஏன் மறந்தான்?
ஏன் எறிந்தான்?
ஏன் பிரிந்தான்
ஏன் துறந்தான்?

வினாக்களே
வெப்பமாயின!

கனாக்கள்
இல்லாத நாட்களாக
சோக உலகில்
தின உலா வந்தாள்!

குளிர் நிலாவும்
கோடைச் சூரியனாய்
கொளுத்தியது!

தென்றல் தீயானது
மஞ்சம் பகையானது
நெஞ்சம் புயலானது!

'வஞ்சகா' என்று
வாய் கூறினும்
நெஞ்சம் மட்டும்
நிந்திக்க மறுத்தது!

'துரோகி' என்று
உதடுகள் தூற்றினாலும்,
நெஞ்சம் மட்டும்
தூற்ற மறுத்தது!

வார்த்தைகளுக்கா
பஞ்சம்?
வாரியிறைக்க
மறுத்தது நெஞ்சம்!

நினைவுகளுக்கு
குஞ்சம் கட்டி,
சோகத்துக்குள்
தஞ்சம்
தேடிக் கொண்டிருந்தது
நெஞ்சம்!

'வெட்கம் கெட்ட
மனமே!
விலகிப் போனவனின்
பக்கம் ஏன் போகிறாய்?'

'உதடுகள் இகழ்ந்தாலும்
உள்ளம் சளைக்காது!

கனவுகள் கலைந்தாலும்
நனவுகள் நழுவாது!

கள்வடியும் இதழ்களில்
அவன் குடித்த நினைவு!

வெண்சங்கு கழுத்தினில்
அவன் உதட்டின் சுவடு!

மென் பட்டு மேனியெங்கும்
வன் கரம் பட்ட நினைவு!

நன் மெத்தை மீதினிலே

கண் தூங்கா உறவு!

இப்போது நினைத்தாலும்
நெஞ்சு விம்மும் நினைவு!

வாடிப்போனாள்
வதங்கிப் போனாள்
பூங்கொடி!

தேடிப்போக
நெஞ்சு சொல்லும்!
வேண்டாம் என்று
வீம்பு பிடிப்பாள்!

"சமரசம் காணாத
சரசம் உண்டோ?

ஊடல் இல்லாத
கூடல் உண்டோ?

தோள் மெலிந்த
பூங்கொடி!

தோள் கொடுப்பவனை
நாடடி!
தேள் கொட்டியதோ
உறவில்?
தேன் கொட்டட்டும்
உறவில்!"

நெஞ்சம்
புத்தி போதித்தது!

"பகைத்தது நானோ
அவர்தானே?"

"தொட்டாச் சிணுங்கியாய்
செல்லாத காரணத்திற்காய்
கோபம் கொண்டு
சொல்லாமல்போனது
அவர்தானே?"
என்றாள் அவள்!

"ஒருவர் பகைத்தால்
இன்னொருவர் நகைப்பதே
உண்மைக் காதல்!"

விட்டுக் கொடுப்பிலே
கிளை விட்டு தளைப்பதே
கெட்டிக் காதல்!

தீயவன் என்றால்
தூக்கி எறியலாம்!

உன்னவன்
தீஞ்சுவையானவன்!

உன்னையே
கொஞ்சிக் கிடந்தவன்!

கொஞ்சியவனை
கெஞ்சலாம்!
மிஞ்சியவனைத்தான்
கொஞ்சக்கூடாது!"

நெஞ்சம் அவளுக்கு
வஞ்சகம் இல்லாது
வழிகாட்டியது!

அவளுக்கோ
நெஞ்சோடு பிணக்கு!

"எனக்கு உரைக்கும்
நெஞ்சே!
உனக்கு அவரைப்
பகைக்க தெரியாதா?

துன்ப நோயில்
தாங்காது நான் துடிக்க,
தாங்கிக் கொண்டிருப்பவரை
நினைத்து-நீ
ஏங்கி என்ன பயன்?"

"இருந்துள்ளி என் பரிதல் நெஞ்சே
பரிந்துள்ளல்
பைதல் நோய் கொய்தார்கண் இல்"

அதிகாரம்: 125, குறள்: 1243

இலக்கிய நயம்

தருவது

ரஜீகன்

## ஸ்போர்ட்ஸ்

### காட்சிப் போட்டி

முன்னாள் இந்தியக் கிரிக்கெட் வீரர் எம்.பி. பாண்டோ நலநிதிக்காக காட்சி கிரிக்கெட் போட்டி இம்மாதம் 10ம் திகதி இந்தியாவில் நடைபெறுகிறது. மொஹாலியில் நடைபெறும் இப்போட்டியில் இலங்கை, இந்திய அணிகள் மோதவுள்ளன.

சியராம் கோப்பைக்காக நடத்தப்படும் இந்த ஒருநாள் போட்டி, சர்வதேச ஒருநாள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்திய அணிக்கு சச்சின் டெண்டுல்கரும், இலங்கை அணிக்கு அர்ஜுன ரணதுங்கவும் தலைமை தாங்குகிறார்கள். அணி விபரம் பின்வருமாறு:

**இலங்கை லெவன்:** அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, சனத் ஜயசூரிய, ரொமேஷ் களுவித்தாரன, ரொஷான் மகாநாம, ஹஷான் திலகரட்ன, உபுல் சந்தன, சமிந்த வாஸ், பிரமோதய விக்கிரமசிங்க, சஜீவ டி சில்வா, சஞ்சீவ ரணதுங்க, டொன் அனுரசிறி.

**இந்தியா லெவன்:** சச்சின் டெண்டுல்கர், அஜய் ஜடேஜா, ராகுல் ட்ராவிட், சௌரவ் கங்குலி, ரொபின் சிங், நயான் மொங்கியா, அஜித் அகார்கர், தேபஷிஷ் மொஹந்தி, வெங்கடேஷ் பிரசாத், சடகோபன் ரமேஷ், அமே குரேஷியா, நிகில் சோப்ரா, ஹர்பஜன் சிங்.

### முதலாவது ஆசியர்



உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இங்கிலாந்து சென்ற நியூஸிலாந்து அணி அங்கேயே இருந்து இங்கிலாந்துடன் டெஸ்ட் மற்றும் ஒரு தினப் போட்டிகளில் விளையாடுகிறது.

இங்கிலாந்துடனான முதல் டெஸ்டில் 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்து தோல்வியடைந்துள்ளது. இதன் மூலம் 5 டெஸ்ட்கள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது.

உலகக் கோப்பையில் அலெக் ஸ்டுவர்ட் தலைமையில் லீக் போட்டிகளில் மட்டும் விளையாடி, அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாமல் தோல்வி முகத்துடன் இருந்தது இங்கிலாந்து. உலகக் கோப்பைப் போட்டிகள் முடிவடைந்ததும் அணியின் தலைவராக நஸீர் ஹுஸைன் நியமிக்கப்பட்டார். நஸீர் ஹுசைன் தலைமை தாங்கிய முதல் டெஸ்டிலேயே வெற்றி.

இந்தப் புதிய தலைவரின் பூர்வீகம் தமிழ் நாட்டின் தலைநகர் சென்னை. ஜவாத் என்ற தமிழ்பேசும் முஸ்லிமுக்கும், ஷிரின் என்ற ஆங்கிலேயப் பெண்மணிக்கும் 1968ம் ஆண்டு மார்ச் 28ல் சென்னையில் பிறந்தார் நஸீர் ஹுசைன். பின்னர் இவர் தமது 5வது வயதில் இங்கிலாந்தில் குடியேறினார். நஸீர் ஹுசைன் தமது 14வது வயதில் பாடசாலை கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து படிப்படியாக முன்னேறி 15 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணியில் சேர்ந்தார்.

அதன் பின் ஏறுமுகம்தான். 16வது வயதில் எசெக்ஸ் அணியில் சேர்ந்தார். பிறகு 19 வயதுக்குட்பட்ட இங்கிலாந்து அணியில் சேர்ந்து, தனது 21வது வயதில் இங்கிலாந்தின் உயர்தர அணியில் சேர்ந்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் வரலாற்றில் முதன் முதலாக ஆசிய நாட்டவர் ஒருவர் தலைமை தாங்குவது இதுவே முதன்முறை.

### பயிற்சியாளர் மாற்றம்

நடந்து முடிந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பலம்மிக்க பாகிஸ்தான் அணியை வீழ்த்தி சாதனை படைத்தது பங்களாதேஷ். பாகிஸ்தானை வென்ற பங்களாதேஷ் அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து கிடைப்பது உறுதியாகிவிட்டது.

ஆனால், "பங்களாதேஷ் அணிக்கு இன்னமும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் பக்குவம் போதாது" என்று பங்களாதேஷின் பயிற்சியாளரான மேற்கிந்தியத்தீவுகளின் முன்னாள தொடக்க ஆட்டக்காரர் கோர்டன் கிறீனிட்ஜ் கருத்துத் தெரிவித்தார்.

இவர் இப்படிக் கூறியதால், உடனடியாக பதவியிறக்கம் செய்யப்பட்டார். அத்துடன் இவரது ஒப்பந்த காலமும் முடிவடைந்து விட்டது.

எனவே பங்களாதேஷ் அணிக்குப் புதிய பயிற்சியாளராக அவுஸ்திரேலிய அல்லது தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க, பங்களாதேஷ் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

### இவர்கள்தான் அவர்கள்

'மேஜர்' சுந்தர்ராஜன் | தமிழ்வாணன்

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா! வாழ்க்கையைப் பற்றிய உமது அபிப்பிராயம் என்ன?**

பி.சந்திரதாஸ், மன்னார்.

புத்தரிடம் ஒருவன், "இறப்பிற்கு பிறகு வாழ்க்கை இருக்கிறதா?" என்று கேட்டான்.

அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைக் காட்டி "இதில் நெருப்பு வைக்க முன்னர் தீ எங்கிருந்தது?" என்று அவனிடம் கேட்டார் புத்தர். பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான் அவன்.

தீயை அணைத்த புத்தர், "இப்போது தீ எங்கே போயிற்று?" என்று கேட்டார்.

அதற்கும் அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

உடனே புத்தர் கூறினார்:

"தீ எங்கிருந்து வந்தது? எங்கே போயிற்று? என்று ஆராய்ந்து கொண்டிருப்பதைவிட, எரிகிற தீயை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசிப்பதே விவேகம். அதைப்போல் பிறப்பதற்கு முன் எங்கிருந்தோம். இறந்த பின்னர் எங்கே போகிறோம்? என்ற கேள்வி கேட்காமல் வாழும் வாழ்க்கையே சிறப்பான வாழ்க்கை!"

❊❊

**'உலகமே ஒரு நாடக மேடை' என்கிறேன் நான். ஒத்துக் கொள்கிறீரா?**

ஆர்.வேதநாயகி, மஸ்கெலியா.

அதுமட்டுமல்ல; மேலும் இதனையும் சேர்த்துக் கொள்ளும்;

"திரைப்படத்தில் நடிகர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் அவர்களால் நம்மைப் பார்க்க முடிவதில்லை. உலக நாடக மேடையில் நம்முடைய நடிப்பை ஆண்டவன் பார்க்கிறான். ஆனால் அவனை நாம் பார்க்க முடிவதில்லை!"

❊❊

**சிந்தியா! காதலிப்பதற்கு எதையும் தாங்கும் இதயம் இருந்தால் போதுமா?**

எஸ்.பாஸ்கரன்,

உதையும் தாங்கும் உடலும் வேண்டும்!

❊❊

**இன்று மிகப் பெரிய பணக்காரர்கள் யார்?**

எம்.ரிஸ்வான், மருதானை.

பலர் உள்ளனர்! மலைப்பான தகவல் ஒன்று: இந்தப் பூமியில் வாழும் ஒவ்வொருவருக்கும் தலா 20 அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாகத் தந்த பிறகும் அந்தப் பணக்காரரிடம் இரண்டரைக் கோடி அமெரிக்க டொலர்கள் மிச்சமிருக்குமாம்! யார் அவர் தெரியுமா? கம்பியூட்டர் மன்னரான பில்கேட்ஸ் தான் அந்த மாபெரும் பணக்காரர்!

❊❊

**செம்மணிப் புதைகுழி இரகசியமாகத் தோண்டப்பட்டுள்ளது என்பது மண் ஆய்வு மூலம் தெரிகிறதே. தமிழ்க் கட்சிகள் ஏன் மூச்சுக் காட்டவில்லை?**

பி.பத்மராஜன், யாழ்ப்பாணம்.

இதில் எல்லாம் மூச்சுக் காட்டினால், மக்களின் எதிர்ப்பு வீச்சு தமக்கு எதிராகவும்தான் மாறும் என்று புத்திசாலித்தனமாகச் சிந்திக்கிறார்கள்!

❊❊

**பெண்கள் என்றால் புடவை, நகை ஆசை உள்ளவர்கள் என்பது போலவே தற்காலத்திலும் வானொலி, தொலைக் காட்சிகளில் அறிவிப்பாளர்கள் அறுத்துக் கொண்டிருக்கிறார்களே? இவர்கள் மாறவே மாட்டார்களா?**

கோ.அஞ்சலா, கண்டி.

அரச வானொலி வர்த்தக சேவையில் கூட பெண்களுக்கு ஆண்களைவிட இரண்டு மடங்கு ஆசை என்று ஓர் ஆண் அறிவிப்பாளர்கூற, பெண் அறிவிப்பாளர் தடுமாறிக் கொண்டிருந்தார். அரச வானொலியிலும் பிற்போக்குத்தனமான பிரசாரம் தான் நடக்கிறது!

ஆண்களுக்கு ஆடைகள்மேல் ஆசை இல்லையா? இல்லாமலா கடைகளில் சென்று புரட்டிப் புரட்டிப் பார்க்கிறார்கள்? ஆண்கள் தங்க நகைகள் அணிவதில்லையா? அதுபோக, பெண்கள் இன்று புடவை தேடுவதோடு மட்டும் நிற்கவில்லை. தலைவிதியையே மாற்றும் காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்! தங்கள் வாழ்க்கையை தம் இனத்திற்காக தரத் தயங்காத பெண்கள் எத்தனைபேரைக் கண்டுவிட்டோம்!

வானொலி, தொலைக்காட்சிகளில் பட்டிமன்றம், விவாதம் என்ற பெயர்களில் குறிப்பிட்ட தலைப்பு தொடர்பாக போதிய விளக்கம் இன்றி மாற்றத்துக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவது தவிர்க்கப்பட வேண்டும்!

❊❊

**பாராளுமன்றத் தேர்தல் வரப்போகிறதாமே?**

ஏ.உதயராஜ், வவுனியா.

தற்போது வராது! முதலில் ஜனாதிபதித் தேர்தல்தான் வரும்!

❊❊

**சிந்தியா! விஜய்யின் 'நெஞ்சினிலே' எப்படி?**

கே.பிரசன்னா, கொழும்பு-06.

'நெஞ்சினிலே' நிற்குமளவுக்கு கதை பிரமாதமல்ல. ஆனாலும் விஜய் இரசிகர்களுக்கு பரவாயில்லாத விருந்து!

❊❊

**நல்ல மனிதர்களைக் கண்டுபிடிக்க ஒரு வழி சொல்லுங்கள்?**

ஆர்.தியாகேசன், மட்டக்களப்பு.

"சாம்பலை நீக்கினால் அனலைப் பார்க்க முடியும். மேகங்கள் கலைந்தால் சூரியனைப் பார்க்க முடியும். கேடயத்தை அகற்றினால் வேலினைப் பார்க்க முடியும். உறையை நீக்கினால் மெத்தையைப் பார்க்க முடியும். அறியாமை, அகங்காரம் இவற்றை நீக்கினால் மனிதனைப் பார்க்க முடியும்!" இது மோட்ச கீதை.

❊❊

*** அஜித்குமார் தற்போதைய படங்களில் மெருகேறி வருகிறாரே?**

செல்வி.இ.வித்யா, கொழும்பு-15.

உண்மைதான்! 'இன்னொரு கமல்' என்று தென்னிந்தியப் பத்திரிகைகள் புகழாரம் சூட்டுவதும் பொருத்தமாகத்தான் இருக்கிறது!.

❊❊

**வீரவிதானமீது நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை விட்டன. நடவடிக்கை எடுக்க அமைச்சர் உறுதி அளித்துள்ளதால் போராட்டம் கிடையாது என இ.தொ.காவும் அறிவித்தனவே. என்னாயிற்று?**

பா.சதானந்தன், நுவரெலியா..

'உனக்கும் பெப்பே, உன் மக்களுக்கும் பெப்பே' என்பார்கள். இவர்கள் ஹி ஹி ஹி என்பார்கள்! நடவடிக்கை என்ற பேச்சுக்கே இடமில்லை! இது பற்றி சந்திரிக்கா அம்மையாருக்கு எழுதப்பட்ட கடிதங்களுக்கும் பதில் இல்லையாம்!

❊❊

*** இந்தியா-பாகிஸ்தான் இடையே அமெரிக்கா சமரசம் பேச ஆர்வம் காட்டுவது ஏன்?**

எல்.பற்றிமாகரன், நீர்கொழும்பு.

இரண்டாம் உலகப் போரில் ரசியாவின் பலம் மேலோங்கியது. போரின் வெற்றிப் பெருமை ரசியாவுக்குப் போய்ச் சேர்ந்துவிடக்கூடாதே என்ற பொறாமையோடு ஜப்பான்மீது அநியாயமாக அணுக்குண்டு போட்டு தன்னால்தான் போர் ஓய்ந்தது என்று தம்பட்டம் அடிக்க வழி செய்து பழி தேடியது அமெரிக்கா!

தற்போது கார்க்கில் பகுதியில் இந்தியப் படைகள் ஊடுருவல்காரர்களை ஓரம் கட்டி வருகின்றன. ஆனால் தன்னால்தான் இந்திய-பாகிஸ்தான் மோதல் முற்றுப் பெற்றது என்னும் கூற்றுக்கு வகை செய்யப்பார்க்கிறது தந்திர அமெரிக்கா! இந்தப் பருப்பு இந்தியாவிடம் வேகவில்லை!

❊❊

**டென்னிஸ் போட்டியில் இந்திய இரட்டையர் உலக சாம்பியனாகிவிட்டனரே?**

கே.ராஜ்குமார், மட்டக்குழி.

கிரிக்கெட் தோல்வியால் ஏற்பட்ட காயத்துக்கு மருந்து!

❊❊

**சோனியா பிரதமரானால்?**

எஸ்.சிராஜ், புத்தளம்.

ராஜீவ் புகழ் பாடுவார்!

❊❊

**பணத்தை வைத்துக் கொண்டு பஞ்சப் பாட்டு பாடுவோரைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

மா.இந்திராணி, திருமலை.

"கஞ்சனுடைய பணப்பெட்டியைத் திறக்கும் சாவி மரணத்தின் கையில் இருக்கிறது" இது ஆபிரிக்க பழமொழி.

❊❊



மாளவிகா

**ரோஜாவின் இடத்தைப் பிடிப்பாரா மாளவிகா?**

இ.இஸ்மாயில், ஹெந்தளை.

படிப்படியாகப் பிடித்துக் கொண்டு தான் இருக்கிறார். பாவம் ரோஜா, 'நெஞ்சினிலே' படத்தில் அவரது கவர்ச்சி ஆட்டத்தைப் பார்த்தால் கண்ணீர் தான் வருகிறது! முன்னாள் அனுராதா, குயிலி போன்றோரின் தரத்திற்குத் தாவிவிட்டாரே!

❊❊

**'சக்தி' விளம்பரம் ஒன்றில் வண்ணானிடம் துணியைப் போட்டதாக விளம்பரத்தில் சாதி கூறப்படுகிறதே? இது முறை கேடல்லவா?**

பி.விக்ரர், வவுனியா.

ஆம்! சாதி, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு எதிராக செயற்பட வேண்டிய பொறுப்புணர்வை தாங்கள் சுட்டிக் காட்டிவிட்டீர்கள்! 'சக்தி' கவனிக்கிறதா பார்க்கலாம்! 'சலவைத் தொழிலாளி' என்ற பதமே பாவிக்கப்படவேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 08

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான் மனுக்குலத்தை வாழ்வாங்கு வாழ வைக்க அரும்பெரும் அருள் மொழிகளைக் கூறியுள்ளார். அத்தகைய வார்த்தைகளை அவர் உதிர்த்து இரண்டாயிரம் ஆண்டுகள் நிறைவுற்று மூவாயிரமாம் ஆண்டினுள் பிரவேசிக்கும் காலம் இது. அன்றும் இன்றும்- இனிமேல் வருங்காலங்களிலும் நிலையாக நின்று என்றுமுள்ள மக்களுக்கு ஒளியூட்டி வழி காட்டும் ஒளி விளக்காக அவருடைய மலைப் பிரசங்கம் நிலைத்து நிற்பதைக் காண்கிறோம்.

இயேசுபெருமான் இறையாட்சி பற்றி உதிர்த்த திருவாசகங்களை திருத்தூதரான

# மலைப் பிரசங்கம்



மத்தேயு தொகுத்துத் தந்துள்ளார்.

திருவிவிலியத்தில் இயேசுபிரானுடைய இவ்வார்த்தைகள் தரப்பட்டுள்ளன. அவற்றை வாசகர்களுக்குத் தருகிறோம்.

இயேசுபிரான் கலிலேயா நாட்டின் பல இடங்களுக்கும் சென்றார். அங்குள்ள பிரார்த்தனைக் கூடங்கள், ஆலயங்கள் மட்டுமல்லாது மக்கள் பெரும் திரளாகக் கூடும் இடங்களிலெல்லாம் மக்களுக்கு அருளுரைகளை வழங்கினார். கலிலேயா, தெக்கப்பொலி, எருசலேம், யூதேயா, யோர்தானின் அக்கரை ஆகிய இடங்களிருந்தெல்லாம் இயேசுவின், திருவாக்குகளைக் கேட்க பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டு வந்தனர்.

குழுமிநின்ற மக்களுக்கு சமதரையில் நின்று உரை நிகழ்த்த முடியாதென்பதனால் ஒரு மலையின்மீது ஏறிநின்றவாறு, சீடர்களை அழைத்து மக்களை ஒழுங்காக அமரவைக்குமாறு பணித்தார். அவ்வாறே மக்கள் அனைவரும் அமர்த்தப்பட்டபின்னர் இயேசுபிரான் தமது உரையை நிகழ்த்தினார்.

### பேறு பெறுபவர்கள்

"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது. துயருறுவோர் பேறுபெற்றோர்;ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர். நீதி நிலை நாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்.

### உப்பும் ஒளியும்

"நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும்; வேறு ஒன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள்

இராஜகுமாரன்

ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்.

### திருச்சட்டம்

"திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்; அவற்றை அழிப்பதற்கல்ல, நிறை வேற்றுவதற்கே வந்தேன். 'விண்ணும் மண்ணும் ஒழியாதவரை, திருச்சட்டத்திலுள்ள அனைத்தும் நிறைவேறாதவரை, அச்சட்டத்தின் மிகச் சிறியதோர் எழுத்தோ அல்லது எழுத்தின் ஒரு கொம்போ ஒழியாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். எனவே, இக்கட்டளைகளில் மிகச் சிறியது ஒன்றையேனும் மீறி அவ்வாறே மக்களுக்கும் கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவர் எனக்கருதப்படுவார். இவையனைத்தையும் கடைப்பிடித்துக் கற்பிக்கிறவரோ விண்ணரசில் பெரியவர் எனக் கருதப்படுவார். மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன்.

### சினங்கொள்ளுதல்

"கொலை செய்யாதே; கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்" என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: "தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்; தம் சகோதரரையோ சகோதரியையோ 'முட்டாளே' என்பவர் தலைமைச்சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார்; 'அறிவிலியே' என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிபீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்து கொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள். கடைசிக் காசுவரை திருப்பிச் செலுத்தாமல் அங்கிருந்து வெளியேற மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்.

### விபசாரம்

'விபசாரம் செய்யாதே' எனக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன்: ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று. உங்கள் வலக்கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது. உங்கள் வலக்கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதையும் உங்களிடமிருந்து வெட்டி எறிந்து விடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்திற்குச் செல்வதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது. 'தன் மனைவியை விலக்கி விடுகிறவன் எவனும் மணவிலக்குச் சான்றிதழைக் கொடுக்கட்டும்' எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: எவரும் தம் மனைவியைப் பரத்தைமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக் கூடாது. அப்படிச் செய்வோர் எவரும் அவரை விபசாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர். விலக்கப்பட்டோரை மணப்போரும் விபசாரம் செய்கின்றனர்.

### ஆணையிடுதல்

"மேலும், 'பொய்யாணை இடாதீர். ஆணையிட்டு நேர்ந்து கொண்டதை ஆண்டவருக்குச் செலுத்துவீர்' என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனென்றால் அது கடவுளின் அரியணை. மண்ணுலகின் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது அவரின் கால்மணை. எருசலேம் மேலும் வேண்டாம்; ஏனெனில் அது பேரரசரின் நகரம். உங்கள் தலைமுடியின் மேலும் ஆணையிட வேண்டாம்; ஏனெனில் உங்கள் தலைமுடி ஒன்றையேனும் வெள்ளையாக்கவோ கறுப்பாக்கவோ உங்களால் இயலாது. ஆகவே நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது.

### பழி வாங்குதல்

'கண்ணுக்குக் கண்', 'பல்லுக்கு பல்' என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டுவிடுங்கள். எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள். உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள்; கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்.

### பகைவரிடம் அன்பாயிருத்தல்

'உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக', 'பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக' எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.

"இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்யவில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையே? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 05 விடை: ☛ இயேசு பிரான்**

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி. பவானி சின்னப்பன், 48/15, பண்டாரநாயக்கடவன், அட்டன்.
2. எ.்.வ். ஜெமான், 74 1/2 ரெட்ணம் றோட், கொழும்பு-13.
3. நாகராசா கலைவாணி, 146/1 தோம்புதர் வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை.
4. எஸ்.ரி.ஸ்ரீபன், 1/8, 47ம் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06
5. தில்ருக்ஷி வேதமாணிக்கம், 90, ஹட்டன் ஹவுஸ் வீதி, ஹட்டன்.

**திருமறை [பு.ஆ] 08 வினா :- இயேசுவின் மலைப் பிரசங்கத்தைத் தொகுத்தவர் யார்?**

ஜூலை.17 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.08—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# புதைகுழிகளும் உண்மைகளும்



**த. கட்சி 01:** செம்மணிப் புதைகுழியை தோண்டிய காட்சி கண்டு, எம் கண்கள் 90 பாகையளவுக்கு விரிந்தன! எம் சிந்தை மலர்ந்தது! இது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி! பிண நாயகத்துக்கு கிடைத்த தோல்வி! செம்மணியை தோண்டுமாறு அங்கு உடல்கள் புதைகுழிகளில் தோன்றி, எலும்புகள் தோன்றா காலத்திலேயே கோரிக்கை விடுத்தவர்கள் நாங்கள் தான் என்பதை அடுத்த தேர்தல் வரையாவது மறக்காதிருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**த.க. 02:** ஆஹா என்று தோண்டப்பட்டது பார் செம்மணிப் புதைகுழிகள்! ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்குள் இத்தனை விரைவாக புதைகுழி தோண்டப்பட்டதற்கு எமது கட்சி விடுத்த இறுதி எச்சரிக்கை தான் காரணம் என்பதை கூறிவைக்க கடமைப்பட்டுள்ளோம். அரசுக்கு நமது பலம் தெரியும். அதனால் பணிந்து விட்டது. குழியைத் தோண்டுமளவுக்கு காலம் கனிந்துவிட்டது.

**த.க.03:** என்றோ ஒருநாள் உலகம் அழியும் என்று ஜோதிடர்கள் கூறுகிறார்கள். அவ்வாறு உலகம் அழிகிறதோ இல்லையோ, அதற்கு முன்னர் செம்மணி புதைகுழி தோண்டப்படும் என்பதை அறிந்துதான் பொறுமையாக இருந்தோமே அல்லாமல், போராடும் துணிவின்றி இருக்கவில்லை.

**த.கட்சி 04:** புல்லாகி, பூண்டாகி, புழுவாகி, மரமாகி, மனிதராகும் மறுபிறவியில் நம்பிக்கை உள்ளவர்கள் தமிழ் மக்கள். வெளிநாட்டு நிறுவனங்களும், புலிகளது ஊதுகுழல் பத்திரிகைகளும் அவசரப்பட்டு புதைகுழியை தோண்டவைத்தமையால் புதைகுழிக்கு போனவர்கள் எலும்புகளாக மீட்கப்பட்டுள்ளனர்.


இந்த எலும்புகளை மண்ணோடு மண்ணாகி, புல்லாகி, பூண்டாகி மறுபடி மனிதராக மாறுவதற்கு விட்டிருந்தால், கொல்லப்பட்டவர்கள் யார் என்பதை கண்டுபிடித்திருக்கலாம். அந்த நோக்கத்தோடு தான் நாம் பொறுமையாக இருந்தோம். அப்படியிருந்தும் அம்மாவுக்கு 441 கடிதமும், 4 முறை சந்திப்பும் நடத்தி செம்மணி பற்றி மணிமணியாக விளக்கியிருந்தோம். அந்த விளக்கம்தான் நான்கு ஆண்டுகளுக்குள் இத்தனை விரைவாக குழிவெட்ட வைத்துள்ளது என்ற உண்மையையும் பிரகடனப்படுத்துகிறோம்.

**த.க. 05:** புதைகுழியைத் தோண்டுமாறு காட்டமாக அறிக்கைவிட்டதுடன், உண்ணாவிரதம் எங்கு நடந்தாலும் அங்கு சென்று பின்னால் நின்று முன்னே தள்ளிவிட்டவர்கள் நாம்தான்! நாம் சொன்னதை இற்றைக்கு ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்னர் அரசு செவிமடுத்த காரணத்தால்தான் இன்று குழியைத் தோண்ட முன்வந்துள்ளது என்பதை அகில உலகமும் அறியும்.

(தமிழ்க் கட்சிகள் இவ்வாறு கூறிக்கொண்டிருக்க, ராஜபக்ஷ தலையில் அடித்துக் கொண்டு கதறுகிறார்.)

**ராஜபக்ஷ:** எத்தனையோ பாவம் செய்தேன். அத்தனைக்கும் என்னால் முடிந்த பரிகாரமாக புதைகுழிகளை காட்டித்தர சம்மதித்தேன்! அந்தப் புண்ணியத்தைக் கூட இந்தத் தமிழ்க்கட்சிகள் தட்டிப் பறிக்கின்றனவே! நான் என்ன செய்வேன்? நீதிபதி தந்த மரணதண்டனைக்கு நான் கலங்கவில்லை! ஆனால் இவர்கள் நான் செய்த நற்பலன்களுக்கு கொள்ளி வைத்து தாம் உரிமை கொண்டாடுவதைத்தான் தாங்கமுடியவில்லை! இவர்கள் கொல்வது உண்மைகளை! இவர்களும் புதைகுழிகள் வெட்டி உண்மைகளை புதைக்கிறார்கள்! ஆம்! புதைக்கிறார்கள்! புதைகுழிகள் முடிவதில்லை...

(ராஜபக்ஷ மூர்ச்சையாகிறார்)






"எனக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு!"
"'கங்காரு' ஜூலேஷன்ஸ்"

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO-11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




## ஏற்றம்

பத்திரிகைத் தொழிலில் சவால்கள் அதிகம் துணிந்து எதிர்கொண்டால் சாதனைகளும் படைக்கலாம். இங்கு பாருங்கள்:

மலைச் சிகரங்களில் ஏறுகிறார் பில் ஹாச்சர். இவர் ஒரு செய்திப் படப்பிடிப்பாளர். நூதனமான படங்களைப் பிடிப்பதற்காக தனது உயிரையே பணயமாக வைத்து சாகசங்களைப் புரிபவர்.

பாகிஸ்தானிலுள்ள 18 ஆயிரத்தி 800 அடி உயரத்திலுள்ள 'ட்றாங்கோ' சிகரத்தைத் தன் கமிராவுக்குள் நுழைப்பதற்காக ஒரு கயிற்றின் உதவியுடன் அந்தரத்தில் தொங்கியவாறு படம் பிடிக்கிறார்.

அமெரிக்காவில் வியோமிங் பல்கலைக் கழகத்தில் வரலாறு படித்துப் பட்டம் பெற்ற பில், படப்பிடிப்புத் துறையிலும் பயிற்சி பெற்றுப் பட்டம் எடுத்தவர்.

இத்தகைய சாகசங்களைப் புரியும்போது பல அபாயங்களையும் இவர் எதிர்கொண்டிருக்கிறார். ஒரு தடவை பனிமலையில் கயிற்றில் ஏறும்போது 30 இறாத்தல் எடைகொண்ட பனிக்கட்டி பெயர்ந்து வந்து பில்லின் காலைத் தாக்கியதாம். கொஞ்சம் தவறியிருந்தால் ஆளையே காலி பண்ணியிருக்கும்.

மலைச்சிகரங்கள் பற்றிய இவரது புகைப்படங்கள் பல பத்திரிகைகளில் வெளியாகி பாராட்டைப் பெற்றுள்ளன.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


## பவனி

வாத்துக்கள் எப்போதும் நீர்நிலைகளில்தான் சஞ்சரிக்கும். படத்தில் காணப்படும் இத்தாராக் குஞ்சுகளை வழி நடத்த அவற்றின் தாய் வாத்துக்கள் அந் நீர் நிலையில் இல்லை.

தோணியில் வழி காட்டிச் செல்ல வியட்நாமியப் பெண்தான் உதவுகிறார்.

தாராக்கள் எப்போதும் தன் குஞ்சுகளை நீரில் வழி நடத்திச் செல்லும். முன்னே நீந்திச் செல்லும் தாய்த் தாராவைத் தொடர்ந்தே குஞ்சுகள் செல்லும்.

இங்கு தாராத் தாயின் பணியை வியட்நாம் மாது ஏற்றிருக்கிறார். குஞ்சுகளுக்கு முன்னால் வழி நடத்தாவிட்டாலும், பின்புறமாகச் சென்று, கையிலுள்ள நெடிய கோலினால் குஞ்சுகளை வழி நடத்துகிறார்.

வியட்நாம் நீர் நிலைகளில் இந்த மாதிரியான காட்சிகளை அதிகம் காணலாம். மனிதர்களை வழி நடத்துவதைவிட இவற்றை வழி நடத்துவது சுலபம். என்ன சமர்த்தாக கட்டுப்பாடுடன் செல்கின்றன பார்த்தீர்களா!



## வியப்'பூ'

இது ஒரு செந்தாமரை மலர்தான். இருப்பினும் இம்மலரின் செயல் முறைகளை அவுஸ்திரேலியாவிலுள்ள அடிலெய்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்களான ரோகர் சேமோர் மற்றும் போல் ஸ்குலிற்ஸ்-போட்டெல் ஆகிய இருவரும் ஆராய்ந்து பல வியப்பான தகவல்களை வெளியிட்டுள்ளனர். கொஞ்சம் கிளுகிளுப்பான தகவல்கள் என்றும் கூறலாம்.

இம்மலர் தன் இனவிருத்திக்காக அழகிய மலர்களை மலரவைத்து பூச்சிகளைக் கவர்ந்திழுக்கிறது. மொட்டாக இருந்து மலரும்போது இம்மலர் 86 பாகை ஃபாரன்ஹைற் வெப்பத்தை வெளியிடுகிறது. இவ்வெப்பத்தினூடே பூச்சிகளைக் கவர்ந்திழுப்பதற்கேற்ற- அப்பூச்சிகளுக்கு மட்டும் எட்டக்கூடிய சுகந்தத்தைப் பரப்புகிறது.

பூச்சிகளுக்கு விருந்தாக தேனை வழங்குவதுடன் அப்பூச்சிகளில் மகரந்தத்தையும் இன விருத்திக்கேற்ற வகையில் பரவச் செய்கிறது.

தேன் விருந்து வழங்குவதுடன் பூச்சிகளுக்கு தெம்போடு பறப்பதற்கு ஏற்ற சூழ் நிலையையும் மலர் வழங்குகிறது.

வெப்பம் பூச்சிகளுக்குப் புதிய சக்தியை ஊட்டுகிறது. பரவும் சுகந்தமும் பூச்சிகள் மலரினுள் சிறிது நேரம் தங்கி இளைப்பாறவும் வகை செய்கிறது. இவ்வாறு புத்துணர்ச்சி பெறும் பூச்சிகள் தம் இணைகளுடன் சேர்ந்து தம்மினத்தைப் பெருக்குவதற்கேற்ற ஊக்கத்தையும் மலரே தருவதாக இந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வலை விசும் மலர்.



## பறக்கும்

இது வித்தியாசமான அணில்.

மரத்துக்கு மரம் தாவி பறந்து திரிவதே இந்த அணிலின் வழக்கம். இவை அமெரிக்காவின் ரென்னெஸ்ஸி மற்றும் வட கரோலினா மாநிலங்களில் பெருவாரியாகக் காணப்படுகின்றன.

இம்மாநிலங்களில் அகன்ற நெடுஞ் சாலைகள் குறுக்கும் நெடுக்குமாக அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இச்சிறு பிராணிகளின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டு விட்டன.

சாலைகள் அமைக்கப்படுவதற்காக பெருவாரியான நெடிதுயர்ந்த மரங்கள் வெட்டப்பட்டு விட்டன. இதனால் சாலைகளின் ஒரு புறத்திலிருந்து மறுறொரு புறத்துக்கு தெருவைத் தாண்டிப்போக இப்பிராணிகளால் முடிவதில்லை.

ஒரு புறத்தேயுள்ள மரங்களில் தொடர்ந்து தாவிப் பாய்ந்து வரும் இப்பிராணிகள் வீதி குறுக்கிடுவதைக் கண்டதும் திகைப்புற்று அப்படியே நின்று விடுகின்றன.





## பரிசு

இது வீதியில் ஓடுவதற்காக தயாரானதல்ல. விழிகளில் விழுந்து வியப்பு அளிப்பதற்காக தயாரானது. பிளாஸ்ரிக்கை உருக்கி இந்த இராட்சத மோட்டார் சைக்கிளை உருவாக்கினார். பிளாஸ்ரிக் மூலம் இத்தகைய இராட்சத மோட்டார் சைக்கிள் பொம்மை தயாரானது இதுவே முதல்முறை. இதனை கடந்த ஆண்டே இவர் உருவாக்கிவிட்டார். ஆனாலும் இந்த ஆண்டுதான் கின்னஸ் நிறுவனத்தால் இந்த சாதனை ஏற்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்கிய இளம் பெண் 23 வயதான சொஃபி கார்லண்ட் ஒரு ஓவியர். 9 மாதங்கள் கஷ்டப்பட்டு இந்த சாதனையைப் படைத்தார். கம்பீரமாக நிற்கிறாரே அவர்தான்!

## 2 வது பிறந்தநாள் வாழ்த்து 23.07.99



அருந்தவப் புதல்விகள் திரேஸிகா–யோகிதா யோகலிங்கம்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த யோகலிங்கம்-நாகேஸ்வரி தம்பதியினரின் அருந்தவப் புதல்விகள் திரேஸிகா-யோகிதா தமது இரண்டாவது பிறந்தநாளை Germany, Moncheqladbach நகரிலுள்ள தமதில்லத்தில் 23.07.99 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு, அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், கேதாரன், சங்கீதன், கபிலாஷ், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவர்களை அம்பாள் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சித்தப்பா (லண்டன்)- T.P.: 0044. 793050 8561


படிப்பகம்
இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, வெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாட நாவலவில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூலை 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.